
# ஸதாயுஷ்யம்





2509
சுப்ர
SLIPR.

சிவஸ்ரீ. சதா. சுப்ரமண்ய பட்டர்

12 - 02 - 1996

# சதாயுஷ்யம்

பிரம்மஸ்ரீ சதாசிவப்பட்டர் சுப்பிரமணியப்பட்டர் தம்பதிகளின்

## சதாபிஷேகப் பெருவிழாச் சிறப்பு மலர்

மலர் ஆசிரியர் :

வித்துவான் ஸ்ரீமதி. வசந்தா வைத்தியநாதன், ஜே. பி

# “சதாயுஷ்யம்”

## மலர்க்குழு

**மலர்க்குழுத் தலைவர் :** சிவஸ்ரீ. து. சுந்தரமூர்த்திக்குருக்கள். – B.A ( LOND)

**மலர் ஆசிரியர் :** வித்வான். ஸ்ரீமதி வசந்தா வைத்தியநாதன் J. P

**மலர் ஆலோசகர்கள் :**

சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்
நகுலேஸ்வரர் ஆதீனம்
பிலம்மஸ்ரீ. நா. சோமகாந்தன்.


**குழு அங்கத்தவர்கள் :**

சிவஸ்ரீ . ஆ. சந்ரசேகரக் குருக்கள்
(நீர்வேலி வாய்க்காற்றரவை
பிள்ளையார் கோயில்)

சிவஸ்ரீ . ந. குமாரசாமிக் குருக்கள் (கந்தசாமி கோவில். கனடா.)
திரு. கே. கே. சுப்பிரமணியம் டு.மு

திரு. எஸ். தியாகராஜ (STR FILM)

திரு. பரியேறும் பெருமான்பிள்ளை
(பிரபல வர்த்தகர், கொழும்பு.)



ஸ்ரீ ஸ்ரீகண்ட சிவாசார்யர்



# சங்கராச்சார்ய சுவாமிகள் அருளிய அருள் விளக்கம்

# மங்கள மயமான தெய்வகுரு

லோகத்தின் பெரிய பாக்யம், குரு ஸ்வரூபமாக அவதாரம் ஏற்படுவதென்று ஸங்கல்பமாயிற்று. சொன்னாலும் சொல்லா விட்டாலும் அவன்தான் (பரமாத்மாதான்) குரு. உபநிஷத் பாட க்ரமத்தில் முதலில் அப்படித்தான் அவனை குரு ஸ்வரூபமாகச் சொல்லி நமஸ்காரம், சரணாகதி செய்வது. ஸகல உபதேசங்களுக்கும் உறைவிடமாயிருப்பது வேதம். அந்த வேதத்தை லோகத்துக்குத் தந்தது ப்ரம்மா. வேத மந்த்ரங்களைக் கொண்டே ஸ்ருஷ்டி பண்ணி, நாலு வாய்களாலும் நாலு வேதத்தைச் சொல்லிக் கொண்டு ப்ரம்ம வித்யையைத் தருபவர் அவர். ஆனால் அவரையும் படைத்து அவருக்கும் இந்த வேதத்தைப் பூர்வத்திலே தந்தவன் பரமாத்மா. அவனே தான் நம் புத்திக்குள்ளும் ப்ரம்மஞான ப்ரகாசத்தை உண்டாக்குபவன். 'மோக்ஷ நாட்டமுள்ள நான் அவனைச் சரணடைகிறேன்' என்று (உபநிஷத் பாராயணம்) ஆரம்பிப்பது வழக்கம்:

*யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்*
*யோ வை வேதாச்ச ப்ரஹிணோதி தஸ்மை I*
*த(க்)ம் ஹ தேவம் ஆத்ம புத்தி ப்ரகாசம்*
*முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே II*

இது 'சவேதாச்வதர உபநிஷத்'தில் வருவது. பரமாத்ம குருவைப் பரமசிவ ஸ்வரூபமாகக் காட்டுவதற்கும் இந்த உப நிஷத்திலேயே ச்ருதி ப்ரமாணம் இருக்கிறது. வித்யா மூலமான வேதத்தை ஸதா ஓதிக் கொண்டிருக்கும் ப்ரம்மா (இவரை ஹிரண்யகர்பன் என்று உபநிஷத் சொல்லும்) பிறந்ததையும் மஹர்ஷியான ருத்ரன் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த உபநிஷத்தில் ஓர் இடத்திலும், அவரேதான் அந்த ப்ரம்மாவைப் படைத்தவர் என்று இன்னோரிடத்திலும் சொல்லியிருக்கிறது. 'மஹர்ஷி' என்றதால் உபதேசம் பண்ணும் ஆசார்யன் என்று ஆகிவிடுகிறது. 'நமக்கு அவர் சுபமான புத்தியை அனுக்ரஹிக்கட்டும்' என்று இரண்டு இடத்திலும் பிரார்த்திக்கப் படுகிறது. சுபமான புத்தி-நல்லறிவு – ஆசார்யன்தானே அனுக்ரஹிப்பது? 'சுபம்' என்றாலும் 'சிவம்' என்றாலும் ஒரே அர்த்தந்தான். மங்களமானது, கல்யாணமானது என்று அர்த்தம். ப்ரம்மம் பரம கல்யாண ஸ்வரூபமானது, ஸ்மரிக்கிறவர்களுக்கு வரம் அருளுவது, மங்களமங என்றே அறியப்படுவது என்று (உபநிஷத் பாராயண) மங்கள பாட ச்லோகம் இருக்கிறது:

*அதிகல்யாண ரூபத்வாத்*
*நித்ய கல்யாண ஸம்ச்ரயாத I*
*ஸ்மர்த்ருணாம் வரதத்வாச்ச*
*ப்ரஹ்ம தந்-மங்கலம் விது: II*

அந்த சுபம், கல்யாணம், மங்களம் எல்லாமாக இருக்கப்பட்டவர் வரம் அருள்வது என்றால் என்ன வரம்? ஞானத்துக்கேயான உபநிஷத் பாட க்ரமத்தில் இந்த வரத்தைச் சொல்வதால், இது ஞானத்தைத் தவிர வேறென்னவாயிருக்க முடியும்? கொடுக்கிற ஆஸாமி சிவம். அவர் தரும் வரமான ஞானமும் சிவம் – சுபம், கல்யாணம், மங்களம். இந்தப் பரம மங்கள ஸ்வரூபமே நம்முடைய ஆசார்யாள், சிவம், கல்யாணம், சுபம் எல்லாம் அவரே. ஆதி சிவமே ஆசார்ய சிவமாக இப்படி அவதாரம் செய்தது.

'அவதாரமாகி விட்டதா? அப்படியென்றால் அப்பா, அம்மா யார்? எந்த ஊரில் அவதாரம்? ஒன்றும் சொல்லவில்லையே.'

கொஞ்சம் பொறுத்துக்கணும். பரமாத்ம ஸங்கல்பம் ஆகி விட்டாலே கார்யம் ஆன மாதிரிதான் என்ற அபிப்ராயத்திலேயே அவதாரம் ஆன மாதிரிச் சொல்லிவிட்டது! ஸங்கல்பம் செய்தபோதிலும் உடனே ஈச்வரன் தானாகவே எங்கேயோ ஓர் ஊரில், யாரோ ஓர் அப்பா அம்மாவுக்குப் பிறந்துவிடவில்லை.

ஊரில் திருட்டுப் புரட்டு இருக்கப்படாது என்ற ஸங்கல்பத்தில்தான் போலீஸ் ஸ்டேஷன் வைப்பது. ஆனாலும் நம்மகத்தில் திருட்டுப்

போகும் போது நாம் 'கம்ப்ளெய்ன்ட்' கொடுத்தால்தானே போலீஸில் கேஸ் எடுக்கிறார்கள்? அப்படி ஈச்வரனும் அவதாரம் பண்ணுவதற்கு முன் இரண்டு 'பெடிஷன்' எதிர் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார் – ஒரு பத்ததி வேண்டும் என்பதற்காக; தமக்கு மரியாதை வேண்டுமென்பதற்காக இல்லை! லோகத்திலுள்ளவர்களுக்கு மரியாதைப் பத்ததி தெரிய வேண்டுமென்பதற்காக இப்படி உட்கார்ந்திருந்தார்.

ஒரு பெடிஷன் தேவர்கள் கொடுக்க வேண்டியது. அவர்களைத்தான் லோக நிர்வாஹத்துக்கு 'இன்–சார்ஜ்' கொடுத்து இவர் அதிகாரிகளாகப் போட்டிருப்பது. அதனால் லோகத்தில் ஒருபெரிய கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, தர்மம் திருட்டுப் போகிறது என்றால் அவர்கள் வந்து விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் ஸ்வாமி கேஸ் எடுப்பார்.

இன்னோரு பெடிஷன் வரப்போகிற அப்பா அம்மா கொடுக்க வேண்டியது. பிறப்பேயில்லாத பரமேச்வரன் தாமாகப் போய் எவரோ ஒருத்தருக்குப் பிள்ளையாகப் பிறக்கலாமா? நிரம்ப யோக்யதாம்சமுள்ள தம்பதி யாராவது மனஸ் உருகிப் பிள்ளை வரம் கேட்டுப் பிரார்த்திக்க வேண்டும். அதுதான் பெடிஷன். அதை வாங்கிக் கொண்டு அங்கே போய்ப் பிறந்துவிடுவார்.

எல்லா அவதாரத்திலும் இப்படித்தான் – இரண்டு பெடிஷன்கள், ராமாவதார, க்ருஷ்ணாவதாரக் கதையாவது தெரியுமோல்லியோ? தேவர்கள் போய் பகவானிடம் முறையிட்ட பிறகு தானே அந்த அவதாரங்கள் நடந்தன? அதோடு தசரதன்பெரிசாக புத்ர காமேஷ்டி பண்ணித்தான் பகவான் அவனைத் தகப்பனாராக வரித்து அவதாரம் செய்தது. க்ருஷ்ணர் விஷயத்தில் அனேக யுகங்கள், மன்வந்தரங்களுக்கு முன் ஒரு தம்பதி (ஸுதபஸ் என்ற ப்ரஜாபதியும், அவரது பத்னியான ப்ருச்னியும்) நீண்ட காலம் தபஸ் இருந்து, பகவானே தங்களுக்கு அந்த ஜன்மத்தில் மட்டுமின்றி மூன்று தடவை புத்ரனாகப் பிறக்க வேண்டுமென்று வரம் வாங்கிக் கொண்டார்கள். அதில் மூன்றாவது தான் க்ருஷ்ணாவதாரம். அந்தத் தம்பதி அப்போது தேவகி – வஸுதேவர்களாகப் பிறந்திருந்தார்கள். இதற்கு முன் அவர்கள் அதிதியாகவும் கச்யபராவும் இருந்தபோது, பகவான் கொடுத்த வரப்படி அவர்களுக்கு இரண்டாவது தடவை பிறந்ததுதான் வாமனாவதாரம்.

இப்படியெல்லாம் மஹாவிஷ்ணு பத்ததி பார்த்து, பிகு பண்ணிக் கொண்டு அவதாரம் பண்ணியுள்ளபோது ஈச்வரன் மட்டும் சும்மா பூலோகத்துக்கு வந்து விடுவாரா?

உள்ளுக்குள்ளே அவருக்கு பிகுவும் இல்லை, ஒன்றும் இல்லை, கருணையில் மனஸ் கிடந்து இடித்துக் கொண்டு தானிருந்தது!

தக்ஷிணாமூர்த்தியாக ஆல மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்தான். அசைவதே கிடையாது. கண் பார்க்கிறதில்லை, வாய் பேசுகிறதில்லை என்று இருப்பவர்தான். ஆனாலும் அப்படிப்பட்டவருக்கு இப்போது கருணையில் மனஸ் உருகிக்கொண்டிருந்தது. மனஸும் இல்லாமலிருப்பவர்தான். மனஸ் என்பது போய், ஆத்மா மட்டுமாக இருப்பதுதான் அத்வைதம். தக்ஷிணாமூர்த்தி என்றால் அத்வைத ஸ்வரூபம் என்று அர்த்தம். ஆனாலும் கருணா நிமித்தமாகவே மனஸைப் பண்ணிப் போட்டுக் கொண்டு, 'ஐயோ, குழந்தைகள் இப்படிக் கெட்டுப் போகிறதுகளே!' என்று உருகிக் கொண்டிருந்தார். (சிரித்து) அத்வைதத்துக்கு தக்ஷிணாமூர்த்தி என்று ரூபம் மட்டும் எப்படி வரலாமாம்? அதுவும் நம்மிடம் கருணையால் தானே? அப்போ மனஸும்தான் வரட்டுமே!

'படி தாண்டாப் பத்தினி' என்று சொல்வார்கள், இந்த நாளில் அப்படிச் சொன்னால் புரியுமோ புரியாதோ? கோஷா என்று சொன்னால் புரியுமோ என்னவோ? வீட்டைவிட்டு அடி எடுத்து வைக்க மாட்டார்கள். குரல்கூட வெளியில் கேட்காமல் இருப்பார்கள். ஆனாலும் குழந்தை தெருவிலே ஓடிப்போய் ஜலதாரையின் ஒட்டில் நின்றுகொண்டு ஸந்தோஷமாக எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது; அதற்குள்ளேயே குதிக்கலாமா என்று பார்த்துக் கொண்டிருக்

கிறது என்றால் அவளுடைய கோஷாக் கட்டுப் பாடு நிற்குமா? பரபரத்துக் கொண்டு, சத்தம் போட்டுக் கொண்டு குழந்தையுடம் ஓடித்தானே வருவாள்? அப்படித்தான் தக்ஷிணாமூர்த்தியும் இருந்தார்.

அவருடைய ஸ்வபாவம் சும்மாயிருப்பது. 'சும்மாயிருப்பதே ஸுகம்', 'சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கின்ற திறம் அரிது' என்று சொல்கிற, 'பெரிய சும்மா நிலை' யிலிருப்பது.

துளிக்கூட சும்மா இருக்க முடியாமல் ஜனங்கள் படாத பாடுபட்டுக் கொண்டு, பிறத்தியாரையும் படுத்திக் கொண்டிருப்பதை அவர் பார்க்கப் பார்க்க, அவர்களுக்கும் ஒன்றும் பண்ணாமல் சும்மாயிருப்பதைச் சொல்ல வேண்டுமென்று கருணை பொங்கிக் கொண்டு வந்தது.

ஒரு மதமா, ஸித்தாந்தமா, அனுஷ்டானமா என்றில்லாமல்தான் ஸாதாரணமாக ஜனங்கள் தங்களையும் ஹிம்ஸைப் படுத்திக் கொண்டு பிறத்தியாரையும் ஹிம்ஸைப் படுத்துவது வழக்கம். ஆனால் இப்போது ஏகப்பட்ட மதங்கள், ஸித்தாந்தங்கள், அனுஷ்டானங்கள் என்று ஏற்பட்டே ஒன்றோடொன்று மோதிக் கொண்டு ஒரே ஹிம்ஸை மயமாக இருந்தது! சரீர ஹிம்ஸையில்லை; புத்திக்கு ஹிம்ஸை!

சும்மாயிருக்க முடியாமல் உடம்பாலே கார்யம் பண்ணித்தான் வீணாகப் போக வேண்டு மென்றில்லை, மனஸினாலே – அதாவது சிந்தனா சக்தியாலே – எத்தனை க்ருத்ரிம்மாகக் கார்யம் பண்ண முடியுமோ அத்தனையும் பண்ணி தினுஸு தினுஸான மதங்கள் என்று உண்டாக்கிப் பரப்பினால், சரீர ஹிம்ஸையை விடவும் ஜாஸ்தி ஹானி ஏற்படுத்தலாமென்று இந்தக் காலநிலையில் தெரிந்தது. அதனால், கார்யத்தை நிறுத்துவது மட்டுமல்லாமல் சிந்தையையும் அடக்கிச் சும்மா இருப்பதையே இந்த அவதாரத்தில் முக்கியமாகவும் சொல்ல ணுமென்று பரம கருணையால் அவர் (தக்ஷிணாமூர்த்தி) நினைத்தார். சுருக்க மாகச் சொன்னால், இந்த அவதாரம் ஜனங்களைச் சும்மாயிருக்கப் பண்ணுவதற்காகவே ஆகும்!

# அனுஷ்டானச் சிறப்பு

**ச.சுப்பிரமணிய பட்டர்**
**திருக்கேதீஸ்வரம்**

நாம் வாழும் இப்புவியிலே அசைவுள்ள (ஜங்கம்) அசைவற்ற (ஸ்தாவர) பொருள்களைக் காண்கிறோம். இவற்றுள் ஜடப்பொருள்கள் ஏராளம். அறிவுள்ள ஜீவன்கள் அதைவிட பன்மடங்கு. அறிவுள்ளனவும் ஆறு பிரிவினுள் அடங்குகின்றன. அவற்றுள் மனுஷ்யன் சிறந்த இடத்தில் வைத்து போற்றப்படுகிறான். அது ஏன்? மன்–சிந்தித்தல் என்னும் வினையடியாகப் பிறந்தது. மனுஷ்யன் என்ற பதம் – சிந்திக்கும் ஆற்றல் உள்ள ஜீவனுக்கு ஏன்று பெயர். அந்த ஆற்றலைக் கருவிலேயே பெற்றுவிட்டான் மனிதன். அந்த ஜீவன் வளர வளர சிந்தனைச் சோலையுள் புகுந்து தன் ஆற்றலை வளர்த்துக் கொள்கிறது. எனினும் ஆற்றலை வளர்ப்பதற் குரிய வரம்பை சிந்தனையாளர்கள் இறையருளால் வகுத்து தந்துள்ளார்கள். வரம்பை மீறாது தன் வாழ்க்கையை எவன் நடத்துகிறானோ அவனே இக பர வாழ்வில் சுகம் பெறுகிறான்.

"கருவில் உருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து கலைகள் பலவே தெரிந்து" – இது அருணகிரிநாதர் கூற்று. கூறும் கலைகள் யாவை? ஆடல்பாடலா? இல்லை – வாழ்க்கை நெறியென்னும் கலை. இக்கலையை தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டும். அனுஷ்டானம் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறது. அனுஷ்டானத்தைக் கைவிட்டால் ஜீவன்களும் சடப்பொருளாகிவிடும்.

அனுஷ்டானங்களை எடுத்து இயம்பும் நூல்கள் வடமொழியிலும், தமிழிலும் உள. அவை மொழியால் வேறுபடினும் பொருளால் ஒன்றுபட்டவை. வடமொழியிலுள்ள தர்ம சாஸ்திரங்கள், உபநிஷத் சிந்தனைகள், – தமிழ் மொழியிலுள்ள திருக்குறள், நிதிவெண்பா, ஆசாரக்கோவை முதலியவற்றோடு இயைபுடையவை.

அனுஷ்டானங்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

1. சமய அனுஷ்டானம்
2. குல அனுஷ்டானம்
3. சுகாதார அனுஷ்டானம்
4. சமூகநல அனுஷ்டானம்
5. செய் தொழில் அனுஷ்டானம்

வடமொழியிலுள்ள மனுதர்ம சாஸ்திரத்தை ஸ்மிருதி என்று கூறுவர் நினைவு கூர வேண்டியதனால் ஸ்மிருதி எனப்படுகிறது. அவ்வாறே தமிழ் வேதமாகிய திருக்குறளும் நினைவில் வைத்திருக்க வேண்டியது.

*"கற்க கசடற கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக."* – குறள்


கற்க வேண்டியவற்றை ஐயந்திரிபறக் கற்பதும், கற்றுத் தெரிந்து கொண்டபின், அதன்படி ஒழுகுதல் கற்றதன் பயன் என வள்ளுவர் அடித்துச் சொல்கிறார். எனவே நமக்கு வேண்டியது அறிவும், அறிந்ததை நடைமுறைப்படுத்துதலுமாகும். அறிவுக்கு நூல்கள் உதவுகின்றன, அனுட்டானத்துக்கு நம் பகுத்தறிவு உதவுகின்றது. அறிவையும் பெற்று, அனுட்டானத்துக்கு கொண்டுவரும் பொழுதுதான் நாம் மனுஷ்யனாகிறோம்.

என் அன்பிற்குரியவர்களே! நீங்கள் பல நூல்களைப் படித்திருப்பீர்கள். சில உங்கள் மனதில் குழப்பத்தை உண்டுபண்ணியும் இருக்கலாம். சிந்தனையாளர்கள் பல விதமாகவும் தர்க்கரீதியாகவும நம் அனுட்டான முறைகளை ஆராய்ந்துள்ளனர். எழுதியும் உள்ளனர்.

*பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல*
*கால வகையினானே*
– தொல்காப்பியம்

காலத்துக்கு உதவாத அனுட்டானங்கள் இவை என்று விலக்கி, புதிய வழிகளைக் கை

# சிவஸ்ரீ. சதா. சுப்ரமண்ய பட்டர்



"அர்ச்சகஸ்ய தபோ யோகாத்
ஆர்ச்சனஸ் யாதி சாயனாத்!
ஆபிருப்யாஸ்ச்ச பிம்பானாம்
சிலாபவதி தைவிகீ !!"

யாள முற்படுவோர் இருக்கிறார்கள். ஆனால் தொல்காப்பியர். வலிந்து பழையனவற்றை விலக்கும்படியோ, புதியனவற்றைப் புகுத்தும் படியோ சொல்லவில்லை. இயற்கையில் ஏற்படும் மாற்றத்தின் விளைவால் சம்பவிக்கும் மாற்றங் கள் குற்றமற்றவை என்றே கருதுகிறார்.

ஆகவே முன்னர் குறிப்பிட்ட ஐந்துவகை அனுட்டானங்களைப் பற்றி சிந்திப்போம். இவை எக்காலத்துக்கும் பொருந்துபவை. இவற்றில் மாற்றத்தை வலிந்து புகுத்தினால் மனித வாழ்க்கை மிருக வாழ்க்கைக்கு பின்தள்ளப் பட்டு, மனிதனிலிருந்து தோன்றியது குரங்கு என ஆகிவிடும்.

*"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு*
*ஐம்புலத்து தாறு ஓம்பல்தலை."*

– குறள்

திருவள்ளுவர் இத்திருக்குறளால் நமக்கு நினைவூட்டுவது என்ன? ஐவகை அனுட்டா னங்களையும் இல்வாழ்வான் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே. அவ்வாறு கடைப்பிடிப்பதற்கு தர்ம சாத்திரங்களும், நீதி நூல்களும் எமக்கு சுருதி வாக்கியங்களாக உள்ளன. இவற்றை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக கடைப்பிடித்து வருகிறது நம் மனித சமுதாயம். இவை வற் புறுத்தி புகுத்தப்பட்டவையல்ல, இயல்பாகவே மனித சிந்தனையுள் புகுந்தவை. நாம் இதைக் கைவிடலாமா?

தெய்வ சிந்தனையை வளர்த்தல் குலாசாரத் தைப் பேணல், நோயற்ற வாழ்வு வாழ்தல், சமூகத் தின் ஒருமைப்பாட்டைப் பேணல், செய்தொழில் செழிப்படைதல் என்னும் நிலைப்பாட்டை அடை தலே நம் குறிக்கோளாக அமையவேண்டும். இதற்காக நாம் பல தியாகங்கள் செய்ய வேண் டும். நம் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். நூலறிவும், பெரியோர் வாக்கும், மனப் பக்குவத்துக்கு இன்றியமை யாதவை.

இராமாயணம், பாரதம், உபநிடதங்கள் ஆகிய புராதன நூல்களில் குரு சிஷ்ய பரம்பரை பற்றியும், அவர்களிடையே ஏற்பட்ட இறுக்கமான பற்று பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இராமா யணத்தில் வசிஷ்ட ரிஷி தசரதரின் புத்திரருக்கு வித்தை கற்பிக்கும்போது, உபநிடத தத்து வங்களை அழுத்திச் செல்லியிருக்கிறார்.

தாயை, தந்தையை, குருவை தெய்வமாகக் கொள், உண்மை பேசு, அறஞ்செய், வித்தையால் மமதை கொள்ளாதே, அதிதியை உபசரி, சோம் பலைத் தவிர் போன்றன எவ்வளவிற்கு இரா மனை உயர்த்தியிருக்கின்றன. அவ்வாறு துரோணாச்சாரியரும் பாண்டவருக்கும் துரி யோதனாதியருக்கும் உபதேசங்கள் சொல்லி யிருக்கிறார். அப்படியிருந்தும் துரியோதனன் பொறாமையை வளர்த்துக் கொண்டதால் பட்ட அழிவைப் பார்த்தீர்களா? குரு உபதேச மார்க்கத்தைக் கடைப்பிடித்த சிஷ்யர்கள் சிறப்பாக வாழ்ந்து உயர்வு பெற்றிருக்கிறார்கள். அல்லவா? தெரிந்து கொள்ளவேண்டியவற்றை இளமையில் கற்கவேண்டும் என சொல்பவர் உண்டு. ஆனால் நீதிச்சுலோகம் கூறுவது யாது?

சஸ்திரம், சாஸ்திரம் என இருவகைக் கல்வி யுண்டு. இவற்றுள் சஸ்திரம் இளமையிலும், சாஸ்திரம் எக்காலத்திலும் கற்கலாம். சஸ்திரம் என்பது போர்வித்தை. இது முதுமையில் கற்க முடியாது. உடம்பு இடம்கொடாது. ஆனால் சாஸ்திரம் (நூலறிவு) எப்பருவத்திலும் பெற்றுக் கொள்ளலாம். எனக்கு வயசாகிவிட்டது, படிப்பு எதற்கு? என்றிருக்காது நல்ல புஸ்தகங்களைத் தேடிப் படியுங்கள். அவற்றில் கூறியவற்றை உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள். அப்போது தெய்வீக உணர்வும், சுகவாழ்வும், ஐஸ்வர்யங்களும் உங்களை வந்தடையும். இகத்தில் குடும்ப வாழ்க்கையும், மறுமையில் பேரின்பமும் பெறுவீர்கள்.

# சிவஸ்ரீ. ச. சுப்ரமணியபட்டர்
## அவர்களின் சதாபிஷேக விழாக்குழு

ஸ்ரீமதி. ஸ்ரீ ஹரிஹர கணபதிபட்டர் (ஜயப்பன்)

ஸ்ரீமதி. ஸ்ரீ வைத்திலிங்க சர்மா ( ராஜா)

ஸ்ரீமதி. ஸ்ரீ கேதீஸ்வரநாதகுருக்கள் (கண்ணப்பா)

ஸ்ரீமதி. ஸ்ரீ சதாசிவ சர்மா (சிவா)


ஸ்ரீமதி. ஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் (ஞானம்)

ஸ்ரீமதி. ஸ்ரீ கனகசபாபதி குருக்கள்


ஸ்ரீமதி. ஸ்ரீ நடேசன் சர்மா

ஸ்ரீமதி. ஸ்ரீ வெங்கடரமண சர்மா

(மக்களும் மருமக்களும்)



அருள்தரும் உலகம்மன் - தென்காசி



உ

சிவமயம்

# சிவஸ்ரீ ச. சுப்பிரமணியப்பட்டர்

**அவர்கள் எண்பதாவது வயதை அடைந்த நாளன்று நடை பெறவிருக்கும் சதாபிஷேக விழாவும், "சதாயுஷ்யம்" மலர் வெளியீடும்.**

| யுவ வருஷம் தை மாதம் 29ஆம் திகதி (12. 2. 96) திங்கட்கிழமை |
|---|

அதிகாலை – விக்னேஸ்வர பூஜை
அநுக்ஞை
மூர்த்தி பூசையும் விசேஷ ஹோமமும்

காலை – 9.00 மணி முதல் 10.00 மணிக்குள் வரும் சுபவேளையில்
சதாபிஷேகமும்
கனகாபிஷேகமும்

முற்பகல் – 10.30 மணி – ஆசியுரை
தாம்பரம் சிவஸ்ரீ . தே. சு. முத்துக்குமாரஸ்வாமிக்கு
"சர்வசாதக பூஷணம்"

விழாநாயகனை கௌரவித்தல் –
பதக்கம், பொன்னாடை, மலர்மாலை, அணிவித்தல்.

" சதாயுஷ்யம்" – மலர் வெளியிடுபவர் – விழாத்தலைவர்

அருளாசியுரை
விழாநாயகன் சிவஸ்ரீ ச. சுப்பிரமணியப்பட்டர் அவர்கள்

சிவாச்சாரியர், அந்தணர், சிஷ்யர்கள், அன்பர்கள், விழாநாயகனிடம் ஆசிபெறுதல்.
நன்றியுரை.

இறைவணக்கம்.

**விழாக்குழுவினர்.**

# பொருளடக்கம்


கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரர் பக்கம் 1

**ஆசியுரை :**

சிவஸ்ரீ. தே. சு. முத்துக்குமாரசுவாமி சிவாச்சாரியர் பக்கம் 3

பிரம்மஸ்ரீ . து. சண்முகரத்தின சர்மா J. P. பக்கம் 4

**அறிமுகவுரை :**

"பூரண பொற்குடம்"

வித்வான் ஸ்ரீமதி வசந்தாவைத்தியநாதன் J. P. பக்கம் 5

**வாழத்துரை :**

சிவஸ்ரீ . கு. நகுலேஸ்வரக்குருக்கள் பக்கம் 9
பேராசிரியர் சிவஸ்ரீ. கா. கைலாசநாதக்குருக்கள் பக்கம் 10
சிவஸ்ரீ . சுவாமி. விஸவநாதக் குருக்கள் பக்கம் 11
சிவஸ்ரீ . சுவாமி. பரமேஸ்வரக் குருக்கள் பக்கம் 12
சிவஸ்ரீ . பிக்ஷாடன. சந்திரசேகரக் குருக்கள் பக்கம் 13
சிவஸ்ரீ . சு. கைலாசநாதக் குருக்கள் பக்கம் 14
சிவஸ்ரீ . சி. குஞ்சிதபாதக் குருக்கள் பக்கம் 16

பாராட்டுரை :

சிவஸ்ரீ . து. சுந்தரமூர்த்திக் குருக்கள் பக்கம் 17
பிரம்மஸ்ரீ . விஸ்வ நராயணசர்மா பக்கம் 18
பிரம்மஸ்ரீ . ஜயப்பதாசன் பக்கம் 20
பிரம்மஸ்ரீ . செ. ந. நடராஜ சர்மா பக்கம் 22

**போற்றுதல் :**

திரு. வி. கயிலாயபிள்ளை பக்கம் 24
திரு. பொ. வல்லிபுரம் J. P. பக்கம் 25
திரு. பழனியப்பச் செட்டியார் பக்கம் 26
திரு. எஸ். தியாகராஜ (S T R Films) பக்கம் 27
திரு. கே. கே. சுப்பிரமணியம் J. P பக்கம் 29
திரு. சி. சரவணமுத்து பக்கம் 30

**சிறப்புக்கட்டுரை :**

ஆலயதத்துவ விளக்கம் பக்கம் 31
திருக்கேதீச்சரமும் திருமுறையும் பக்கம் 40
நித்தியபூஜையும் தத்துவமும் பக்கம் 44
சிவபூஜாதத்துவம் பக்கம் 49
பதினெண் புராணச் சுருக்கம் பக்கம் 52
உபநிடதங்கள் கூறும் கடவுட்கோட்பாடு பக்கம் 57
நடராஜா தத்துவம் பக்கம் 62
விழாநாயகரின் அருளுரை பக்கம் 63
புகைப்படங்களும் விளக்கமும் பக்கம் 64
நன்றியுரை பக்கம் 65

## சர்வ சாதக பூஷணம்- சிவஸ்ரீ. தே. சு. முத்துக்குமார ஸ்வாமி சிவாச்சார்யார் - தாம்பரம் கற்பக விநாயகர் கோயில்)

# ஆசியுரை

ஆயிரம் பிறை கண்டவர் சிவஸ்ரீ ச. சுப்பிரமணியப்பட்டர்அவர்கள். இவர் ஷஷ்டியப்த பூர்த்தி விழா கண்டவர். தமது நித்ய கர்மானுஷ்டானங்களை முறைப்படி பின்பற்றியதன் பயனாக தனது தம்பதியருடன் இச் சாந்தி கருமங்களை செய்ய வாய்ப்பு பெற்றுள்ளார். பீமரதசாந்தி மிக முக்கியமானது. இக்கிரியை முன் ஜன்மங்களில் செய்து கொண்ட பாவங்களிலிருந்து விடுபட வாய்ப்பளிக்கிறது. மேலும், "ஸதஜன்மக்ருதம் பாபம் ஸதாபிஷேகேன நஸ்யதெ" -

இவ்வாக்கியப்பிரகாரம் பட்டர் அவர்களும் அவர்தம் துணைவியாரும் புனராவர்த்தன ரஹிதராகி, சாக்ஷத் சைவ கைவல்ய பிராதியை பெறுகின்றனர்.

சதாசிவமூர்த்தியின் அனுக்கிரகத்தால் திருநெல்வேலி பார்வதி சதாசிவப்பட்டருக்கு கனிஷ்டபுத்திரனாக இப்புவியில் ஜனித்து, பெறவேண்டிய சம்ஸ்காரங்களைப் பெற்று, சிவாலயங்களில் நித்திய நைமித்ய பூஜைகளைச் சிறப்பாகவும் கருத்தோடும் செய்து வந்தமையால், இவர்கள் சதாபிஷேகம் காணும் பேற்றைப்பெற்றுள்ளார்.

இவர்கள் வளகீகம் என்னும் இல்லற வாழ்வில் புகுந்து ஆறுகுமாரரையும் மூன்று புத்திரிகளையும் பாக்கியமாகப் பெற்றுள்ளார். மேலும் பௌத்திரர், தௌஹத்திரர் என மூன்று தலை முறைகளைக் கண்டவர்.

சிறப்பாகச் சொல்லப்பட வேண்டியது ஒன்றுள்ளது. இவர்களின் தீக்ஷா நாமம் "தத்புருஷ சிவாச்சாரியார்" அவர் ஆத்மார்த்த பூஜை செய்யும் சுவாமி பெயர் – " அர்த்தாம்பிகா சமேத சஸ்கரராமேஸ்வரர்" என அவரே சொல்லக் கேட்டேன். வேலூர் சிவாலயத்தில் வீற்றிருக்கும் சுவாமி அம்பாளையே இவரின் முன்னோர்கள் பரம்பரை பரம்பரயாக ஆத்மார்த்த பூசையை ஆதரித்து வந்திருக்கிறார்கள். இப்புண்ணிய அனுஷ்டானங்களின் பயனாக சிவஸ்ரீ ச. சுப்ரமணியப்பட்டர் தம்பதிகள் ந்தாபுஷேகம் என்னும் பெருவிழாக் காண்கின்றார்கள். இவ்விழா சிறப்பாகவும் சாஸ்திரோக்தமாகவும் , நடைபெறவும், அதனால் ஏற்படவேண்டிய நற்பலன்களும் இவர்களை சென்றடைய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

# பாக்யவான் சிவஸ்ரீ ச. சுப்ரமணியப்பட்டர்

**பிரம்மஸ்ரீ சண்முகரட்ண சர்மா, J. P.**
**தலைவர் – ராமகான சபா வெள்ளவத்தை**

இலங்கையில் சமய குரவரால் பாடல் பெற்ற ஸ்தலங்கள் இரண்டு. திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம். திருக்கேதீஸ்வரம் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் போற்றிப் பாடப்பட்ட ஸ்தலம். இப்பாடல்கள் திருமுறைகளுள் அடங்குகின்றன. இத்தனைச் சிறப்புப் பொருந்திய புராதன ஸ்தலத்தில், எம்பெருமானை முப்போதும் திருமேனி தீண்டி ஆராதனை செய்வதற்கு சுப்ரமண்யப்பட்டர் ஐயா பெரும்தவம் செய்துள்ளார். இப்பேறு சாமான்யமாக எல்லோருக்கும் கிடைத்தற்கரியது.


சிவஸ்ரீ பட்டர் அவர்களின் தொடர்பு திருக்கேதீச்சரப் பெருமானின் கிருபையால் எனக்குக் கிடைத்தது. நான் பலமுறை திருக்கேதீச்சரத்துக்கு யாத்திரை செய்துள்ளேன். அங்கு அவருக்கு நிர்வாகஸ்தர்களும் பக்தர்களும் செலுத்திய கௌரவத்தைக் கண்டு உளம் பூரிப்படைந்தேன். பின்னர் தனது உடல் நலக்குறைவால், தனது புத்திரன் கேதீஸ்வரநாதக் குருக்களை தனது ஸ்தானத்துக்கு குருக்களாக நியமிக்க சம்மதித்தது. அந்தத் தலத்தில் அவர் கொண்ட பற்றைப் புலப்படுத்துகிறது. மேலும் தன் புத்திரனுக்கு கேதீஸ்வரநாதன் என்ற நாமத்தைச் சூட்டி, பொருத்தமாக கௌரி என்னும் பெயர்கொண்ட பெண்ணை மருமகளாக்கிக் கொண்ட பொருத்தம் தான் என்னே! அது மட்டுமா! கௌரியை புராதன ஸ்தலமான நகுலேஸ்வரத்திலிருந்தல்லவா தெரிவுசெய்துள்ளார். இந்நிகழ்வுகள் திருவருள் துணை கொண்டு ஏற்பட்டவை.

கொழும்பு ராமகான சபையார், பட்டரைய்யா அவர்களின் சிறப்பம்சங்களைக் கருத்திற் கொண்டு சபையின் சிவாச்சார்யராக நியமித்துள்ளார்கள். எண்பது வயதை அவர் அடைந்தபோதும், அவரை நம் சபைக்கு சிவாச்சார்யராக நியமித்தமைக்கு, அவர்மீது நாம் கொண்ட குரு பக்தியும், விசுவாசமுமே காரணம். அவர்கள் இச்சபையின் நித்ய கடமைகளோடு, பிராம்மணர்களின் சம்ஸ்காரங்களையும் செய்து வைக்கிறார்கள். நாம் அனைவரும் பாக்கியசாலிகள். எனவே சிவஸ்ரீ பட்டர் அவர்கள் சுகதேகியாக இன்னும் பல்லாண்டு வாழ்ந்து எமக்கெல்லாம் சத்குருவாக விளங்கவேண்டுமென்று, சீதாராமனை வேண்டுகின்றோம்.

சுபமஸ்து.



"ஸ்ரீ கௌரியம்பாள் சமேத
கேதீஸ்வரநாதப் பெருமான்"



ஸ்லோகம் : "நமப்ரதோஷ ரூபாய
நமஸ்தே சிவசக்தயே
நந்தி வாஹனம் ஈசானம்
மங்களம் சாம்ப மூக்தயே!"

உ

# பூரணப் பொற்குடம்

**அருள்மொழி அரசி – வித்துவான்**
**திருமதி. வசந்தா வைத்தியநாதன் ஜே. பி.**

*பொறிகிள ரரவமும் போழிள மதியமுங்கங் கையெனும்*
*நெறிபடு குழலியைச் சடைமிசைச் சுலவிவெண் ணீறுபூசிக்*
*கிறிபட நடந்துநற் கிளிமொழி யவர்மனங் கவர்வர் போலும்*
*செறிபொழி றழுவிய திருநெல்வேலியுறை செல்வர் தாமே.*

– திருஞான சம்பந்தர்.

**தோற்றம் :-**

*"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதில்லார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று."*

– குறள்.

பொதியத் தமிழ்த் தென்றல் வந்து வந்து முத்தமிடும் திக்கெலாம் புகழும் திருநெல் வேலியில் கல்வி கேள்விகளிற் சிறந்த அந்தண குடும்பத்தில் வேதவித்தகராம் சிவஸ்ரீ சங்கர பட்டர் சதாசிவ பட்டர், பார்வதியம்மாள் தம்பதியினருக்கு அரும்பெறல் மகவாய் மங்கலம்மிகும் நள ஆண்டு தைத்திங்கள் 3 ஆம் நாள் (17.1.1917) சுப்பிரமணிய பட்டர் அவர்கள் தோன்றினார்.

அறிவிற்கும் ஆற்றலுக்கும் எட்டாத குழந் தையாக, பக்திக்கும், அன்பிற்கும் எட்டும் குழந்தையாக வசுதேவருக்கும், தேவகிக்கும் எட்டாவது திருமகவாக அவதரித்தவர் கண்ண பெருமான். அது போலவே சுப்ரமணியனும் தனது தாய் தந்தையருக்கு எட்டாவது புதல்வ னாகத் தோன்றினார். வேதஞானத் தேட்டத் திலே தோய்வு பெறப் போகும் குமாரருக்கு சுப்ரமண்யம் என்று பெற்றோர் இட்ட பெயர் மிக மிகப் பொருத்தமே. அவருடன் உடன் வயிற்றுத் தோன்றியவர் நான்கு சகோதரர்க ளும், நான்கு சகோதரிகளும் ஆவர்.

**கல்வித் தகைமை :-**

*"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்."*

குறள்.

தொட்டனைத் தூறும் மணற் கேணியன்ன கல்வியைத் திருநெல்வேலி ஆரம்பப் பள்ளியில் நிறைவேற்றிய பின்பு தனது பத்தாம் அகவையில், கல்விக் கரையிலாத காஞ்சி மாநகர் சென்று, வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், புரா ணங்கள் இவற்றை முறையாக ஐந்தாண்டுகள் கற்றுத் தேர்ந்தார். வேதாகமத் தேர்வுகளில் முதன் மாணவனாக வரும் தகுதியையும் பெற்றுக் கொண்டார். மலர் தோறும் சென்று மதுவினைச் சேகரிக்கும் தேனீயைப் போன்று கற்ற பெரியோர்கள் பால் சென்று தனது கல்வி நலத்தைப் பெருக்கிக் கொண்டார்.

**இல்லறச் சிறப்பு :-**

*"மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."*

– குறள்.

1935 ஆண்டின் திருநெல்வேலியிலுள்ள வல்ல நாட்டில் வாழ்ந்த வேதவித்தகராம் சிவஸ்ரீ சண்முகப்பட்டரின் திருமகளாராகிய வள்ளி அம்மாளைத் தனது வாழ்க்கைத் துணையாகக் கொண்டார். நீண்ட காலம் அம்மையாரின் திருவயறு வாய்க்காததால், தனது குலத் தொழிலுக்குக் கான்முளை வேண்டி திருமிகும் இலக்குமி அம்மாளின் திருக்கரம் பற்றினார். அவரது பெயர்ப் பொருத்தமே வாழ்க்கைப் பொருத்தமாகவும் மாறியது வியக்கத்தக்கது. இரண்டு பெண்மணிகளுமே இல்லறத்தை நல்லறமாக்கினர்.

திருக்கேதீச்சரப் பெருமானது தடங் கருணையினால் சிறிது கால இடைவெளிக்குப்

பிறகு வள்ளி அம்மாளுக்கு அழகிய ஆண் மகவு பிறந்தது. இலக்குமி அம்மாளுக்கும் ஐந்து ஆண்களும், மூன்று பெண்களுமாக மக்கட் செல்வம் வாய்த்தது. குழந்தைகள் அனைவருமே "இவன் தந்தை எந்நோற்றான் கொல்" எனும் சொல்லிற்கு இலக்கணமாகித் தந்தை தாய் காட்டிய வழியில் பீடுநடை போடுகிறார்கள். புதல்வர்கள், புதல்விகள், மருமக்கள், பேரன் பேத்திகள்.... ஏன் கொள்ளுப் பேரனையும் கண்டு இறும்பூது எய்தி "ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரோடும் குடும்பத்தின் ஆதர்சத் தலைவனாகத் திகழ்கிறார் திரு. பட்டர் சுவர்மிகள்.

**ஆலயத்தொண்டு :-**

*"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்."*

- குறள்.

சிவாலயத் தொண்டும், சிவஸ்ரீ பட்டர் அவர்களின் வாழ்க்கையும் சொல்லும் பொருளும் என பிரிப்பறியாதவை.

வேதமணம் கமழும், சிந்தாந்த சரபம் – காசிவாசி – பழனி ஈசான சிவாச்சாரியார் அவர்களின் பொற்கரங்களால் ஆசார்ய அபிஷேகம் செய்விக்கப் பெற்று அவரையே தனது மானச குருவாக ஏற்று, முதன்முதலில் தூத்துக்குடியிலுள்ள ஸ்ரீ அர்த்தாம்பிகா சமேத ஸ்ரீ சங்கர ராமேஸ்வரரின் திருமேனியை முப்போதும் தீண்டும் பெறும்பேறு பெற்றார். அவ்வாலயத்தில் முதல் கொடியேற்றித் திரு விழாவைத் தனது மாமனார் சிவஸ்ரீ சண்முகப் பட்டர் அவர்களின் வழி காட்டுதலில் சிறப்பாகச் செய்தார். ஏறக்குறைய பத்து ஆண்டுகள் இவ்வாலயத்தில் பணிபுரிந்த பின் திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் ஆலயத்திலும் குறுக்குத் துறை ஸ்ரீ சுப்ரமண்யர் ஆலயத்திலும் சிறிது காலம் பணியாற்றினார். இன்றும் திருநெல்லேலி ஸ்ரீ காந்திமதியம்பாள் உடனுறை ஸ்ரீ நெல்லையப்பர் ஆலய பூஜை ஸ்தானிகத்தை இவரது மூத்த சகோதரரின் பரம்பரையினரே மேற்கொண்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1928ம் ஆண்டளவில் சிவஸ்ரீ பட்டர் அவர்களது தந்தையார் சிவஸ்ரீ சங்கரபட்டர் சதா சிவபட்டர் அவர்கள் திருநெல்வேலியினின்று யாழ்ப்பாணம் வந்து வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய பூஜையை ஏற்றுக்கொண்டார். தந்தைக்கு உதவியாக பட்டர் அவர்களும் பூஜை உற்சவம் ஆகியவைகளை கவனித்து வந்தார். அதே ஆலயத்தில் சிவஸ்ரீ இராமநாதக் குருக் கள், சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் (பாப்பாக் குருக்கள்) முதலியவர்களைக் கொண்டு உற்சவாதிக் கிரியைகளை மிகச் செவ்வை யாகச் செய்தார். சிறப்பாக வண்ணை சிவன் கோயிலில் பணிபுரியும்பொழுது ஆலய நிர்வா கஸ்தர்களான திரு. பொன்னுசாமிச் செட்டி யார், திரு. வைத்தியலிங்கச் செட்டியார், திரு. கந்தப்பச் செட்டியார் என மூன்று தலைமுறை நிர்வாகத்தைச் சந்தித்த சிறப்பும் இவரது வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சியாகும்.

வண்ணை சிவன் கோயிலில் இருந்த காலத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் வேண்டுகோட்கிணங்க 1954ம் ஆண்டு திருக்கேதீச்சர ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியாராகப் பொறுப்பேற்றார். அன்றிலி ருந்து இன்றளவும் உடலால் பிரிந்தாலும், உள்ளத்தால் பிணைந்த வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

திருக்கோலக்கா சிவஸ்ரீ இராமநாத சிவாச்சாரியார், காஞ்சிபுரம் சிவஸ்ரீ இராஜப்பாக் குருக்கள் போன்ற சிவாச்சாரிய திலகங்களை வரவழைத்து பெருமானுக்கு வெகுவிமரிசை யாக உற்சவங்களை நடாத்திய பெருமையையும் உள்ளடக்கியவர்.

திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபைத் தலைவர்களாகத் தொண்டு புரிந்த சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. சிவசுப்பிர மணியம், திரு. சோமசுந்தரம், திரு. அல்லிராஜா, கேர்ணல் சபாநாயகம், திரு. மு. கந்தையா, திரு. ஞானப்பிரகாசம், திரு. நமசிவாயம் முதலியவர்களுடன் தோளோடு தோள் நின்று உழைத்த உத்தமர்.

ஸ்ரீ. ல. ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்களால் "தேன்பொந்து" என்று வர்ணிக்கப் பெற்றதும் சைவசமயாசாரியர்களால் பாடப் பெற்றதுமான திருக்கேதீச்சர ஆலயத்திற்கு

வருகைதரும் அமைச்சர்கள், அரசாங்க அதி காரிகள், வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜெய நாதன் போன்ற அறிஞர் பெருமக்கள், சமய சான்றோர் கள், ஆதீன கர்த்தர்கள் ஆகிய அனைவரது பெருமதிப்பையும், அன்பையும் ஒரு சேரப் பெற்றவர்.

**கும்பாபிஷேகங்கள் :-**

*"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை."*

- குறள்.

இவர் முதன்முதலாக நடத்திய கும்பாபி ஷேகம் தூத்துக்குடியிலுள்ள கீழூர் விநாயகர் ஆலயம் ஆகும். விநாயகரைத் தொட்ட பேறு மேலும் மேலும் பல கும்பாபிஷேகங்களை நடத்தியும், பங்கு கொண்டும் சிறப்புறுகின்ற பெருமை கிட்டியது.

1948ம் ஆண்டு மதுரையாதீனம் ஸ்ரீ. ல. ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களது தலைமையில் சிவஸ்ரீ சிவகடாக்ஷக் குருக்கள் அவர்கள் நடாத்தி வைத்த திருக்கேதீஸ்வர ஆலய ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகத்தில் முக்கிய பங்கேற்றுச் சிறப்பித்தார். மேலும் 1958ம் ஆண்டு அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள், 1976ல் நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள் முதலியோர் நடத்திய திருக்கேதீச்சர ஆலய கும்பாபிஷேகங்களில் சிவஸ்ரீ பட்டர் அவர்களின் பணி உயிரோட்டமானது.

1953ம் ஆண்டு திருக்கழுக்குன்றம் சிவஸ்ரீ சந்திரசேகர சிவாச்சாரியார் அவர்கள் தலைமையேற்று நடத்திய வண்ணார்பண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய கும்பாபிஷேகத்தில் பெரும் பங்கு ஏற்றமை பாராட்டற்குரியது.

1978ல் திருவாளர் எஸ். டி. தியாகராஜா அவர்கள் நிர்வாகப் பொறுப்பேற்றிருந்த வண்ணை ஸ்ரீ கதிரேசன் ஆலய மகா கும்பாபி ஷேகத்தில் பிரதான சிவாச்சாரியாராக இருந்து நவகுண்டபக்ஷ யாகம் அமைத்து மிகக் கோலா கலமாக கும்பாபிஷேகத்தை நிறைவேற்றிய பெருமதிப்பிற்குரியவர்.

மட்டக்களப்பு கோளாவில் பிள்ளையார் கோயில், பொலிகண்டி கந்தவனம் ஸ்ரீ சண்முக நாயனார் கோயில் கும்பாபிஷேகங்களிலும் ஆசார்யத் தலைமையேற்று நடத்தினார்.

மேலும், அச்சுவேலி, கீரிமலை சிவன் கோவில், இணுவில், புத்தூர், திருகோணமலை, தெல்லிப்பளை துர்க்கையம்மன், தாளையடி துர்க்கையம்மன், கைதடி பிள்ளையார், கொழும்பு, கண்டி, பதுளை முதலிய இடங்களில் நடைபெற்ற கும்பாபிஷேகங்களிலும் பங்கேற்ற பெருஞ்சிறப்பிற்குரியவர்.

**சமயத்தொண்டு :-**

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்."*

- குறள்.

மனித வாழ்க்கை செம்மையுற சமயக் கல்வி, சமய அநுஷ்டானம், சமய சிந்தனை வேண்டும், அந்த வகையில் சிவஸ்ரீ சுப்பிரமணிய பட்டர் அவர்கள் திருக்கேதீச்சரம் திருஞான சம்பந்தர் மடத்தில் பொறுப்பாளராக இருந்து ஆலய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார்.

சிவராத்திரி, தைப்பூசம் போன்ற காலங்க ளில் ஆயிரக்கணக்கான சைவமக்களுக்கு சமயதீட்சை செய்துவைத்தார்.

அந்தணச் சிறார்களுக்கு உபநயனம், திருமணம் போன்ற நற்காரியங்களையும் முன்னின்று நடத்தினார். அதுமட்டுமின்றி திருக்கேதீச்சரம் ஆகமப் பாடசாலையில் பணிபுரிந்தும், வேத, ஆகம சம்பந்தமான நடைமுறை ஐயங்களை நீக்கியும், சமயச் சொற்பொழிவுகள் செய்தும் இடைவிடாது பணிபுரிந்தார். கொழும்பு இராமகான சபையில் குருவாக அமர்ந்து பணியாற்றும் இந்த வயது முதிர்ந்த நிலையிலும் கூட "ஓடி வரும் காரணர்க்கு உண்மை வை" என்பதற்கொப்ப தன்னை நாடிவரும் மாணவர்களுக்கு ஆகமக் கல்வியை பயிற்றுவிக்கின்றார்.

**மணவினைத் தொடர்பு :-**

*"சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான்*
*பெற்றத்தால் பெற்ற பயன்."*

- குறள்

அச்சுவேலி சைவ, வேதாகம விற்பன்னர் சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் அவர்களின்

பேரனார் சிவஸ்ரீ கனகசபாபதிக் குருக்கள் அவர்களை மருமகனாகக் கொண்டும், நீர்வேலி சிவஸ்ரீ பிக்ஷாடனக் குருக்கள், கீரிமலை சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள், முன்னேஸ்வரம் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியம் குருக்கள், அராலி சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய குருக்கள் முதலானோரை இனிய பந்தத்தால் சம்பந்திகளாகப் பெற்றும் பூரிப்படைபவர்.

**பட்டங்கள் :-**

*"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாந் தலை."*

– குறள்.

1986ல் அச்சுவேலிப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக விழாவில் வியாகரண சிரோன் மணி திரு. சீதாராம சாஸ்திரிகள் அவர்களால் "சதாசார சம்பன்னர்" என்ற பட்டமும் 1994ல் கொழும்பு இந்து கலாசார அமைச்சினால் "வேதாகம மாமணி" என்ற பட்டமும் பெற்று அப்பட்டங்களுக்குப் பொருளாகி வாழ்பவர்.

**எனதுரை :-**

*"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்*
*நன்மை கடலிற் பெரிது."*

– குறள்.

ஒரு மனிதனுடைய பரிபூரணமான ஆயுள் 120 ஆண்டுகள். ஆயுள்காரகன் மீன மைந்தன். இவர் பன்னிரண்டு இராசிகளையும் ஒருமுறை சுற்றிவருவதற்கு முப்பதாண்டுகள் ஆகின்றன. ஒருவனது வாழ்நாளில் சனிபகவான் நான்கு முறை வலம் வருவார். அப்படி வந்தால் ஒரு மனித ஆயுள் நூற்றிருபது ஆண்டுகள். இதனைப் 'பரமாயுள்' என்றும் 'தசவருஷ முறை' என்றும் சோதிட நூல் கூறும்.

மனித ஆயுளில் பாதியளவு வாழ்ந்து விட்டாலே அதனைப் பூரணப்படுத்தி மணிவிழா – சஷ்டியப்த பூர்த்திவிழா கொண்டாடுவார்கள். ஒருவன் தனது வாழ்வில் காற்பகுதி (30 ஆண்டுகள்) கலை வாழ்விலும், 60 வயது வரை உலகியலிலும், 60 ஆண்டுகளுக்கு மேல் சமய வாழ்விலும் ஈடுபட வேண்டும். ஆனால் நமது பட்டர் பெருமகனாரோ தம் வாழ்வின் பெரும்பகுதியையும் எந்தவிதமான பிரதி பயனையும் கருதாது சமய வாழ்விற்கே அர்ப்பணித்துள்ளார். இவரது வாழ்க்கை பெரியவர்களுக்கு ஏற்றம் – சிறியவர்களுக்கு ஏணிப்படி.

அடக்கம், அன்பு, பரிவு, புலமை, ஒழுக்கம், ஒப்புரவு அனைத்து அருங்குணங்களாலும் சிறந்து விளங்கும் இம்மகானின் காலத்திலேயே நாமும் வாழ்கிறோம் என்பதுதான் நமக்குப் பெருமை.

1977 ஆண்டு ஸ்ரீ கௌரியம்பாள் சமேத கேதீச்சரப் பெருமானின் திருமுன் மணிவிழாக் கண்ட பெரியவர் இன்று கொழும்பு மா நகரில் அடியார்கள் திருமுன் வைரவிழாக் காணுகின்றார். தக்கார் கரம்பட்ட செல்வம் போன்று அவர் வாழ்க! வாழ்க! நெடிது நாள் வாழ்க! என்று வாழ்த்தி வணங்குவதே நமது கடமையாகும்.

நன்றி! வணக்கம்.



சிவஸ்ரீ கே. சு. முத்துக்குமாரசாமி
சிவாச்சாரியார்
தாம்பரம்



நகுலேஸ்வரக் குருக்கள்
நகுலேஸ்வரர்
ஆதீனம்



நவாலியூர்
சுவாமி விஸ்வநாதக் குருக்கள்



சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக்
குருக்கள்



சிவஸ்ரீ து. சுந்தரமூர்த்தி
குருக்கள்



சிவஸ்ரீ பிஷேடன
சந்திரசேகரக் குருக்கள்
நீர்வேலி



பிரம்மஸ்ரீ விஸ்வ நாராயண சர்மா
தெல்லிப்பளை



சிவஸ்ரீ சுவாமி
நாதபரமேஸ்வரக் குருக்கள்
நயினாதீவு

கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியருமாகிய சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் வழங்கிய

# வாழ்த்துரை

சிவஸ்ரீ ச. சுப்ரமணியப் பட்டர் அவர்களை நான் 1946ஆம் ஆண்டிலேயே அறிமுகம் செய்து கொண்டேன். அப்போது அவர் இளமைத் துடிப்போடு இருந்தார். துவிச்சக்கர வண்டியில் அவர் யாழ்ப்பாணத்தில் பயணம் செய்தமை இன்றும் என் கண் முன் காட்சி தருகிறது. வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் 1953ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் அவர்களுடன் இணைந்து கிரியைகளில் பங்கு பற்றியிருந்தேன். அப்போது அவர் கும்பாபிஷேக கிரியைகளை நடத்திய விதம் என்னை மிகவும் கவர்ந்தது.

அவரின் மூன்றாவது புத்திரன் கேதீஸ்வரநாதக் குருக்களை 1979ல் எனது மருமகனாக வரித்துக் கொண்டு சம்பந்தியான பின் எமக்கிடையே உறவு நெருக்கமானது. பட்டர் மாமா எனக்கு சம்பந்தியானாலும் அவர் மீது எனக்கு மிகுந்த அபிமானம் உண்டு. அவரின் மென்மையான சுபாவம், ஆழ்ந்த அறிவு என்னைக் கவர்ந்ததால் அவரை சிறிது காலம் நகுலேஸ்வரப் பெருமானின் நித்திய நைமித்திக சேவையில் ஈடுபடுத்தினேன். அப்போது எனது குமாரர்களுக்கு சமஸ்கிருத பாடம் கற்பித்தார். ஆகம கிரியைகள் சம்பந்தமாக நல்ல விளக்கங்களையும் ஆலோசனைகளையும் வாரிவழங்குவார். நான் ஏற்றுக் கொண்ட கும்பாபிஷேகங்கள், உத்வாகங்கள் சிலவற்றுக்கு அவர் எனது பிரதிநிதியாகச் சென்று கடமைகளை சிறப்பாக நிறைவேற்றியுள்ளார். அத்துடன் அவர் காலத்தால் செய்த உதவியை நான் என்றும் மறக்கமுடியாது. எனது ஷஷ்டி யப்த பூர்த்தி விழாவை 1985ஆம் ஆண்டு சிறப்பாக நடத்திய பெருமை அவருக்கு உண்டு. அளவெட்டி முத்து மாரியம்மன் கோவில், கொழும்புத்துறை இலந்தைக் குளம் பிள்ளையார் கோவில், வறுத்தலைப் பிள்ளையார் கோவில் ஆகிய ஸ்தலங்களில் என் சார்பாக கும்பாபிஷேகங்களை ஏற்று நிறைவேற்றி அவ்வூர் மக்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

பட்டர் மாமா அவர்களினதும் குடும்பத்தினரதும் நற்கருமங்களில் கலந்து சிறப்பிக்க வேண்டிய கடப்பாடு எனக்குண்டு. எனவே அன்னாரின் சதாபிஷேக வைபவம் சிறப்பாக நடைபெற நகுலேஸ்வரப் பெருமானை பிரார்த்திக்கிறேன். அவர்கள் இன்னும் பல ஆண்டு சுகதேகியாக வாழ இறைவன் அருள் புரிவாராக.

"ஸர்வே ஜனா : ஸு கினோபவந்து"

கு. நகுலேஸ்வரக் குருக்கள்.

# "மனம் தளரா மறையோன்"

PROF. **K. KAILASANATHA KURUKKAL**
M. A. (Ceylon) Ph. D. (Poona) No. 5, Chat Place,
Weerribeevic 3030. Australia.

அரிது மானிடப் பிறவி அதிலும் அரிது இரு பிறப்பாளராகப் பிறத்தல் மிக அரிது. முப்போதும் திருமேனி தீண்டும் குலப் பிறப்பு, அவ்வாறு பிறந்ததோடமையாது நற்குண நற்பண்புகளுக்கு இடமாய், பொறாமை, எரிச்சல், கோபம் முதலிய தீய குணங்கள் எதுவும் இல்லாதவாறு தோற்றியவர் சிவஸ்ரீ சதாசிவ பட்டரின் தவப்புதல்வர் ஸ்ரீ சுப்பிரமணிய பட்டர்.

பட்டரவர்கள் பாடல்பெற்ற தலமாகிய திருக்கேதீச்சுவரத்தில் தொண்டாற்றிய காலம் முதல் அவரை நன்கு அறிவேன். அதற்கு முன் அவர்கள் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன் கோவிலில் கடமை ஆற்றி வந்தார்கள். அந்தக் காலம் முதலில் கொழும்பிலும், பின்னர் பேராதனை யிலும் பல்கலைக்கழகத்தில் கடமை புரிந்து வந்ததனால் அவர்தொடர்பு ஏற்படவில்லை. 1974ம் ஆண்டே யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. அவர் பழக்கமும் ஏற்பட்டது.

திருக்கேதீச்சுவரம் வேதாகம பாடசாலையில் சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமை தாங்கிய காலத்திலும் அதன் பின்னர் சில வருடங்கள் தொடர்ந்தும் பரீட்சகராகக் கடமையாற்றச் சென்ற வேளையே பட்டர் அவர்களைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

சாந்தமே உருவான தோற்றம். சிவ கைங்கரியத்தில் ஈடுபட்டதனால் விளங்கும் தோற்றப் பொலிவு, அடக்கம், பொறுமை, நிறைவு ஆகிய பண்புகளின் உறைவிடம், இவ்வாறு விளங்கிய பட்டர் அவர்களை நான் எப்பொழுதும் திருக்கேதீச்சரத்துடன் இணைத்தே மனக்கண்முன் கண்டு மகிழ்ச்சியுறுவேன்.

பாரத நாட்டில் சிவாச்சாரிய பரம்பரையில் வந்தோர்களே வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் கடமை புரிய வாய்ப்பு இருந்தது. யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த தோன்றல்களுக்கு அக்காலத்தில் அங்கு எவ்விதக் கடமையாற்றும் வாய்ப்பை நிர்வாகம் அளிக்கவில்லை. பாரத நாட்டிலிருந்து வந்த பட்டர் முதலில் அங்கு கடமை ஆற்றினார்.

அவ்வாறே பிரசித்தமான பாடல்பெற்ற திருக்கேதீச்சரத்திலும் பெருந்தன்மை வாய்ந்த சிவசார்ய பரம்பரையினரே குருத்துவம் வகித்தது அக்காலம் அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமி குருக்கள் தலைமையில் திருக்கேதீச்சரத்தில் நித்திய நைமித்திகங்கள் சிறப்பாக நடைபெற்று வந்தன. சிவராத்திரி விழா மிக விமரிசையாக நடைபெற்று வந்த காலம் பழுத்த பழம் சிவப்பொலிவு எப்போதும் மேனியில் திகழும் நிலையில் பட்டர் அவர்கள் கடமை புரிந்து வந்தார்.

வயது முதிர்ச்சி காரணமாக கைங்கரியப் பொறுப்பை தமது மைந்தன் கேதீஸ்வரநாதக் குருக்களிடம் ஒப்படைத்து விட்டு யாழ்ப்பாணத்தில் அமைதியாக இருந்து சில காலம் சமயப்பணிகள் செய்து வந்த பட்டர், யாழ்ப்பாணம் அமைதிகுன்றி அல்லலுறும் வேளை கொழும்பு வந்து ஸ்ரீ ராமகான சபையில் இணைந்து இன்றுவரை தம்மாலியன்ற பணிகள் புரிந்து வருகின்றார். அவர் மைந்தர்களும் அவர் வழிகாட்டல்களுக்கமைய அங்கங்கே விவாகம் புரிந்து தம்தம் வழியில் தொண்டாற்றி வருகின்றனர். பட்டரவர்கள் அச்சுவேலி குமாரசாமி குருக்கள் குடும்பம், நீர்வேலி பிக்ஷாமனக் குருக்கள், கீரிமலை நகுலேசுவர குருக்கள் குடும்பம், முன்னேசுவரம் பாலசுப்பிரமணிய குருக்கள் குடும்பம் அராளி பாலசுப்பிரமணிய குருக்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய விவாகத் தொடர்பு கொண்டு இணைந்தவர்கள்.

அண்மையில் பட்டரவர்களுக்கு சதாபிஷேகம் நடைபெற இருப்பதையறிந்து மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த தள்ளாத வயதிலும், தயக்கம் எதுவும் வெளிப்படுத்தாது கும்பாபிஷேகப் பூஜை, உற்சவங்கள் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறப்பித்து வருகிறார்கள்.

திருக்கேதீச்சுரப் பெருமான் திருவருள் பொழிய இன்னும் பன்னெடுங்காலம் இனிது வாழ்ந்து சைவக்குருமாருலகத்துக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து சமயத் தொண்டாற்ற அநுக்கிரகிக்கும் படி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டி நிற்கின்றேன்.

# சதாபிஷேகப் பெருவிழா

**சாமி விஸ்வநாத குருக்கள்**
பிரதிஸ்டா சிரோமணி (கொழும்பு.)
நவாலியூர்.

---

**(சதாபிஷேகப் பெருவிழா பெறும் தலை சிறந்த சிவாச்சார்யமணி திருக்கேதீஸ்வரம் தேவஸ்தான பிரதம சிவாசார்யர் பிரம்மஸ்ரீ சதாசிவப்பட்டர் சுப்பிரமணியப்பட்டர் தம்பதிகளின் சதாபிசேக விழா)**

தமிழ்நாடு திருநெல்வேலி ஜில்லாவைப் பிறப்பிடமாகக் கொண்ட பெருமகனார் உயர்திரு சிவஸ்ரீ சதா சிவப்பட்டா. சிவஸ்ரீ சுப்பிமணியப்பட்டர் அவர்கள் எமது சமூகத்தினரால் போற்றப்பட்ட பெரியார். வேத ஆகம கிரியை மாமணியாக வண்ணை வைத்தீஸ்வரர் கோயிலில் பிரதம சிவாசாரியாராகவும் அதன்பின் திருக்கேதீஸ்வரம் தேவஸ்தான குருக்காளாகவும் திகழ்ந்து பல சிவாசார்யர்களாலும் வைதீகப் பெரியார்களாலும் சைவப் பெருமக்களாலும் மதிக்கப் பெற்று வாழ்ந்தார்கள். பல பிராம்மண சிறுவர்கட்கு வேதம், ஆகமம் சொல்லி வைத்தும் எமது பெரும் மதிப்புக்குரிய அச்சுவேலி குமாரசாமி குருக்கள் அவர்களுடன் இணைந்தும் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான பிரதம குருக்கள் கு. நகுலேஸ்வரக் குருக்களுடன் இணைந்தும் பல கும்பா பிஷேகங்களை நடத்தியும் அன்னார் செய்த தவப்பயனின் வழி பெற்றெடுத்த மக்கள் அனைவரும் குருபக்தி, சமய ஆசார அனுஷ்டானங்களுடனும் விளங்குகிறார்கள்.

அவர் உத்தம மருமகன் உயர் திரு அச்சுவேலி குருக்கள் பேரனை மகளுக்கு வரனாகவும் அவர் புத்திரன் அவர்களின் சிவஸ்ரீ கேதீஸ்வரனாதக் குருக்கள் (கண்ணப்பா குருக்கள்) சகதர்மினியாக நகுலேஸ்வரக் குருக்கள் மகளை வதுவை செய்து அவரின் வாழ்க்கையின் புகழைக் கண்டும், ஏனைய குமாரர்களின் வாழ்க்கையையும் கண்டு பேத்தி பேரப்பிள்ளைகளின் மழலைமொழி கேட்டும், மகன் கண்ணப்பா குருக்கள் 1996 ஆண்டு முதல் கொழும்பு நெடுமால் வெங்கடேஸ்வர ஆலய பிரதம குருக்களாக அமைந்த பெருமையையும் கண்டு ஆயிரம் பிறை கண்ட உத்தம சிவாசாரியப் பெருமகனார் ஆவார். எமக்கும் பல தடவை உதவியும் சந்தேக நிவிர்த்திகளைக் கேட்டு அறியும் வாய்ப்பும் கிடைத்தது.

எனவே அன்னாருக்கு நடக்கும் சதாபிஷேகப் பெருவிழா திருவருட் துணையுடன் இனிது சிறைவு பெற அன்னாரின் திருவருளையும் இறைவன் இறைவி திருவருளையும் மிகவும் பணிவன்புடன் வேண்டிக்கொள்வதுடன் எமது இதயபூர்வ நமஸ்காரத்தையும் பக்தியையும் நன்றியையும் ஆசார்யமணியின் உபய பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

# ஆயிரம் பிறைகண்ட அந்தணச் செம்மல்

"பிரதிஷ்டா பூஷணம்", "சிவாகமஞானபானு ", "பிரதிஷ்டா கலாநிதி", "வேதாகமக் கிரியா சூடாமணி" சிவாச்சாரிய
சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்
ஆதின குரு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம், நயினாதீவு.

*"வையத்துள் வாள்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"*

என்ற திருக்குறளினால் உலகில் வாழ வேண்டிய முறைப்படி இல்லறம் செய்பவரை விண்ணுலகத் தெய்வமாக மதிக்கப்பெறுவான் வையத்து வாழ்வதும் ஓர் நெறியாகும். இந்தியாவில் பிறந்தாலும் இலங்கையில் பிரபலமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் இன்று சதாபிஷேகம் நடைபெறும் "சதா சார சம்பன்னர்" வேதாகம மாமணி "சிவஸ்ரீ சுப்பிமண்யப்பட்டர்" ஐயா அவர்கள் சிவாசார்யங்களையும் அவர்களின் சிறப்புகளையும் அறிதல் அவசியமே. சிவாசார்யர்களை ஆதி சைவர்கள் என்று கூறும் மரபு உண்டு. அவர்களில் குருக்கள் பட்டர் என சில பிரிவுகள். குமாரிலப் பட்டர், அபிராமி பட்டர் என்பவர்களை உலகு நன்கு அறியும். யாழ்ப்பாணம் வண்ணை வைதீஸ்வரன் கோவில், திருக்கேதீஸ்வரம் ஆகிய இரு சிவஸ்தலங்களிலும் பிரதம குருவாக விளங்கிய ஐயா அவர்கள் சிவன்கோவில் பட்டர். திருக்கேதீஸ்வரம் பட்டர் என்றே திகழ்ந்தார். இன்றும் கொழும்பிலும் "பட்டர் ஐயர்" என்றால் தெரியாதவர்கள் இல்லை எனலாம். சிவாசாரியர்கள் பிறந்தது முதல் வாழ்க்கை பூராவும் அனுஷ்டிக்க வேண்டிய விரத அநுஷ்டானங்கள் உள. கர்ப்பா தானம், நாமகரணம் முதலான சத்வாரிம் சத் (நாற்பது) சமஸ்காரங்களே பகவானை ஆராதிக்கும் பூஜையாம். ஸ்வர்க்கம் முதலான முத்திப் பேறுகளைப் பெறச் சிறந்த சாதனமாகும். இவை வைதீக அநுஷ்டானம். ஆதிசைவராகிய சிவத்துவிஜர்களுக்கு சமய தீக்ஷை, விசேஷ தீக்ஷை, நிர்வாண தீக்ஷை, ஆசார்யாபிஷேகம் முதலானவற்றை பெற்றவர்தான் ஆசார்யர் ஆக இருக்கும் பூரண தகுதியுடையவராவர்.

இவர்களுடைய பெரும்பேறு பழனி காசிவாசி "சித்தாந்தசரபம்" ஈசான சிவாசாரியர் அவர்களிடம் ஆசார்யபிஷேக தீக்ஷை பெற்றது. காஞ்சிபுரம் வேதபாடசாலையில் வேதம் பயின்றது இன்றும் வேதபாராயணம் செய்யும்போது ஸ்வரம் தவறாமல் ஓதுவார். செட்டியார்தெரு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற கணபதி ஹோமத்தில் கணபதி உப நிஷத்ருத்திரம் சமகம் ஐயாதி இவ்வேத மந்திரங்களை இவ்வளவு வயதில் (81வது) சிறப்பாகச் சொன்னது கேட்டு பலர் மகிழ்ந்ததை நாம் அறிந்தோம். வேதம் ஆகமம் சித்தாந்தம் யாவும் கற்றறிந்து அதற்கு தக நிற்றலால் வாய்மை, தூய்மை, பொறுமை, பெருமை, அன்பு, அமைதி, அடக்கம் என்பனவற்றை ஐயா அவர்களின் தோற்றத்தில் காணலாம். ஆரியமும் செந்தமிழும் ஆனான் காண் என்பது போல வடமொழி தென்மொழிகளிலும் வல்லவராகி இரு கண்களை பெற்றவர்ப் போலத் திகழ்கின்றார். அந்தணர்க்குரிய வேட்டல் வேட்பித்தல், ஓதல் ஓதுவித்தல் ஏற்றல் ஈதல் நன்கு செய்த பெருமையுடையவர். அவர் தம் வழித் தோன்றல்களுக்கு தம் கல்வி குணங்களைக் கொடுத்து நல்வழிப் படுத்தியதோடு பல மாணாக்கர்களுக்கு வேத சிவாகமங்களைச் சொல்லி வைத்து சிறந்த சிவாசார்யர்களாக ஆசார்யாபிஷேகம் செய்து முன்னிலைப் படுத்திய பெருமை உடையவர்கள். இவர்கட்கு சதாபிஷேக விழா குடும்பத்தினரும் சமூகமும் சேர்ந்து செய்வது தலையாய கடமையாகும். ஆயிரம் சந்திர தர்சனம் செய்தவர் நூறு ஆண்டு வாழ்ந்தவராவர். அவர்களை அலங்கரித்து ஸ்வஸ்தி சூக்தங்கள், திருமுறைகள், வேதபாராயணம், மங்கல வாத்தியங்கள் ஒலிக்க இரதத்தில் ஆரோஹணம் செய்து நகர்வலம் வந்து வணங்க வேண்டும் என்பது சதாபிஷேக சாந்தியாகும். சிறப்பாக விழாவும் பட்டர் பெருமானாகிய சிவசார்யப் பெருந்தகை பெண்ணி நல்லாளுடன் பல்லாண்டு வாழ அன்னை ஸ்ரீ நாகபூசணி அம்மை திருப்பாதங்களை மனமொழி மெய்யால் வணங்கி சிவாசார்ய பட்டர் பெருமானை வாழ்த்தி இறைஞ்சுவாம்.

*"ஒருமைக் கண்தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"*

ஒருவன் ஒரு தலைமுறையில் கற்கும் கல்வியினால் வரும் பெருமையும் புகழும் அவனுக்குப் பின்னால் ஏழு தலைமுறைக்கும் தொடர்ந்து வரும்.

# குருமணியின் கிரியை நெறி

பிக்ஷாடன. சந்திரசேகரக் குருக்கள்
வாய்க்காற் தரவை
பிள்ளையார் கோவில், நீர்வேலி.

அடக்கமான பேச்சு, அருட்பார்வை, சிவரூபமான தோற்றம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர் எங்கள் குருமணி சிவஸ்ரீ சுப்பிரமணிய பட்டர் அவர்கள். கல்வி கேள்வியாலும், பல தேவஸ்தானங்களில் பணி புரிந்த வாய்ப்புகளினாலும், சித்தாந்த ஸரபம் ஈஸான சிவாசாரிய சுவாமிகள் போன்ற பெரியோர்களின் சேர்க்கையாலும் பூரண அறிவு பெற்றவர். பரார்த்தக் கிரியைகளில் பிரமாணப் பிரயோகம் சம்பிரதாயம் ஆகிய அனுசரணைகளையும் பின்பற்றி தனது சிஷ்யர்களையும் நெறிப்படுத்தி வைக்கும் பண்புமிக்கவர்.

இவற்றில் எடுத்துக்காட்டாக சிலவற்றைக் கூறினால் பொருத்தமாக இருக்கும். சிவபெருமானுக்கு ஏகாதசருத்ர அபிஷேகஞ் செய்யும் பொழுது கும்பங்களை லிங்கத்தை தவிர்த்து அவுடையார் (பிண்டிகை)க்குத் தான் செய்ய வேண்டும் என்று சில இடங்களில் கூறப்பட்டுள்ளது. ஆனால் எந்தச் சிவமூர்த்தத்திற்கு செய்கின்றோமோ அந்த மூர்த்தியை ருத்ர ரூபமாக ஆவாஹனஞ் செய்தால் லிங்கத்துக்கு மேல் அபிஷேகஞ் செய்யலாம் என்று அவர்கள் கூறுவார்கள்.

மஹோற்சவங்கள் நடக்கும் ஆலயங்களில் மஹாயாக ஹோமகுண்டங்களில் அக்னி அவியாமல் இருப்பதற்குத் துணையாக ஹோமாக்னியில் இருந்து ஏற்றப்பட்ட தூண்டாமணி விளக்கை வைத்துக் கொண்டால் தற்செயலாக குண்ட அக்னி அவிந்தாலும் அக்னி விச்சின்னமின்றி பேணப்பட்டுவிடும். இவ்விதம் பல உதாரணங்கள் அவர் கையாண்டு வருகிறார்கள்.

எப்படி ஆன்மார்த்த பூஜைகள் ஒருவர் தனது ஆத்ம ஈடேற்றத்துக்காக செய்கிறார்களோ அவ்வாறே பரார்த்த பூஜைகள், கிரியைகளும் உலக ஜீவராசிகளின் ஈடேற்றத்துக்காக கிரியாலோபம் மந்த்ர லோபமின்றி செய்ய வேண்டும் என்ற கொள்கை உடையவர். இவ்வாறான ஆசார்யலக்ஷணங்களோடு அமையப் பெறும் குருமணி அவர்களுக்கு வைர விழா எடுப்பதை இட்டு அவர் குடும்பத்தாரும் மாணவர்களும் பெருமைப்பட வேண்டும். அவர்கள் இன்னும் பலகாலம் எங்களோடிருந்து வழி நடத்த எல்லாம் வல்ல குருக்களவர்களின் நெஞ்சை விட்டகலாத கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வரப் பெருமானை பிரார்த்திப்போமாக.

# ஆயிரம் பிறைகண்ட பட்டர் ஐயா

சு. கைலாசநாதக்குருக்கள் (பாப்பாக் குருக்கள்)
கொட்டாஞ்சேனை, கொழும்பு

சிவஸ்ரீ சுப்பிரமணியபட்டர் என்ற திரு நாமம் உடைய பட்டர் ஐயா அவர்கள் "வேதாதி நாணா வித மந்நிரதந்திர முத்ராகிரியா சில்ப சுவாக் சுவரூபம் ஆசாரயுத்தம் சுகுணம் சுருபம் ஆச் சார்ய மாகு சிவமாதிசைவ" என்ற சிவாகம வாக்கியத்திற்கமைய மாதொருபாகனார்க்கு வழிவழியடிமை செய்யும் வேதியர் குலமாகிய ஆதி சைவப்பரம்பரையில் உதித்தவர். தென்னிந்தியாவில் திருநெல்வேலி அருள்மிகு வெல்லையப்பார் ஆலயத்தில் ஸ்ரீமத் காந்திமதியம்பாள் சமேத நெல்லை நாதருக்கு பூஜை வழிபாடு செய்யும் பரம்பரையைச் சேர்ந்தவர். இற்றைக்கு சுமார் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்கு ஆலய வழமைப்படி இந்திய பரம்பரையில் உள்ள சிவாச்சாரியார்களை பூஜைக்கு அழைத்து வரச் சென்ற போது ஆலய தர்மகர்த்தாக்கள் பட்டர் அவர்களின் தந்தையார் சிவஸ்ரீ சதாசிவப்பட்டர் அவர்களை அழைத்துவந்தார்கள். அந்தக்காலத்தில் எனது தந்தை சுப்பிரமணியக்குருக்கள் உடன் சேர்ந்து ஆலயத்தில் பூஜா கைங்கர்யம் செய்து வந்தார். எனது தந்தையாருக்கு உதவியாக அமரர் சிவகடாக்ஷக் குருக்கள் (ஜிந்துப்பிட்டி) கடமையாற்றினார். பட்டர் அவர்களுடைய சகோதரர்கள் சங்கரபட்டர், முத்துச்சாமிபட்டர், ஹரிஹர பட்டர் ஆகியோர் காலத்திற்கு காலம் வந்து தங்கள் தகப்பனாருக்கு உதவியாக கடமை யாற்றினார்கள். அவர்கள் காலாகாலங்களில் தாய் நாடு சென்று விட பட்டர் அவர்கள் உதவிக்காக கடமையாற்றிவந்தார். எனது தமயனாருடன் அத்யந்த நண்பராக தங்கள் தந்தையர்களுக்கும் உதவியாக பணிசெய்து வந்தார்கள்.

பெரியோர் இருவரும் சில சாயுஜ்யம் அடையவே அவர்கள் தனயன்கள் இருவரும் அந்த இடத்திற்கு தகுதிபெற்று நித்திய நைமித்திக பூஜைகளை நிறைவேற்றி வந்தார்கள். வைத்தீஸ்வரர் ஆலயம் 1952ம் ஆண்டு தை மாதம் மகாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியது. அப்போதைய தர்மகர்த்தாக்கள் கும்பாபிஷேகத்தில் தொண்டாற்றவும் தொடர்ந்து நித்திய நைமித்திய பூஜைகளை நிறைவேற்றவும் கொழும்பிலிருந்து எனது தமயனாரை அழைத்தார்கள். தொடர்ந்து ஆலயத்தில் பட்டர் சேவை செய்ய எனது தமயனார் ஜிந்துப்பிட்டி ஆலயம் விட்டுச் செல்ல முட்யாத நிலை ஏற்பட்டது. மஹோற்சவ காலங்களிலும் ஏனைய விசேஷங்களிலும் சென்று சேவைசெய்து வந்தார்.

அப்பொழுது நான் எனது தமயனாருக்கு உதவியாக ஜிந்துப்பிட்டி ஆலயத்தில் பணியாற்றினேன். வண்ணை ஆலய தர்மகர்த்தாக்களும் பட்டர் அவர்களும் தமயனார் வரமுடியாத நிலையால் என்னை யாழ் அழைத்துச் செல்ல விரும்பினார்கள். 1953 பங்குனி மாதம் அளவில் யாழ் சென்று வண்.சிவன் கோவிலில் பட்டர் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றி வந்தேன். சிறு வயதிலேயே அவருடன் பழகிய தன்மையால் இருவரும் உற்ற நண்பர்களாகவும் வேறுபாடுகள் இன்றியும் நித்திய நைமித்திய தொண்டுகளைச் செய்துவந்தோம்.

அவர் ஆலய சேவைக்கு வருமுன் வைத்தீஸ்வரர் ஆலயத்தையும், திருக்கேதீஸ்வர ஆலயத்தையும் தனது இரு கண்களைப்போல் நினைத்த அமரர் பசுபதிச்செட்டியாரும், சேர் கந்தையா வைத்தியநாதனும் பட்டரை கேதீஸ்வரநாதருக்கு பணிபுரிய திருக்கேதீஸ்வரம் கூட்டிச் சென்றார்கள். பட்டரும் கேதீஸ்வரப்பெருமான் பூஜா கைங்கர்யங்களை நிறைவேற்றிக் கொண்டு குடும்பம் தழைத்தோங்க பெரும் பிரபல்யமும் பெற்று வாழ்ந்தார். அதே சமயம் தன்னுடைய ஸ்தானத்தில் தன்னுடைய புத்திரன் கண்ணப்பாக் குருக்களை நியமிக்கச் செய்து மற்றொரு புத்திரன் கைலாசத்தையும் உதவியாகச் சேர்த்து ஆலயக் கிரியைகளில்

நல்ல பரிச்சயம் அடையச் செய்தார். தற்சமயம் இருவரும் முறையே கொழும்பிலும் பதுளையிலும் ஆலயங்களில் சேவைபுரிகிறார்கள்.

நானும் பட்டரும் பிரிந்தாலும் வண்.சிவன் கோவிலில் அஷ்டக் கிரக சேர்கையின்போது ஆலயத்தில் மிகவும் சிறப்பான முறையில் இறைவனுக்கும் இறைவிக்கும் நடந்த சகஸ்ரசங்காபிஷேகத்தில் இறைவனுடைய சங்காபிஷேகத்தை பக்தி பூர்வமாக சிறப்பாகச் செய்தார். நானும் வண்.சிவன் கோவில் கைங்கர்யத்தில் இருந்து விலகவே இருவரும் பல கும்பாபிஷேகங்கள் உற்சவங்களில் சேர்ந்து தொண்டாற்றினோம். கொழும்பிலும் அவ்வாறே இருவரும் பல பூஜா கைங்கர்யங்களில் எங்கள் வயதுக்கேற்ற சூழ்நிலையில் தொண்டு செய்து வருகிறோம்.

சில வருஷங்களுக்கு முன் பட்டருடைய புத்திரன் கைலாசக்குருக்கள் வண்.சிவன் கோவிலில் கொஞ்ச காலம் தொண்டாற்றி நிர்வாகம் மாற விலகிக்கொண்டார். என்றாலும் கைலாசத்துக்கு அந்த ஆலய வழிமுறைகளைப் பயிற்றுவித்து உடன் இருந்து பட்டரும் சேவை செய்தார். ஆகவே மூன்று தலைமுறை கைங்கர்யம் வண்.சிவன் கோவிலில் செய்த பெருமையை பட்டடர் குடும்பம் பெற்றுள்ளது.

இலங்கையில் பட்டர் ஐயா என்று அழைத்தால் இவர் ஒருவரையே குறிக்கும். பட்டர் என்று நாமம் கூற வேறு ஒருவரும் இல்லை. எங்களைப் போன்ற சிவாச்சாரியார்கள் பட்டர் மாமா, பட்டர் அண்ணா என்று கூறுவோம். யாழ்ப்பாணத்திலும் இலங்கையிலும் உள்ள சைவப்பெருமக்கள் எல்லோரும் பட்டர் ஐயா என்றே கூறுவார்கள். பட்டர் தம்பி என்று அழைக்கக்கூடிய வயது நிறைந்த சிவாச் சார்யர்கள் இலங்கையில் இல்லை என்றே நினைக்கிறேன். ஆகவே இன்னும் பலகாலம் நோயற்ற வாழ்வு வாழ்ந்து பல சிவ கைங் கர்யங்களை செய்தும் செய்வித்தும் நூற்றாண்டு விழாவையும் கொண்டாட அவருக்கு நோயற்ற நீண்ட ஆயுளைக் கொடுக்கும்படி ஸ்ரீ வைத் தீஸ்வரப் பெருமானினதும் ஸ்ரீ கேதீஸ்வரப் பெருமானினதும் பாதகமலங்களை நமஸ்கரித்து பிரார்த்திப்பதுடன் அவருடைய சதாபிஷேக விழாவில் எனது பணிவான வணக்கத்தை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

*நத்தார் படை ஞானன்பசு ஏறிநநனை கவிழ்வாய*
*மத்தம்மத யானையுரி போத்த மணவானன்*
*பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்*
*செத்தாரெலும் பணிவான் திருக் கேதீச்சரத்தானே.*

– சுந்தரமூர்த்தி நாயனார்.

# சதாபிஷேகங் காணும் சிவஸ்ரீ சுப்பிரமணியப் பட்டர் அவர்கள்

சி. குஞ்சிதபாதக் குருக்கள்.
(சிவாகம சிரோமணி, பிரதிஷ்டா கலாநிதி)
பொன்னம்பல வாணேசர் கோயில், கொழும்பு

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய மகாகும்பாபிஷேக யாக சாலையில் அமர்திருக்கின்றேன். எனக்கு அடுத்த யாகத்தில் ஒரு குருக்கள் அமர்ந்திருந்தார். தனது கிரியைகளைப் படாடோபமில்லாமல் பக்தி சிரத்தையுடன் செய்தார். அவர் பேசுவது மிகவும் குறைவு. கதைத்தால் மட்டும் பதில் கிடைக்கும். மற்றப்படி புன்முறுவல் பூத்த முகத்துடன் அவர் காணப்படுகின்றார். யாக சாலைக்கிரியைகள் நிறைவெய்தியதும் குருக்கள் அவர்களுடன் உரையாடினேன். கேள்விக்கான பதிலை மிகவும் அளவோடு தந்தார். இப்பொழுது நாம் ஒருவரை ஒருவர் இன்னார் எனப் புரிந்து கொண்டோம். நான் இதுகாலும் எடுத்துரைத்த குருக்களே சிவஸ்ரீ சுப்பிரமணியப்பட்டர் அவர்கள். பட்டர் ஐயா அவர்களின் தொண்டு திருக்கேதீஸ்வரத்திலும், எனது தொண்டு பொன்னம்பல வாணேஸ்வரத்திலும் இருந்தமையே நாம் யார் என புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கவில்லை எனலாம்.

பின்னர் எமது நட்பு நீடித்தது. நான் சத்தி ரச்சிகிச்சைக்கு உட்பட்டிருந்தவேளை தமது குடும்பத்துடன் வந்து சுகம் விசாரித்தார். மஹாசிவராத்திரி காலத்தில் எமது ஆலயத்திற்கு வந்து தாமே ஸ்ரீருத்திர ஜெபஞ் செய்து கொண்டிருப்பதையும் கண்டுள்ளேன். பட்டர் ஐயாவின் பணிகளை ஈண்டு நோக்குவோம்.

**குருகுலப்பணி:**

பட்டர் ஐயாவின் பணி குருகுல முறையில் அமைந்துள்ளதால் அவர் ஒரு சிவபக்தராகத் திகழ்கின்றார். தமிழ்நாடு திருநெல்வேலி சிவஸ்ரீ சதாசிவப்பட்டர் அவர்களின் புத்திரர் இவர். தந்தையின் விருப்பத்திற்கமைய தமது 10ம் வயதில் காஞ்சீபுரம் வேதாகம பாடசைலையில் கல்வி கற்றுத் தேறினார், பட்டர் ஐயா அவர்கள். அதன் பின் பழனி ஈசானிய வேதாகம பாடசாலையில் ஆசிரியராக பணி புரிந்தார். இலங்கையில் திருக்கேதீஸ்வரம் குருகுலத்தில் ஆசிரியராகக் கடமை புரிந்து வேதாகமக் கல்வி வளர்ச்சிக்கு உதவியுள்ளார்.

**ஆலயப்பணி:**

தூத்துக்குடி சிவாலயம், நெல்லையப்பர் சிவாலயம் ஆகிய சிவாலயங்களில் ஆசாரியாகப் பணி புரிந்துள்ளார். பின்னர் தமது தந்தையுடன் இலங்கை வந்து யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர கோயிலில் சிவப்பணி புரிந்துள்ளார். இவ்வேளையில் திருக்கேதீஸ்வர நாதருக்கு ஒரு குருக்கள் தேவைப்படவே சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் இவரைத் திருக்கேதீஸ்வர நாதரின் பணிக்கு நியமித்தார். இங்கு 40 வருடங்கள் உன்னத சிவப்பணி புரிந்தார். முதுமை நிலை காரணமாக தமது புத்திரன் கண்ணப்பன் குருக்களை நியமித்துவிட்டு ஓய்வு பெற்றார்..

**சிவப்பணி:**

ஆலயப்பணிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும் பிராமண சமுகப்பணியில் இன்னும் முன் னின்று பணி புரிவது அவரின் கடமையுணர்ச்சிகளை எடுத்தியம்புகின்றது. அன்னபிராசானம், உபநயம், திருமணம், சீமந்தம் போன்ற கிரிகைகளில் பட்டர் ஐயா அவர்கள் பங்கு கொண்டு சமூகப்பணி புரிவது சிறப்பான ஒரு காரியமெனலாம்.

பட்டர் ஐயாவை பலதுறை விற்பன்னராக இதுகாலும் கண்ணுற்றோம். எமது சமய வாழ்வில் ஒருவர் பிறந்தால் வருடாவருடம் ஆயுஷ்ய ஹேமம் செய்ய வேண்டும். பின்பு 60, 70, 80, 90, 100 வயதுகளில் அந்த அந்த ஹேமங்களைச் செய்வதால் ஆயுட்பலன் கிட்டுகின்றது. இந்த வழியில் சிவஸ்ரீ சுப்பிரமணியப்பட்டர் ஐயா அவர்கள் தமது 80 வயதில் சதாபிஷேகம் பெறுகின்றார். இதனை அவர்களின் புத்திரர்கள் ஒழுங்கு செய்துள்ளமை பாராட்டுதற்குரியது. பட்டர் ஐயா அவர்களின் சிறப்புப் பணி மேலோங்க வேண்டும் . அவரின் சமூகப்பணிகள் வளர வேண்டும் இதற்கான அருளை எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரப்பெருமான் நல்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

# லட்சிய புருஷர்

சிவஸ்ரீ து. சுந்தரமூர்த்தி குருக்கள் (B.A லண்டன்)
(தத்புருஷ சிவாச்சாரியார்) – மாவிட்டபுரம்.

*அஜ்ஞாந திமிராந்த சக்ஷுருந்மீலிதம்*
*ஆகம சாஸ்த்ரார்த்த தர்மஞான விபும்*
*இஷ்டா பூர்த்தி பல ப்ரதா கிரியா மணிம்*
*ஈஸ வாக் பலித காரா பதம் வந்தேஹ ஸதாபு*

தமிழ்நாடு திருநெல்வேலி ஜில்லாவில் ஜனித்து, இருபத்திரண்டாவது வயசில், வேதாகம சாஸ்திரங்களை நன்கு கற்றபின் இலங்கைக்கு பட்டர் ஐயா அவர்கள் விஜயம் செய்தார்கள். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் அர்ச்சகராக அப்போது கடமை புரிந்து தமது தந்தையாருக்கு உதவி அர்ச்சகராக தமது முதற் பணியை மேற்கொண்டார். பின்னர் அன்று முதல் இற்றைவரை இலங்கையில் பல சேஷத்திரங்களில் குருத்துவம், சமூகப்பணி ஆகியவற்றை இயற்றி வருகின்றார். தமது குடும்ப வாழ்க்கையை இலங்கையிலேயே அமைத்துக்கொண்டார்.

இவர் வைதீக ஆகம கிரியைகளை மிக்க நம்பிக்கையுடனும், பக்தியுடனும், ஆற்றிவருவது நம் அனைவருக்கும் தெரியும். செய் கருமத்தின் பூரண பலனைப்பெற விரும்புவோர், பட்டர் ஐயாவையே நாடிச் செல்வர். ஏனெனில் ஐயா அவர்கள் லட்சிய புருஷர். நம் குறைகளை நிவர்த்தி செய்வதற்குரிய சாஸ்திர பிரமாணம், கிரியை முறை, பயன் என்பனவற்றை விளக்கமாக கூறுவார். அதன் பின்னர் தான் அக் கைங்கரியத்தைச் செய்ய ஒப்புக்கொள்வார்.

பட்டர் ஐயா அவர்கள், பிரதிஷடர் குரு, வித்யா குரு, தீக்ஷா குரு, உற்சவ குரு என பல தரப்பட்ட அம்சங்கள் பொருந்தியவர். ஈழத்தின் பாடல் பெற்ற ஸ்தலங்கள் முதலாக பல ஆலயங்களில் கும்பாபிஷேகங்கள் உற்சவங்கள் நடத்தியும் மாணவருக்கு சாஸ்த்திர வித்தை கற்பித்தும் உபநயனம் ஆசார்யாபிஷேகம் சமய தீட்சை முதலிய நற்கருமங்களைச் செய்து தம் குருத்துவ கடமைகளை நிறைவேற்றுகின்றார்.

எவருடைய மனதையும் நோகவைக்கக் கூடாது, யாரையும் வஞ்சிக்கக்கூடாது, நமது கிரியைகள் மக்களுக்கு நற்பலனை பெற்றுத்தர வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியங்களையே அவர் கொண்டுள்ளார். அவரோடு சல்லாபிக்கும் போது மேற்கூறிய லட்சியங்கள் அவரின் தொனிப்பொருளாக வெளிவரும். தனது சிஷ்யர்களின் வாழ்க்கைச்சிறப்புகள் பற்றி கேட்டு அறிந்து மகிழ்வார். நேரில் சந்தித்தால் ஆசி கூறுதல், குசலம் விசாரித்தல், வாழ்க்கை நிலை பற்றி அக்கறையோடு கேட்டல் ஆகிய செயற்பாடுகளை அவரிடம் காணலாம்.

*"சர்வஸ்ய லோசனம் சாஸ்த்ரம்*
*வித்யா சர்வஸ்ய பூஷணம்"*

ஆலய கிரியைகளில் ஈடுபடும் போது செய்ய வேண்டிய அத்தனை கிரியைகளையும் செய்ய வேண்டும் அவசியமற்ற கிரியைகளை விலக்க வேண்டும், ஆடம்பரத்திற்காகவோ, வெறும் கவர்ச்சிக்காகவோ, கிரியைகள் செய்யப்படக் கூடாது என உறுதியாகச் சொல்வார். நவீனம் என்ற பேச்சுக்கே இடமில்லை. நம் முன் வாழ்ந்த பெரியோர்கள் காட்டிய வழியே நமக்கு நற்பயன் கூட்டும் என்ற கொள்கையை கடைப்பிடித்தவர். இத்தனைச் சிறப்புகளும் பொருந்திய நம் குருநாதர் பட்டர் ஐயா அவர்கள், நமக்காக சமய அனுட்டானங்களை நடத்துவதற்கேற்ற ஒரு குரு பரம்பரையையே இறைவன் அருளால் உருவாக்கியுள்ளார். நானும் அவ்வகையான பரம்பரையில் அங்கம் வகிக்கக் கூடிய வகையில் எனக்கு ஆசார்யாபிஷேகம் செய்து ஆற்றுப் படுத்தியமையை பெரும் பேறாக கருதுகின்றேன். இப் பெருமகனாரின் சிறப்புக்களை எழுத்து வடிவில் புனைய எனக்கு வாய்ப்பு கிடைத்தமை கிடைத்த்ற்கரிய பாக்கியமாக கருதி குருமணி அவர்களின் பாதங்களை வணங்குகின்றேன்.

சுபம் அஸ்து

# ஆயிரம் பிறைகண்ட அந்தணச் செம்மல்

"வேதாகம வித்யா பூஷணம்"
**பிரம்மஸ்ரீ விஸ்வநாராயணர்**

*"வைதேஹி ஸஹிதம் ஸுரத்துருமதலே*
*ஹேமே மஹா மண்டபே*
*மத்யே புஷ்பக மாஸநே மணி மயே*
*வீ ராஸநே ஸு ஸ் திதம்*
*அக்ரே வாசயதி பிரபஞ்சன சுதம்*
*தத்வம் முனிப்யப் பரம்*
*வியாக் கியாந்தம் பர தாதிபி பரிவிருதம்*
*ஸ்ரீ ராமம் பஜே சியா மனம்"*

(ராம பட்டாபிஷேக காட்சி)

இற்றைக்கு இரு தசாப்தங்களுக்கு முன் முதன்முறையாக, நயினை பிரதிஷ்டா பூஷனம் அமரர் சிவஸ்ரீ ஐ.கைலாஸநாதக் குருக்களுடன் இலங்கையின் அதிவிசேட சிவ ஸ்தலமானதும் ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய நாயன்மார்க ளால் தேவார பதிகம் பாடப்பெற்றதுமான மாதோட்ட நகர் உறை, கௌரியம்பாள் ஸமேத கேதீஸ்வரப் பெருமான் சன்னிதிக்கு செல்லும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது. அந்நாட் களில் மிகவும் பக்தி நிறைந்த சூழ்நிலையில் தென்னிந்திய சிவஸ்தலங்களுக்கு ஒப்பான சூழ்நிலைகளுடன் விளங்கிய திருத்தலம் திருக்கேதீஸ்வரம் என்றால் மிகையாகாது.

அவ்வாலயத்தில் கணீர் என்ற ஓசையுடன் கூடிய "சிவசங்கல்ப சூத்த" மந்திரத்தை உச்சரித் தவண்ணம் ஸ்ரீ கௌரி அம்பாளுக்கு அலங்கா ரம் செய்து கொண்டிருந்த "பட்டர் மாமா" என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் சிவஸ்ரீ சுப்பிரமணிய பட்டர் அவர்களை முதன் முதலாக கண்டேன். சிவந்த மெலிதான தோற்றம் தூக்கிச் செருகிய பஞ்சகச்சம், "கண்டமணி" திருநீற்றின் நடுவே சந்தனப் பொட்டுடன் கூடிய கருணை முகம், தளர்விலாத நடை இவைதான் இன்று சதாபிஷேக விழாக் காணும் பெரியாரின் அன்றைய தோற்றம்.

ஆலய புணருத்தாரண பணிகளை ஆரம்பிக் கும் விழாவில் கலந்துகொள்ள சென்றமையால், அன்பான வரவேற்பு. கண்டவுடனேயே "வாப்பா குழந்தே" எப்படி இருக்கிறாய்? குசலம் விசாரிப்பு. அன்பான அழைப்புடன் இல்லத்தில் இனிய உப சரிப்பு. இன்று விழாவினை நடாத்தும் "கண்ணப்பா" அன்று பிரம்ம தேஜஸ் நிறைந்து விளங்கும் பிரம்மச்சாரி. வீடு நிறைந்து மஹாலக்ஷ்மி போன்ற மாமி குழந்தைகள் என இன்று விழாக்காணும் மாமா அவர்களின் புண்ணியம் அன்றே ஸ்ரீ காந்திமதி நெல்லையப்ப சுவாமியினாலும், ஸ்ரீ கௌரி கேதீஸ்வரப் பெரு மானாலும் அருளப்பட்டுவிட்டதாகவே நம்ப இடமுண்டு.

மேலும், மாமா அவர்களை பிரதம குருவாக வரித்து யாழ் வண்ணை கதிரேசன் கோவில் கும்பாபிஷேகத்தில் எங்கள் அன்பும் அறிமுகமும் நெருக்கமாகியது. சுத்தமான மந்திர ஒலி, பக்தி யும், வரன் முறையடங்கும் வழிநிற்கும் கிரியா பாவம், நினைத்தால் மெய்சிலிர்க்கும் இன்ப நினைவுகள். தொடர்ந்து பலப்பல வைபவங்களில் நாங்கள் இணைந்து கொண்டோம். தான் கற்ற கல்வியில் நிறைந்த தெளிவு இன்றும் நான் அவரி டம் சென்று சில சந்தேகங்களைக் கேட்டறிவ துண்டு. அவரும் அதற்குரிய புத்தகங்களை ஆராய்ந்து தெளிவான பதில் சொல்லும் ஆற்றல் யாவுமே நல்லாசானுக்குரிய பெரும் பண்பு.

இன்று சதாபிஷேக விழாக் காணும் மாமா அவர்கள், எம்போன்றவர்கட்கு முன்னுதாரண மாய் வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கிறார். அவர் தன் குலக்கடமை, குடும்பக் கடமை என

இரண்டையும் நிறைவாகவே இன்றும் செய்து வருவதைக் காண்கின்றோம். அவரின் தவப்பயன் பிள்ளைகளும் "வையத்துள் முந்தி இருந்து", "இவன் தந்தை என்னோற்றான் கொல்" எனும் வள்ளுவர் வழி வாழ்ந்து வருவதை சைவ உலகம் நன்கறியும். சதாபிஷேகம் செய்வித்து சுவர்ணாபிஷேகம் செய்யும் குழைந்தைகளையும், மற்றும் எம்போன்றவர் களையும் தாம் போன்று ஸௌமங்களமாக வாழ வாழ்த்தியருள மாமா தம்பதியினரைப் பிரார்த் திப்பதே என்பணி.

ஆயிரம் பிறைகண்ட பெரியார் இன்றும், ஆத்மார்த்த பரார்த்த பூஜைகளை வழுவாது ஆற்றும் சிவாச்சாரிய சிரேஷ்டர் அவர்கள், நூற்றாண்டு காலம் நோய்நொடியில்லாமல் வளர்ந்து இன்றுபோல் பட்டாபிஷேகம் கண்ட ஸ்ரீ இராமச்சந்திர சுவாமிபோல் இருப்பதற்கு அனுக்கிரஹிக்க வேண்டுமாய் அன்னை துர்க்காதேவியின் அருளைப் பிரார்த்திக் கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

☆ ☆ ☆

*சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின்*
*ஆரள வில்லா அளவு சென்றாறாரம் பலத்துணின்ற*
*ஓரள வில்லா வொருவன் இருங்கழல் உண்ணினர் போல*
*ஏரளவில்லா அளவின ராகுவர் ஏந்திழையே.*

– திருக்கோவையார் (கல்விநலம்)

☆ ☆ ☆

# குருவருளும் திருவருளும்

ஸ்ரீ ஐயப்பதாஸன்
சாம்பசிவ சரவணபவக் குருக்கள்
தலைவர் - இலங்கை பிராமண சமாஜம்

*குரு பிர்ம்மா குரு விஷ்ணு குரு தேவோ மஹேஸ்வர:*
*குரு சாக்ஷாத் பரப்பிர்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம:*

பிர்மாவாக விஷ்ணு வாக மகேஸ்வரனாக பரப்பிர்மமாக விழங்குகின்றவரே குரு! அந்த குருவை நாமும் வணங்கி குருவருளும் திருவருளும் பெறுவோமாக!

**படைத்தல் தொழில் புரிவார் பிரம்மா!**

படைத்தல் என்பது இல்லாத ஒன்றை உண்டுபண்ணுவது. மாணவனுக்கு மெய்ஞானத்தை உண்டுபண்ணுவதால் குருபிர்மாவாகிறார்.

**காத்தல் தொழில் புரிவார் விஷ்ணு !**

உண்டு பண்ணப்பட்ட மெய்ஞானத்தை நெறிவழுவாது கடைப்பிடித்து சிந்தனைகளை தீயவழி செல்லாது காக்கும் **குரு விஷ்ணு வாகிறார்.**

**அழித்தல் தொழில் புரிபவர் (மகேஸ்வரன்) ருத்திரன்**

மாணவனுக்கு அக்ஞான இருளை நீக்கி ஞானஒளியை கொடுப்பவர் குரு. தீயவற்றை அழிப்பதனால் **குரு(மகேஸ்வர) ருத்திரனாகிறார்.**

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் தொழில்களைப் புரிவதனால் குருவே சாக்ஷாத் பரப்பிர்மமாகிறார். எனவே குருவை வணங்கி குருவருளைப்பெற்றால் திருவருள் தானே கிட்டும்.

திருவருளைப் பெறவேண்டுமானால் குருவருள் வேண்டும்.

*தெளிவு குருவின் திருமேனி காணல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் சொல்லல்*
*தெளிவு குருவுரு சிந்தையில் தானே.!!.*

எந்தவொரு துறையிலும் அனுபவம் பெற்று அதில் பிறருக்கு வழிகாட்டியாக இருப்பவர்கள் "வல்லுனர்கள்" என்றும் "தலைவர்கள்" என்றும் வழிகாட்டிகள் பெயர் பெற்று விளங்குதல் தெழிவு.

அதுபோல ஞானானுபவம் மிக்கவர்களாய்ப் பிறருக்கு ஞானத்தை அளிக்கவல்ல அருளாளர்கள் 'குரு' என்றும் 'ஆசாரியார்' என்றும் ஆசிரியர் என்றும் பெயர் பெற்று விளங்குவர்.

குரு என்பதன் பொருள் கு + ரு. கு : - அஞ்ஞானம் ரு : - நீக்குதல். எனவே அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை கொடுப்பவர் குருவே!

'ஆசார்யர் என்பதன் பொருள் : நல்லொழுக்கத்தை நெறிதவறாது கடைப்பிடித்து, பிறரையும் நல்வழியில் நடத்தவிப்பவர் ஆசாரியர் ஆவர்.

'ஆசிரியர்' என்பது ஆசு + இரியர். குற்றத்தை நீக்குபவர் பிறருடைய குறைகளை, அறியாமையை அஞ்ஞானத்தை நீக்கி நல்வழி படுத்தி மெய் ஞானத்தைக் கொடுப்பவர் 'குரு', ஆசார்யர், ஆசிரியர் எனப்படுவர்.

*மாதுர் தேவோ பவ!*
*பிதுர் தேவோ பவ!*
*ஆசார்ய தேவோ பவ!!*

அன்னையை, தந்தையை, குருவை வணங்கி போற்றுதல் வேண்டும்.

மாதா, பிதா, குரு, தெய்வம், என்பர்.

முதலில் தாய், பின் தந்தை அதன்பின் குரு, குருவருள் பெற்றவன் திருவருளுள் பெறுவான்.

*உடலைக் கொடுத்தவள் தாய்*
*உயிரைக் கொடுத்தவன் தந்தை*
*ஞானத்தைக் கொடுப்பவன் குரு*
*அருளைக் கொடுப்பவர் இறைவன்.*

ஒரு குழந்தைக்கு தாய்தான் தந்தையைக் காட்டுகிறாள்.

அந்தத் தந்தை குருவைக்காட்டி குருவிடம் குழந்தையை ஒப்படைக்கிறார்.

குரு இறை அருளை காட்டுகிறார்,

குழந்தை குருவருளைப் பெற்றபின் இறைவனை அடைகிறது,

எந்தவொரு வித்தைக்கும் குரு அவசியம் "குரு இல்லா வித்தை பாள்" என்பது பழமொழி.

சித்தர்கள் தாங்கள் பெற்ற ஞான அனுபவங்களை நமக்கு புரியாதபடி பாடிவைத்து விடுகிறார்கள்.

திருமூலர் : –

*எழுதாத புத்தகத்து ஏட்டின் பொருளை*
*தெருளாத கன்னி தெரிந்திருந்து ஓத*
*மலராத மொட்டின் மணத்தின் மதுவை*
*பிறவாத வண்டு மணம் கண்டவாறே!*

என்கிறார்.

எழுதாத புத்தகத்திற்கு ஏடு ஏது? பொருள் ஏது? தெருளாத கன்னி எப்படி தெளிந்து ஓதினாள்? மலராத மொட்டுக்கு மணம் ஏது? பிறவாதவண்டு எப்படி மணத்தோடு கூடிய தேனை உண்ணும்?

நமக்கு ஒன்றும் புரியவில்லை. இவை நமக்குப் புரியாது என்பது திருமூலருக்கே தெரிந்துள்ளது.

எனவே 'நல்ல குருவை நாடிக்கேள்' என்று நமக்கு வழியும் செல்லிக் கொடுக்கிறார்.

*விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்*
*விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே!*

நமக்கு எது? எது? புரியவில்லையோ, அதை நாம் குருவை நாடி அருளைப் பெறவேண்டும்.

குருவருள் கிடைத்தால் திருவருள் கிட்டும்.

*மந்த்ர சக்தியினால் விஷசக்தி எவ்வாறு*
*நீங்குகிறதோ, அவ்வாறே நிர்வாண*
*தீக்ஷையானது ஆன்மாக்களுக்கு அனாதியே*
*யுண்டான மலசக்தியைப் போக்கி*
*சிவதவம் உண்டாகச் செய்கிறது.*

– அகோர சிவாச்சார்யர்

# நலம் தரும் ஆவினமும் அந்தணர் குலமும்

கானப்ரியா
பாரத்வாஜி **செ. நு. நடராஜ சர்மா.**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் எங்கும் எப்பொழுதும் நலமுடன் வாழவே விரும்பிச் செயல்படுவதைக் காணலாம். அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் பெறப்பல வழியிலும் செயல்படுவதைக் காண்கின்றோம். இவற்றின் இயல்பினையும் உண்மை நிலைப் பாட்டையும் அறிவதற்கும் அதனைப் பெறுவதற் கும் பல வழிகள் உண்டு. இவை அனைத்திற்கும் ஆதாரமானது சிறந்த கல்வியே ஆகும்.

மனிதன் கற்க வேண்டியவை என்ற வரையறையும் உண்டு. இவற்றைச் சீராகவும் குற்றமறவும் கற்று அறிந்த நெறியில் கடைப் பிடித்து ஒழுகுதல் மிகவும் வேண்டப்படுவதாகும். கல்வி அடக்கமுடையவனாக்கும். அடக்க முடைமை ஒருவனை சத்பாத்திரமாக உருவாக் கும். அதன் மூலம் அவன் தனம் என்னும்செல் வத்தை அடைகிறான். செல்வம் பெற்றவன் அறவழியில் நடந்தாலே, அதாவது செல்வத்தை கடமையுணர்ந்து செய்ய வேண்டியவற்றிற்கு செலவிட்டாலே அவன் சுகமான நல்வாழ்வைப் பெறுவான் எனச் சான்றோர் அறிவுரை கூறுகிறது.

மனிதர்களின் நலத்திற்கு உதவியாக பல்வேறு உயிரினங்களும், தாவரங்களும் பலவகைகளில் முறையாகச் செயல்பட்டு வருகின்றன என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். இவற்றின் செயற்பாடுகள் நடை பெறாவிடில் மனிதனது வாழ்வு இருண்டு போவதையும் துன்பத்திற்கு இலக்காவதையும் கண்டு வருகிறோம்.

தான் மட்டும் வாழ்ந்தால் போதாது, மற்றவர் களும் நிறைவுடன் வாழ வேண்டும் என்ற கடமை உணர்வு நம் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டியது அவசியம். நாம் ஒவ்வொருவரும் பிறருக்குப் பலவகைகளில் கடமைப் பட்டிருக் கிறோம் என்பதை அறிவது முக்கியமாகும்.

நாட்டை ஆண்ட மன்னர்கள் சீரான ஆட்சி நடத்தி ஆவினமும் அந்தணர்களும் நன்கு வாழ வழி வகுத்ததுடன் மக்களுக்கு அவர்கள் நன்மைபயப்பதில் நாட்டம் கொண்டு செயல்பட்டதை எல்லோரும் அறிய முடிகிறது. உலகில் வாழும் பிராணிகளில் பசு என்று சொல்லப்படுகின்ற புனிதமான இனமே மிக அதிகமாக உள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது.

வள்ளுவப் பொருந்தகையின் வாக்கின்படி உள்ளவற்றை அறிவோம். காவலன் நாட்டைக் காப்பது அவசியம்.

*"ஆ பயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர் காவலன் காவானெனின்"*

– குறள்.

நாடு செழித்து வளம்பெற பசுக்களும் அந்த ணர்களும் இன்றியமையாதவர்கள். இவைக ளின் சேவையும் அளிக்கும் பயனும் அரும் பெரும் சிறப்புச் செல்வங்களாகும்.

மகாபாரதத்தில் அநுசாஸன பர்வத்தில் பசுக்களையும் அந்தணர்களையும் பற்றி சிறப்பான விளக்கங்கள் உண்டு. அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு :

"அந்தணர்களும் பசுக்களும் ஒரே குலம் அவை இரண்டு வகைகளாக விளங்குகின்றன. வேள்விகளுக்குரிய வேதமந்திரங்கள் அந்தணர் களிடமும், வேள்விக்குரிய அவிப்பொருளுக் கான மூலப் பொருளான பால் பசுக்களிடம் இருக்கிறது"

சமய நெறியை வள்ளுவரும் வலிபுறுத்தி யுள்ளார். சமய நெறிக்கு நிலைக்களனாகவும் இன்றியமையாததாகவும் உள்ளது இறை

வழிபாடும் வேள்விகளும் என்பது மறுக்க முடியாதவைகளாகும். எமது சமயாசாரியார் களும், நாயன்மார்களும், தெய்வப்புலவர்களும் தங்கள் வாக்கினால் சிறந்த அறிவுரைகளை வழங்கியுள்ளனர்.

எத்தகைய சமய நிகழ்ச்சிகளிலும் தெய்வ வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும் முடிவில் மக்களின் நல்வாழ்க்கையை ஒட்டியே சிறந்த வாழ்த்துக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆலய பூஜை முடிவில் பின்வரும் வாழ்த்து வழங்கப் படுகிறது.

*"ஸ்வஸ்திப்ரஜாப்ய : பரிபாலயந்தாம்*
*ந்யாய்யேனமார்க்கேண ம ஹிம் மஹீசா :*
*கோப்ராம்மணேப்யஸ்ஸுப மஸ்து நித்யம்*
*லோகாஸ்ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து"*

திருஞானசம்பந்தப்பெருமானவர்கள் பாடியுள்ள

*"வாழக அந்தணர் வானவராயினும்*
*வீழ்கதண்புனல் வேந்தனும் ஓங்குக*
*ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே*
*சூழ்க வையகமும் துயர்தீர்க்கவே"*

என்ற பாசுரமும் இதனையேகூறுகின்றது.

பசுக்காத்தலும் அந்தணர்களைப் போற்றி வருவதும் காலங்காலமாக நடந்துவரும் செயல் கள் ஆகும்.

அந்தணர் குலத்தோர் தாம்கற்ற நெறிப்படி செயல்களைச் செய்து ஒழுக்கம் நிறைந்தவர் களாக வாழ்ந்து வந்ததைக்காணமுடிந்ததை யாவரும் அறிவர்.

*" அந்தணர் என்போர் அறவோர் எவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டு ஒழுகலார்"*

என்பது வள்ளுவரின் வாக்கு.

இன்றியமையாத செயலும் கடமையும் அவர்களுக்கு உண்டு. வேதம் ஓதியும் வெண் ணூல் பூண்டும் சிவ நாம ஜபம் செய்யும் சிறப்பான செய்கையில் ஈடுபட்டு வரும் அந்தணர்கு லத்தோர் அனைவரும் பிறர் நன்மைக்காக வாழ்பவர்கள். என்பதில் ஐயம் ஏதும் இல்லை. பிறப்பொழுக்கம் குன்றாது அந்தணர்கள் வாழ்வதன் மூலம் மக்கள் நன்மை பெற எல்லோரும் வழி கோல வேண்டியது அவசியம்

*நல்ல மனமே நல்ல மனிதனாக*
*வாழ வழி வகுக்கும்.*

வேத கால முனிவர்கள் அரசவை அமைச் சர்கள் மன்னர்களால் போற்றப்பட்டு சீரான நெறியில் வாழ்ந்து நன்மை மிகுந்து தீமை விலக பாடுபட்ட வரலாறு நிறைய உண்டு.

இத்தகைய மரபில் வந்த அந்தணர்கள் பலர் எம் நாட்டில் வாழ்ந்து நல்ல வாழ்வுக்குகென வழிகாட்டிச்சென்றுள்ளனர். அந்த மரபினர் குடும்பத்தில் பல தலைமுறைகளைச் சேர்ந்தவர்களை நம்மில் பலர் கண்டுள்ளனர்.

குருவாகவும் மரபு வழுவாத நெறி முறையு டைய அந்தணர்கள் நம்மிடையே பலர் உள்ள னர். அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று நூறாண்டு காலம் வாழவேண்டும் என உமாமகேஸ்வரப் பெருமானை வேண்டி அவர்களுக்கு அஞ்சலி செய்வோமாக.

இத்தகைய பெரும் சிறப்புக்களுடன் கூடி அந்தண சிரேஷ்டராக விளங்கும் சிவாச்சாரியார் சுப்பிரமணிய பட்டரும் அவரது குடும்பத்தவரும் நூறாண்டுகளையும் கடந்து சுகமாக வாழ வேண்டும் என இறைவனை வேண்டிக்கொள் ளுகின்றேன்.

"சாதுனாம் தரிசனம் புண்யம்
என்பது உயரிய வாக்கு.
நல்லோரைக்காண்பதும்
அவருடன் தொடர்புகொண்டு அண்டி
நிற்பதும்
அவர் நலம் கருதி செயற்படுவதும் வாழ்வதும்
நம்மை நலமுற வாழச்செய்யும்.
என்பதில் ஐயமே இல்லை.

– சுபமஸ்து –

# திருக்கேதீச்சுவர ஆலயத் திருப்பணிச் சபை

**வி. கயிலாசபிள்ளை**
**தலைவர் - அறங்காவலர் ஆயம்.**

---

ஸ்ரீ சதாசிவப் பட்டர் சுப்பிரமணியப் பட்டர் சிவாச்சாரியார் திருக்கேதீஸ்வர ஆலயப் பிரதம குருக்களாக 1953ம் ஆண்டு தொடக்கம் 1990ம் ஆண்டுவரை வேதாகம விதிப்படி மிகவும் சிறப்பாகப் பணி புரிந்துள்ளார். சிவாச்சாரியார் நித்திய பூசைகளைக் கிரமமாகச் செய்தது மட்டுமன்றி ஆலய உற்சவ விழா மற்றும் சிவராத்திரி போன்ற சிறப்பு விழாக்களையும் மிகவும் திறம்பட பலரும் பாராட்டும் விதத்தில் நடபத்தியுள்ளார். 1976ம் ஆண்டு நடந்த மகா கும்பாபிஷேக விழாவிலும் அதனைத் தொடர்ந்த விழாக்களிலும், இந்தியாவிலுருந்து வரவழைக்கப்பட்ட சிவாச்சாரியார்களுக்குச் சரிநிகர் சமானமாக எமது சுப்பிரமணியப் பட்டர் சிவாச்சாரியார் கடமையாற்றினார்.

அவர் ஓர் முதிர்ந்த பழம்பெரும் சிவாசாரியாராவர். சிவாசாரியார் சம்பந்தர் மடத்தில் விசேட பணியாற்றி ஆலயத்திற்கு வருபவர்களுக்குப் போசன வசதிகள் செய்தும் கொடுத்துள்ளார்.

சிவாசாரியார் அவர்களது சதாபிஷேகம் தை மாதம் 29ம் திகதி ( 12.02. 96) வரும் சுப தினத்தில் நடைபெறவுள்ளது.

சிவாசாரியார் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து இலங்கை வாழ் சமுதாயத்தினருக்கு மேன்மேலும் தொண்டாற்ற வேண்டுமென்றும் இவ்வைபவம் சிறப்புற இனிது நிறைவேற வேண்டு மென்றும் எல்லாம் வல்ல கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வர நாதனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஸதா சிவாக்யஸ்ய சிவஸ்ய வக்த்ரே*
*யே தீக்ஷிதா கௌசிக காஸ்யபாத்யாஹா*
*தெஷாம் முனீனாம் விதிவத் க்ரமேண*
*ஜாதா; சிவ ப்ராம்மண நாமதேயா.*

– அருணாசல குருக்கள்



திருக்கேதீச்சர குருகுல மாணவர்



யாகபூசை கேதீச்சரம்



திருக்கேதீச்சர பஞ்ச ரதம்



தீர்த்தோற்சவம் கேதீச்சரம்

# மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்.

பொ. வல்லிபுரம் ஜே. பி.

தெய்வத்தின் திருவருளால் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்ந்து பல கோடி மக்களை எல்லாம் வாழ்த்தியருளி அன்பும் அடக்கமும் பணிவும் பரிவுமுள்ள சிவஸ்ரீ சதாசிவபட்டர் சுப்பிரமணியப் பட்டர் அவர்கள் தன்னுடைய எண்பதாவது வயசுப் பூர்த்தியை சதாபிஷேக விழா வாக தன் பந்து மித்திரர்களோடு கொண்டாடும் இவ்வேளையில் மணிவிழாக் கண்ட அடியவனுக் கும் அடியவனாகிய பொன்னுத்துரை வல்லிபுரமாகிய நான் எங்கள் குலதெய்வமாகிய சக்தியின் அருள் கிடைத்து மேலும் பலகாலம் வாழ்வும் தொண்டுகள் பல செய்யவும் அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளை வேண்டி அமர்கின்றேன்.

இங்ஙனம்
அம்பாள் அடியவன்

*குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால்*
*மனித்த பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே*

– திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.

*"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுகலால்"*

– திருக்குறள்

## கொழும்பு செட்டியார் தெரு, பம்பலபிட்டி புதிய கதிர்வேலாயுத சுவாமி ஆலயங்களின் அறங்காவலர் சிவநெறிச்செல்வர், சிவநெறிச்செம்மல் ஆர். எம். பழனியப்பச் செட்டியார் அவர்களின் வாழ்த்துச் செய்தி

வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கேதீஸ்வரம் ஆலய பிரதம சிவாசாரியார் சிவஸ்ரீ ச. சுப்பிர மணிய பட்டர் அவர்களுக்கு சதாபிஷேக விழா நடைபெறும் இனிய செய்தி கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்து எம் நாட்டுக்கோட்டை நகரத்தார் பரிபாலனத்தின் கீழ் இருந்துவந்த திருக்கேதீஸ்வரர் ஆலயம் 1949 ஆம் ஆண்டளவில் சேர், கந்தையா வைத்தியநாதன் , திரு. கே. கனக ரத்தினம், திரு. எஸ். சிவசுப்பிரமணியம் உட்படப் பல பெரியார்கள் வந்து நகரத்தாரிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வாய்ப்பேச்சில் ஆலய பரிபாலனம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சுமார் 40 ஏக்கர் கோயிற்காணியையும், 80 ஏக்கர் வயற்காணியையும் கொண்ட இவ்வாலய பூஜையில் தினமும் முதல் காளாஞ்சி நகரத் தாருக்கே வழங்கப்பட வேண்டும் எனவும் வாய்ப்பேச்சில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆலய பரிபாலனம் வாய்ப்பேச்சில் கைமாறிய அக்காலத்திலேயே ஆலயத்தில் சிவாச்சாரியா ராகக் கடமைபுரிந்த சிவஸ்ரீ ச. சுப்பிரமணிய பட்டர் அவர்கள் சிறப்பான முறையில் மிகுந்த தெய்வ பக்தியுடன் பூஜையை நடத்திவந்த மையை நானறிவேன். அவருக்கு இன்று சதாபிஷேகவிழா நடைபெறும் வேளை நானும், நகரத்தார் சமூகமும் மிக்க பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறோம்.

நகரத்தாரிடம் ஆலய பரிபாலனத்தை பொறுப்பேற்றபின் திரு. கே. கனகரத்தினம் ஐயாவின் மருமகன் ஆர். நமசிவாயம் ஐயா தனது அயராத முயற்சியினால் சிறப்பாக ஆலய நிர்வாகத்தை நடத்திவந்தமையை இச்சந் தர்ப்பத்தில் நினைவுகூருதல் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

இந்தியா, திருநெல்வேலியில் பிறந்தாலும் இலங்கையின் யாழ்ப்பாணத்திலே பல்வேறு ஆலயங்களிலும் கடமை புரிந்து பின் வரலாற்றுப் புகழ் மிக்க திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கே பிரதம சிவாச்சாரியாராக விளங்கிவரும் சுப்பிரமணியபட்டர், பல கும்பாபிஷேக கிரியைகளை தனது தலைமையில் பல்வேறு நாடுகளிலும் நடத்திப் புகழ்பெற்றுள்ளார்.

இப்பெரியவருக்கு நடைபெறும் சதாபிஷேக விழா சிறப்பாக நடைபெறவும், தொடர்ந்து இவர் தனது நூற்றாண்டு விழாவையும் கொண்டாட வாழ்த்தி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வணங்குகிறேன்.

நன்றி
வணக்கம்

# யாழ்ப்பாணம் வண்ணை, காங்கேசன்துறை வீதி, அருள் மிகு செந்தில் கதிர் வேலாயுத சுவாமி கோவில் பொருளாளர் திருப்பணித் தவமணி சி. தியாகராசா

சிவஸ்ரீ சதாசிவப்பட்டர் சுப்பிரமணியப்பட்டர் ஐயா அவர்களின் சதாபிஷேக (80 வயது பூர்த்தி) விழாவிற்கு எமது ஆலயத்தின் சார்பில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பட்டர்ஐயா என்றே சைவப்பெருமக்களால் அன்போடும் பக்தியோடும் அழைக்கப்படும் சாந்த சொரூபியான சுப்பிரமணியப்பட்டர் ஐயா அவர்களை 1959ஆம் ஆண்டளவில் எனது குல தெய்வமாகிய வண்ணார்பண்ணை தையல்நா யகி சமேத வைத்தீஸ்வரன் கோவிலில் பிரதம குருவாக இருந்த காலத்தில் சந்தித்தேன். அதன்பின் 1954 முதல் ஐயா அவர்கள் கௌரி அம்பாள் சமேத கேதீஸ்வரப் பெருமான் எழுந்தருளி இருக்கும் திருக்கேதீஸ்வரத்திலும் பிரதமகுருவாக இருந்தார்கள். திருக்கேதீஸ்வர ஆலய அறங்காவலர்களுள் ஒருவனாக இருப்பதால் ஆரம்பகாலம் முதல் அவர்களோடு அதிகம் பழகும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. பட்டர்ஐயா அவர்கள் தென் இந்தியாவில் திருநெல்வேலியில் சங்கரப்பட்டர் சதாசிவப்பட டருக்கும் பார்வதி அம்மாளுக்கும் எட்டாவது புண்ணிய புத்திரராக 17. 1. 1917 ஆம் ஆண்டு பிறந்தார்கள். அவரது சிறு பராயத்திலேயே காஞ்சிபுரம் வேதாகம பாடசாலையில் பழனி காசிவாசி சைவசித்தாந்த சரபம் ஈசான சிவாச்சாரியரைக் குருவாகக் கொண்டு ஆகம விதிப்படி ஒழுங்காக வேதம் பயின்று, முதலில் தூத்துக்குடி சிவன் கோவிலில் தனது பூஜை கைங்கரியங்களை ஆரம்பித்தார்கள். பின் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், குறுக் குத்துறை ஸ்ரீ சிவசுப்பிரமணியம் சுவாமி கோவி லிலும் அதன் பின் இலங்கைக்கு வந்து 1951 ஆம் ஆண்டு வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலிலும் தொடர்ந்து திருக்கேதீஸரத்திலும் பிரதம குருவாக இருந்து மிகவும் ஒழுங்காகத் தனது பணியைச் செய்துவந்தார். அவர்கள் இருந்த காலத்தை இன்று நினைத்தும் பார்க்க முடியாது. காடும் பற்றையும் பாம்புகளும் சூழ்ந்த காலத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 1976 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடந்து ஏறத்தாள இருபது ஆண்டுகள் மறைந்து விட்டன. அன்று இருந்த நிலையையும் இன்று திருக்கேதீஸவரம் இருக்கும் நிலையையும் எண்ணிப் பார்க்கும் ஒவ்வொரு வைவமகனும் பட்டர் ஐயா போன்ற ஒருவர் அங்கு சென்று பணிபுரிய முன் வருவார்களா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் காடுகள் அடர்ந்த இடத்தில் இத்தனை ஆண்டுகள் தனது குடும்பத்துடன் இருந்து அவர்கள் ஆற்றிய சேவை, சைவஉலகம் மறக்கமுடியாததொன்று. அங்கு செல்பவர்ளுக்கு அவரது தர்மபத்தினி உணவு வழங்கி உபசரித்த பாங்கு மறக்க முடியாது. இத்தனை உயர்ந்த உள்ளமும், திருக்கேதீஸ்வரத்தில் எழுந்தருளி இருக்கும் தெட்சணாமூர்த்தியின் புன்சிரிப்பும் உள்ளவர். அவரை போன்றே அவரது பிள்ளைகளும்.

*"தக்கார் தகவுஇலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"*

குறிப்பாக கண்ணப்பகுருக்கள் அவருக்குத் துணையாக இருந்தார். அதன்பின் தகப்ப னாரின் வயோதிப நிலையில் கண்ணப்பக் குருக்களே முழுப் பொறுப்போடு பூஜா கைக் காரியங்களை ஆற்றி வந்தார்.

சுப்பிரமணியப்பட்டர் ஐயா அவர்கள் பல பிரசித்தி பெற்ற ஆலயங்களின் மகா கும்பா பிஷேகங்களைத் தலைமை தாங்கி நடத்தி யுள்ளார். இருந்தபோதிலும் எமது வண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம் பற்றி இங்கு நான் விசேடமாக குறிப்பிட வேண்டும். நாட்டுக்கோட்டை நகரத்தாரால் நெடும் காலத்திற்கு முன்பே அழகிய கருங்கல்லுத் திருப்பணியினால் ஆன ஆலயம் "கதிரேசன் கோவில்" என அழைக்கப்

பட்டு வந்தது. நாட்டுக்கோட்டைச் செட்டியார் கோவிலை அங்கு பூசை செய்த இராசா ஐயரிடம் விட்டுவிட்டு இந்தியாவிற்குச் சென்றுவிட்டார்கள். ஐயர் அவர்கள் நோய்வாய்ப்பட்டதனால் அயலவர்கள் முன்வந்து ஆலயத்தை நிர்வகிக்க நீதி மன்றத்தின் மூலம் ஒரு அறங்காவலர் சபையை நிறுவினர். திரு. கா. சி. தங்கராசா தலைமையில், திரு. ப. சோமசுந்தரம் அவர்களை செயலாளராகவும், என்னைப் பொருளாளராகவும் இன்னும் மூவரையும் கொண்ட சபை கோவிலைப் பொறுப்பேற்றது. ஆலயத்தின் மூலவராக வேல் இருந்தது. எனது விருப்பத்தின்படி சபையின் அனுமதியோடு திருச்செந்தூர் முருகனைப் போன்ற மூலவர் வள்ளி தெய்வயானை சமேதராய் மகாவலிபுரம் கணபதிஸ்தபதிகளின் மூலம் உருவாக்கி கோவிலில் பிரதஷ்டை பண்ணி 1978 ஆம் ஆண்டு சுப்பிரமணியபட்டர் ஐயா தலைமையில் மிகவும் பிரமாண்டமான முறையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து வருடா வருடம் நடைபெறும் அன்றைய தின அபிஷேகத்திற்கும் பட்டர் ஐயாவே வந்திருந்து நடத்துவார்கள். அந்த நினைவுகளை மறக்கமுடியாது. ஐயா அவர்களுக்கு வயது வந்தாலும் மீண்டும் முன்னைய சூழ்நிலை ஏற்பட்டு பட்டர் ஐயா அவர்கள் முன்நின்று இப்படிப்பட்ட கைக்கரியங்களைச் செய்ய எனது இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தித்து, ஐயா அவர்கள் நற்சுகத்துடனும் நீண்ட ஆயுளுடனும் குடும்பத்தாரோடு வாழ வேண்டுகின்றேன்.

*விருது குன்றமா மேவிரு ணாணர்*
*வாவன லெரியம்பாப்*
*பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்*
*றுறைபதி யென்னாளுங்*
*கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்*
*பொழிலணி மாதோட்டங்*
*கருத நின்றகே தீச்சரங் கைதொழக்*
*கடுவினை ணடையாவே.*

– சம்பந்தர் தேவாரம்.

# கேதீச்சர நாதனை மனக்கண் இருத்திய செம்மல்

கே. கே. சுப்பிரமணியம் **J. P.**

எம் இலங்கைத்திருநாட்டின் திருக்கேதீஸ்வரம் மிகவும் பழைமை வாய்ந்தது. கீர்த்திமிக்கது. திருஞான சம்பந்தப் பெருமானாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் பாடல்பெற்ற புராதன சிவ தலம். மன்னார் மாதோட்டத்தில் உள்ள இப்பெருமை வாய்ந்த சிவாலயம் மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகியன ஒருங்கிணைந்த புனித தலம். இச் சிவாலயத்தில் ஸ்ரீ கௌரி அம்பாளோடு கேதீஸ்வரநாதர் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். நவக்கிரகங்களில் ஒன்றான கேது வழிபட்டபடியால் கேதீஸ்வரம் என்று புகழ்பெற்றது.

நல்லை நகர் தந்த நாவலர் பெருமான் இப்புனித தலத்தின் பெருமையையும் அருமையையும் பற்றி பறைசாற்றி புனருத்தரராணம் செய்யவேண்டிய அவசியத்தை தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பிரசங்கம் செய்தார். 1903ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இலங்கை சிவில் சேவையில் உயர் பதவி வகித்தவரும் அமைச்சருமாக இருந்த சைவப்பெருமகன் திரு . சேர் கந்தையா வைத்தியநாதன் இப் பெருமை வாய்ந்த தலத்திற்கு ஆற்றிய தொண்டு வரலாற்றுப் பெருமை மிக்கதொன்று. 1976 ம் ஆண்டு சைவ உலகம் போற்றும் வகையில் குட முழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. இப்புனித ஆலயத்தைச் சுற்றி யாத்திரிகள் தங்க மடங்கள் அமைந்து உள்ளன. (மகாசிவராத்திரி, ஆண்டு தோறும் மிகச் சிறப்பாக நடைபெறும்.) எமது போற்றுதலுக்கும், வணக்கத்திற்கும் உரிய சிவஸ்ரீ சதாசிவப்பட்டர் சுப்பிரமண்யப்பட்டர் 37 ஆண்டுகள் 1953 தொடக்கம் 1990 வரை இச்சிறப்புமிக்க ஆலயத்தின் பூசகராக இருந்து எல்லோராலும் போற்றப்பட்டவர். 17-1- 1917 தமிழ் நாடு திருநெல்வேலியில் பிறந்து தந்தையுடன் வண்ணை சிவன் கோயிலில் பூசகராக இருந்து பல கும்பாபிஷேகத்திலும் கலந்துள்ளார். 1958 ம் ஆண்டு தொடக்கம் 1985 வரை தலைமன்னாரில் கடைமையாற்றும் பொழுது கேதீச்வரம் சென்று பாலாவியில் நீராடி பூசை வழிபாட்டின் பின் சிவஸ்ரீ பட்டரின் கையால் உணவு வாங்கி உண்போம். எங்களைப் போன்ற அடியார்களுக்கு நல்ல உணவு வழங்கிய குருக்கள் ஐயா நல்ல பிள்ளைகளைப் பெற்று மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் சிறப்பாக இருப்பதை நாம் மனதார வாழ்த்த வேண்டும். (மகாசிவராத்திரி பூசைகளில் கலந்துகொள்ள மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச ஊளியர்கள், வர்த்தகர்கள் மற்றும் இலங்கைத் திருநாட்டின் சைவமக்கள் திருக்கேதீச்சர ஆலய வளர்ச்சிக்கு அரும் தொண்டு புரிந்தனர்.) ஸ்ரீ கௌரி அம்பாள் சமேத கேதீஸ்வரநாதப் பெருமானுக்கு பூசைகள் விழாக்கள் செய்த குருக்கள் ஐயா இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

# அடியவன் வேண்டுதல்

## திருக்கேதீச்சரம். சிவஸ்ரீ சுப்பிரமணிய பட்டர் ஐயா அவர்களின் எண்பதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு திருக்கேதீச்சரம் திருவாசகமடம் சி. சரவணமுத்து வழங்கும் பாராட்டுச்செய்தி

எல்லாம்வல்ல கேதீச்சரப்பெருமான் திருவருள் கூட்ட எம்மால் போற்றப்படும் சிவஸ்ரீ பட்டர் ஐயா அவர்கள் ஐம்பது வருடத்திற்கு முன் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் கோயில் கும்பாபிஷேகத்துக்கு வருகைதந்தவர்கள் அந்த கும்பாபிஷேகத்தில் அவர்களுடைய கிரியைகளையும் பக்திபூர்வமான செயல்களையும் கண்டு திருக்கேதீச்சரத்துக்கு இவர்கள் வந்தால் சிறப்பாக இருக்குமே என்று ஆசைப்பட்டேன். ஆனால் அவர்களுடன் நேரில் பேசும் சந்தர்ப்பம் அப்போ கிடைக்கவில்லை. ஆனால் இறைவன் திருவருளால் திருக்கேதீச்சரத்தை புனர் அமைப்பு செய்ய நாட்டுக்கோட்டை நகரத்தாருடன் சேர்ந்து பெரும்பங்காற்றிய சிவத்தொண்டர்.

ஸ்ரீ பசுபதிச்செட்டியாருடைய மகன் சிதம்பரநாதச்செட்டியாருடைய பெருமுயற்சியால் பட்டர் ஐயா அவர்கள் திருக்கேதீச்சரம் வந்து பூசையை பொறுப்பேற்றுள்ளார். அவர்கள் திருக்கேதீச்சரம் வந்தபின்னரே கோயிற் திருப்பணிகள் சிறப்பாக ஆரம்பித்தது. அது நாம் செய்த புண்ணியப்பேறேயாகும். அதுமட்டுமல்ல கோயிலைச்சுற்றியுள்ள மடங்கள் குருகுலம் வேதபாடசாலை – இன்னமும் அநேக திருப்பணிகள் நிறைவேறி திருக்கேதீச்சரம் ஒரு பட்டினமாக பொலிவு பெற்றுது அப்போ திருப்பணிச்சபை தலைவராக இருந்த சைவநன்மணி சேர். கந்தையா வைத்தியநாதன் ஐயா அவர்கள் தனது கொட்டிலுக்கு பக்கத்திலேயே குருக்கள்மார் குடியிருக்க வீடும் அமைத்துக்கொடுத்தார்கள். அந்த வீட்டிலிருந்தே கோயிற்பூசை மட்டுமல்ல வரும் சைவப்பெரியார்களை உபசரித்து உண்டிகொடுத்து ஆதரிப்பார்கள். அடியேன் திருவாசக விழாவுக்கு இந்தியாவிலிருந்து வரவழைக்கும் பெரியோர்களை ஐயா அவர்களே ஆதரித்து உபசரிப்பார்கள். அதுமட்டுமா திருவாசகமடத்தில் நடக்கும் சிவபூசை மகாநாட்டுக்கு தலைமை வகித்து சிவபூசையை சிறப்பாக நடத்திவைப்பார்.

ஏறக்குறைய ஐம்பது வருடங்கள் திருக்கேதீச்சரத்திலிருந்து தொண்டு செய்தார்கள் இவர்கள் காலத்தில் தான் கோயில் சிறப்பாக கும்பாபிஷேகம் நடந்து கொடி ஏற்றி திருவிழாவும் ஐந்துதேரும் ஓடக்கண்டு தெரிசித்தோம் அவர்கள் அங்கு குடியேறிய பின்னரே அருமை மக்களையும் பெற்று அவர்களும் இறைவன் திருவருளால் நல்வாழ்வு வாழ்கின்றார்கள். அதில் மிகவும் விசேடமாக குறிப்பிடுவதானால் தனது மூன்றாவதுமகனுக்குகேதீச்சரநாதன் எனப் பெயர் சூட்டி தன்னுடைய இடத்தை நிரப்பி அந்த சிறப்பையும் கண்டார்கள். அவர்கள்தான் நாம் அன்புடன் அழைக்கும் கண்ணப்பர் குருக்கள். அவர்களும் தகப்பன் வழிநின்று சிறப்பாக காரியங்களை நடத்திவந்தார்கள். நாம் செய்த தவக் குறைவால் தற்போது நடந்துகொண்டிருக்கும் அனர்த்தனங்களால் கோயில் மூடப்பட்டு மடங்களும் அழிக்கப்பட்டு நாமும் அனாதைகளாக வெளியில் நிற்கிறோம்.

காலத்திற்கு காலம் துட்டவிக்கிர சிட்டபரிபாலனம் நடக்குமென்பார்களே அது போல் அனர்த்தனங்கள் ஓய்ந்து திருக்கேதீச்சரம் திறந்து மடங்களும் தொண்டுகள் செய்யும் நாலை எதிர்பார்ப்போம். இந்த சந்தர்ப்பத்தில் ஐயா அவர்களின் எண்பதாவது பூர்த்தி விழாவோடு திருக்கேதீச்சரம் திறந்து முன்னைய சிறப்பு பெற பிரார்த்திப்பதோடு ஐயா அவர்கள் இன்னம் பலகாலம் சுகமாக இருந்து திருக்கேதீச்சரத்தை திறந்து முன்னைய சிறப்புப்பெற வைக் கவேண்டமென பிராராத்திப்பதோடு எங்களையும் வாழ வைக்கவேண்டுமென பிரார்த்திப்போம். ஐயா அவர்கள் நீடூழி வாழ வேண்டுமென இறைவன் அருள்புரிவாராக. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்லகதிக்குயாதுமோர் குறைவில்லை– யாவும் திருவருட்செயலே.

# ஆலய தத்துவ விளக்கம்

சிவஸ்ரீ. குமாரசாமி குருக்கள்
அச்சுவேலி

**(ஆலயம் அமைக்கவேண்டிய முறை, அவற்றின் காரணம், ஆலய வழிபாட்டின் இன்றியமையாமை, வழிபாட்டின் விளக்கம் முதலியன இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றன.)**

நாம் முற்பிறவிகளிலே செய்துகொண்ட தவம் காரணமாக அருமையாகப் பெற்ற மனிதப் பிறவியினால் வரும் பயன், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சிவ புண்ணியங் களைச் செய்து மெய்யன்புடன் சிவபெருமானை வழிபட்டு பரமபுருஷார்த்தமாகிய நித்தியானந்த முத்தியை அடைதலேயாம். சிவபெருமான் எங்கும் வியாபகமாய் இருப்பினும் சிவலிங்கம் முதலிய திருமேனியையும், குருவையும், மெய்யடியார் திருவேடத்தையும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும் நாம் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவார். சிவபெருமான் இவ்விடங் களில் தயிரில் வெண்ணெய்போல் விளங்கி நிற்பர். மற்றைய இடங்களிலெல்லாம் பாலில் வெண்ணெய்போல் வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே நாமெல்லாம் நமது பரமபதியாகிய சிவபெருமானை, குருலிங்க சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபடுதல் வேண்டும்.

ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றுங் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றுவடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார். இவற்றை முறையாக வழிபடு வோர் பரமாசாரியரால் உண்மை ஞானம்பெற்று முத்தியடைவர்.

சிவபெருமானுடைய திருவடிகளை நினை யவொட்டமல் அயர்ப்பிக்கும் மும்மல அழுக்கை ஞானநீரால் கழுவி அயராத அன்பைச் செய்யும் அடியாரோடு கலந்துகூடி மல மயக்கம் நீங்கும்படி அன்புமிக்குடைய அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவமெனவே கண்டு வழிபட்டு வாழும் இயல்புடையோரே சீவன் முத்தராவ ரென ஞான சாத்திரங்கள் கூறும் உண்மையாம். ஆலய வழிபாடுசெய்து பெரும் பேறெய்திய மார்க கண்டேய முனிவர் இதற்குச் சான்றாவர்.

ஆலய வழிபாட்டின் பெருமையை ஆன்மாக் களுக்கு உணர்த்தி அவர்களை நல்வழிப்ப டுத்துமாறு திருவுளம் கொண்ட உமாதேவியார் காஞ்சீபுரம் முதலிய தலங்களிலும், விநாயகக் கடவுள் திருச்செங்காட்டாங்குடி முதலிய தலங்களிலும், சுப்பிரமணியக் கடவுள் வேளூர் முதலிய தலங்களிலும் ஆலயமமைத்துப் பூசித் தார்கள். திருநந்திதேவர், அகத்திய முனிவர், பிரமா, விட்டுணு, நவக்கிரகங்கள், ஏனைய முனிவர்கள், தேவர்கள், அசுரர்கள் முதலிய பற் பலரும் ஆலய வழிபாடு செய்து போக மோக்ஷங் களைப் பெற்றார்கள். அஃறிணைப் பொருளாகிய சம்பாதி, சடாயு என்னும் பட்சிகளும், சிலந்தி, பாம்பு, யானை முதலியவைகளும் ஆலய வழி பாட்டால் முத்தியடைந்தன.

சைவாலயங்களிலே நித்தியபூசை, பிர திட்டை, உற்சவம், பிராயச்சித்தம் முதலிய கிரியைகள் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த சிவாகம விதிப்படியே நடைபெறத்தக்கன. இவையெல்லாம் வேறெந்த நூல்களிலும் விதிக்கப்படவில்லை.

திருக்கோயிலும் ஆங்கே நடைபெறும் பூசை ஆதியனவும் அகவழிபாட்டின் உண்மையை விளக்கி ஞானத்தை உண்டாக்குவதற்கு இன் றியமையாத கருவிகளாயுள்ளன. மலநோயை நீக்கும் வைத்தியநாதராகிய சிவபெருமான், ஆலயங்களையும் பிரதிட்டை பூசை உற்சவாதி களையும் செய்யுமாறு விதித்திருத்தல், அப்புற வழிபாடு காரணமாக ஆன்மாக்கள் அந்தர்யாக

பூசையின் உண்மையை உணர்ந்து செய்து, சிவஞான மேலிட்ட விடத்துப் பரமுத்தியிற் சேர்த் தருளுதற் பொருட்டாம். இவ்வுண்மை தேவா லயங்களிலே அமைக்கப்பட்டுள்ள மண்டபங் களாலும், தூபி, பிரகாரம், கோபுரம் முதலிய வற்றாலும் உணரப்படும்.

சரீரத்திலே ஆறாதாரங்கள் அமைந்திருத் தல் போல, புறத்தே காணப்படும் ஆலயத்திலும் கருப்பக்கிரகம் முதலிய மண்டபங்கள் ஆறாதார சொரூபமாய் விளங்குகின்றன. திருக்கோயி லிலுள்ள ஐந்தாம் ஆவரணத்தால் அன்னமய கோசமும், நான்காம் ஆவரணத்தால் பிரா ணமயகோசமும், மூன்றாம் ஆவரணத்தால் மனோமயகோசமும், இரண்டாம் ஆவரணத் தால் விஞ்ஞானமயகோசமும், முதலாம் ஆவரணத்தால் ஆனந்தமயகோசமும் அறியப் படும். ஆகலின் பஞ்சாவரணங்களும் பஞ்சகோ சங்களைக் குறிப்பனவாம். மூன்று பிராகார முள்ள ஆலயங்களில் அவை தூலம், சூக்குமம், காரணம் என்னும் முச்சரீரங்களையும் குறிக் கும். இரண்டு பிராகாரம் உள்ளனவாயின் அவை தூலம், சூக்குமம் என்னும் இரண்டு சரீரங்களையும் குறிக்கும்.

கோபுரத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிகளும் இறைவனது தூலத் திருமேனியின் ஒவ்வோ றுறுப்பைக் குறிப்பன. கோபுரத்தில் ஈசுவரனது பராக்கிரம லீலாவினோதங்களும், அவரது அதி காரம் பெற்ற பிரம விட்டுணுவாதிய **தேவர்கள்**, அட்டதிக்குப் பாலகர், சூரிய சந்திரர் முதலியோர் களது உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் பரமேசுவரனது கடவுட்டன்மையின் சிறப்பை அறிந்து அவரிடம் அன்பு செய்ய வேதுவாகும்.

தூபியானது பிருதுவி தத்துவம் முதல் முப்பத்தாறு தத்துவங்களாலும் கற்பிக்கப்பட்ட இருதய கமலத்தில் சிவபெருமான் எழுந்தரு ளியிருக்கும் உண்மையைக் குறிக்கின்றது. தூபியும் கோபுரமும் தூல லிங்கமெனவும், விமானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்குமலிங்கமெனவும், அதற்கு முன்னுள்ள பலிபீடம் பத்திரலிங்கமெனவும் படும். இவ் வுண்மை நோக்கித் திருமந்திரம்,

*"தூய விமானமுந் தூலம தாகுமா*
*லாய சதாசிவ மாகுநற் சூக்குமம்*
*பாய பலிபீடம் பத்திர லிங்கமா*
*மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே"*

என்று அருளிச்செய்தார்.

சிவலிங்கம், நந்தி, பலிபீடம் என்னும் மூன்றனுள் சிவலிங்கம் பதியும், நந்தி பசுவும் , பலிபீடம் பாசமுமாகக் கொள்ளப்படும். ஆலயங்களிலே சிவலிங்கமும் அதற்கு நேராக நந்தியும் பலிபீடமும் இருக்கின்றன. அவை மூன்றும் நேராகத் தாபிக்கப்பட்டிருந்தலால் அவை அனாதி நித்தியமாய் உள்ளன என்னும் உண்மை உணரப்படும்.

**சிவலிங்கம்**

சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம் என்னும் நான்கும் ஒன்றையொன்று பற்றி ஐந்தாவதாகிய கன்ம சாதாக்கியத்தை அடைந் திருத்தலின், இது மற்றைய சாதாக்கியங்க ளிலும் விசேடமுடையது. கன்ம சாதாக்கியம் நாதமயமான லிங்கமும், பிந்துமயமான பீடமும் கூடியதாய்ப் பஞ்சகிருத்தியத்தை உடையதாய் இருக்கும். கன்மசாதாக்கியர் சிவலிங்கமும் பீடமுமாய் இருப்பினும், ஐந்து திருமுகங்களும், பத்துத் திருக்கரங்களும், பதினைந்து திருக்கண்களுமுடைய தியானரூபியாய் இருப்பர்.

சிவபெருமான் ஆன்மாக்களுடைய தியான பூசாநிமித்தமாக அருவுருவத் திருமேனியைத் தாங்கியநிலை ஆவுடையாளுடன் கூடிய இலிங்கமாம். இலிங்கத்திலே சிருட்டி காலத்தில் தோற்றமும், சங்கார காலத்தில் ஒடுக்கமுமாம். சங்கார காலத்தில் சமஸ்த சேதனாசேதனப் பிரபஞ்சங்களும் ஒடுங்கி, சிருட்டி காலத்தில் அங்ஙனம் உற்பத்தியாகின்றமையால் இலிங்க மெனப்படும் எனச் சுப்பிரபேதாகமம் கூறு கின்றது.

படைத்தல் முதலியனவற்றால் உலகத்தைச் சித்திரிப்பதாகிய பரமேசுவரப் பிரபாவமே லிங்கமெனப்படுமெனினும் அமையும்.

லிங்கமென்னும் சப்தமானது சித்திரித்தல் எனப் பொருள்படுகின்ற "லிகி" என்னும் தாதுவி னின்றும் பிறந்தமையால் சிவபெருமான் சிருட்டி முதலிய பஞ்ச கிருத்தியங்களாற் பிரபஞ்சத்தைச் சித்திரிக்கின்றார் என வருணபத்ததியுடையார் கூறுவர்.

ஞானசத்தியாகிய சிவலிங்கத்தின் கீழ்க் காணப்படும் ஆவுடையாள் கிரியாசக்தியைக் குறிக்கும். பரவெளியைக் குறிக்கும் சிவலிங் கத்திலே எப்பொழுதும் ஓர் அசைவு உண்டு. அதுவே பராசக்தியாகும். ஆன்மாக்களின் பாசத்தைக் கெடுத்தற்காக அசைதற் சத்தி லிங்கத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்றது. அவ்வசைவு லிங்கத்தில் உண்டென்பதை உணர்த்துவதற்கு ஆவுடையாள் இலிங்கத் தைச் சுற்றிக் கீழடங்கி அமைந்திருக்கின்றது. ஆவுடையாளின் ஒரு பக்கத்திலே நீண்டிருப்ப தாகிய கோமுகியானது ஆன்மாக்களைத் திருநோக்கம் செய்கின்ற குறிப்பாக அமைந் திருக்கின்றது. அவ்விலிங்கம் பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகமென்னும் மூன்று பாகங்கள் உடையதாயிருக்கும். அவற்றுள் பிரமபாகம் நபுஞ்சகலிங்கமும், விஷ்ணுபாகம் ஸ்திரீலிங்கமும், உருத்திரபாகம் பும்லிங்கமு மாகும். ஆண் ரூபம், பெண்ரூபம், நபுஞ்சகரூபமா யிருப்பது, அவன், அவள், அதுவாக இருக்கும் உலகத்திலேயுள்ள உயர்திணைப் பொருளும், அஃறிணைப் பொருளும் தம்மிடத்திலே தோன்றி நின்றொடுங்குகின்றன என்பதையுணர்த்துதற் காகும்.

(பிரதிட்டா காலங்களில் முதல் திரிகண்ட நியாசம், மூர்த்தி மூர்த்தீசுவரநியாசம் முதலிய நியாசங்களைச் செய்து மேல் பரிசாகுதி செய்வ தும் இப்பாவனை பற்றியதே ஆகும்.)

சிவலிங்கமே பிரணவ முதற் பொருள். இதன் சோதித் தன்மையே அகர, உகர, மகரமாயிருக்கும். அகரம் சிவமும், உகரம் சத்தியும், மகரம் கலைவடிவமுமாம். நாதவிந்துக்கள் அகர உகரங்களுள் அடங்கும். அகரம் கண்டமும், உகரம் கோமுகியும், மகரம் வட்டமுமாம். பிரணவம் இலிங்கமுமாயிருக்கும்.

*அகார முதலா வனைத்து மாய்நிற்கும்*
*உகார முதலா உயிர்ப்பெய்தி நிற்கும்*
*அகார உகார மிரண்ட மறியில்*
*அகார உகார மிலிங்க மதாமே.*

– திருமந்திரம்

*சக்தியும் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லா*
*மொத்தொவ்வா வாணும் பெண்ணு முயர்குண குணியுமாகி*
*வைத்தன னவளால் வந்த வாக்கமில் வாழ்க்கை (யெல்லா*
*மித்தையு மறியார் பீடலிங் கத்தினியல்பு மோரார்.*

– சிவஞான சித்தியார்

லிங்கமென்பது சிவமேயாம். சிவத்துக்குப் பெயராகிய லிங்கமென்னும் பதம் உபசாரத்தால் பக்குவம் நோக்கி ஆன்மாக்களின் தியான பூசா நிமித்தம், அச்சிவம் விளங்கப்பெறும் ஆதார மாகிய சைவம் முதலியனவற்றிற்கும் வழங்கப் படுகின்றது.

**மந்திரத் திருமேனி**

உலகத்துக்கு முதற் காரணம் சுத்த மாயை, அசுத்த மாயை என்பன. இவற்றுள் மேலாகிய சுத்த மாயையில் சிவசத்தி சேர்ந்து நிற்றலானும் அச்சுத்த மாயையிலே தோன்றிய காரணத் தினாலும் பயன்கொடுத்தற் பொருட்டுச் சிவ சத்தி அதிட்டித்தலானும், பிரதிட்டை அக்கினி காரியம் முதலியவற்றால் வழிபடுபவர்களுக்குப் போக மோக்ஷத்தைக் கொடுத்தலானும் ஆகமங் கள் சிவெபருமானுக்கு மந்திரத் திருமேனியை விதந்து கூறுகின்றன. அவற்றுள்ளும் பஞ்சப் பிரம மந்திரமானது மந்திரங்களுக்கு மூலமானதாலும், பிரதம சிருட்டி ஆரம்பத்தில் முதலிற்றோன்றிய தனாலும் சிவபெருமானுக்குத் திருமேனியாக விதந்தெடுத்துக் கூறியதென அறிக. ஈசானம் முதலிய மந்திரங்கள் சிவபெருமானுக்குச் சிரம், முகம், இருதயம், குய்யம், திருவடிகள் என் பனவாம்.

*மந்திர மதனிற்பஞ்ச மந்திரம் வடிவமாகத்*
*தந்திரஞ் சொன்னவாறிங் கென்னெனச் சாற்றக்*
*முந்திய தோற்றத்தாலு மந்திர மூலத்தாலு (கேணீ*
*மந்தமில் சத்தியாதிக் கிசைத்தலு மாகுமன்றே.*

சிவஞான சித்தியார்

சதாசிவமூர்த்தியினுடைய திருமேனி ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கீடாக அறிந்து இரட்சிக்கும் குணமாகிய மந்திரம் ஆகையால் மந்திர ரூபமாகிய ஞானசத்தி வித்தியாதேகம் எனப்படும்.

**மூன்று கண்கள்**

சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் அதிட்டிக்கின்றவர் தாமென்பதையும், காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினீயம் என்னும் முத்தீ வேள்வியில் அவை யாவும் தம்மிடத்தே பொருந்தியுள்ளன என்பதையும், எல்லாக் கருமங்களையும் அறிந்து செய்யும் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்திகளையும் உடையவர் தாமென்பதையும் மூன்று கண்கள் குறிக்கின்றன.

*"சுடர்மூன்றுங்கண்மூன்றாகக்*
*கொண்டான்றான்காண்"*

– அப்பர்

*"முக்கணனென் பதுமுத்தீ வேள்வியிற்*
*றொக்கதென் னிடையென்ப தோர் சுருக்கே"*

– பட்டினத்தடிகள்

*"இவர்தாம் எல்லா மறியுமியல்பது நயனம்"*

– சதாசிவரூபம்.

**ஐந்து திருமுகங்கள்**

பரமசிவனது சுத்த குணங்களாகிய ஈசானம் முதலிய ஐந்தும், கருமசாதாக்கியராகிய சதாசிவ மூர்த்திக்குத் திருமுகங்களாம்.

ஐந்து நிறங்களையுடைய ஐந்து திருமுகங்களைச் சிவபெருமான் கொண்டது. பஞ்சகிருத்தியத்துக்குக் காரணரும், பஞ்சகருத்தாக்களை அதிட்டிப்பவரும் தாமென்பதை அறிவித்தற்காகும்.

ஈசானம் முதலிய ஐந்து மந்திதரங்களும், அனுக்கிரகம், மறைத்தல், சங்காரம், காத்தல், படைத்தல் என்னும் ஐந்தொழிலையும் செய்யும் சத்திகளெனத் தத்துவத்திரய நிர்ணயம் செப்புகின்றது.

**திரிசூலம்**

சிருட்டித்தொழிலுக்குக் காரணமாகிய செனனி, போகங்களில் நியதி செய்வதாகிய ரோதயித்திரி, சங்கார கிருத்தியத்துக்குக் காரணமாகிய ஆரிணி என்னும் முச்சத்தி வடிவாகிய சூலப்படையைச் சிவபெருமான் ஏந்தியருளியது முத்தொழிலுக்கும் முதல்வரும், மும்மலங்களை நீக்குபவரும் தாமென்பதை யுணர்த்தும் உண்மையாகும்.

*"மூன்று மூர்த்தி யுணின்றியலுந் தொழில்*
*மூன்று மாயின மூவிலைச் சூலத்தான்"*

– அப்பர்சுவாமிகள்

*"கோற்றேன் மொழிக் கிள்ளாய் கோதில்*
*(பெருந்துறைக்கோன்*
*மாற்றாரை வெல்லும் படைபகராய் – யேற்றார்*
*அழுக்கடையா நெஞ்சுருகமும் மலங்கள் பாயுங்*
*கழுப்படை காண் கைக்கொள் படை"*

– திருவாசகம்

**புன்முறுவல்**

ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூவகைத் துயைரயுங் கெடுத்தருளுங் காரணமாக இளமையாகிய புன்முறுவலைக் கொண்டருளினார். "இடர் மூன்றுமிழித் தருளுமிள முறுவன் முகமலரிலங்க" என்பது சிவதருமோத்தரம். சந்திரன் சர்வஞ்ஞுத்துவரூபம், பத்துத்திருக்கரங்கள் பத்துத் திக்குகள் என்றும், திரிசூலம் முக்குணம் என்னும் பரசு சத்தியமென்றும் சொல்லப்படும். வாள் ஈசுவரனுடைய பராக்கிரமமாகும்.. வச்சிரம் பேதிக்கப்படாத சத்தியாகும். சங்கார சத்தியாகிய அக்கினி பாசங்களைச் சாம்பராக்குவதாகும். நாகத்தின் கெம்பீர வடிவான சத்தி எல்லோரையும் நியமிப்பதாகும். மணியினது ஓசை மந்திர ரூபத்தை அறிவிப்பதாகும். அபயம் சமஸ்த லோகங்களையும் காக்கும் சத்தியாகும் எனக்காமிகாமத்திலும், கட்டுவாங்கம் பிரதாபமென்றும், அபயம் அனுக்கிரகமென்றும், பாசம் மாயா சொரூபமென்றும், அங்குசம் விவர்ணகுணமென்றும், மணி நாததத்துவ ரூபமென்றும், வாதுளாகமத்திலும் வருவனவற்றால் இவ்வுண்மை தெளியப்படும்.

**சிலம்பும் வீரக்கழலும்**

சிலம்பையும் வீரக்கழலையுந் தரித்தமை ஆன் மாக்களைச் சோரமாகத் தன்வசப் படுத்துகின்ற முன்னை வினைகளை வென்று பிறவித் துன் பத்தை நீக்குபவரென்பதை உணர்த்துவதற் காகும்.

*"வீட்டின்ப வெள்ளத் தழுத்தியிடுந் தாளினுமடியா ருள்ளத்தினும் பிரியா வொண்சிலம்பும்*
*– கள்ளவினை*
*வென்றுபிறப் பறுக்கச் சாத்திய வீரக்கழலும்"*

– போற்றிப்ப.:.றொடை

"நெஞ்சலஞ் சலமரும் பிறவிநீடு வினையிற்
சஞ்சலஞ் சலமகன்ற தனதன்பர் குழுவை
அஞ்சலஞ் சலெனுமஞ் சொலென விஞ்சுசரண்மேற்
செஞ்சிலம் பொடுபொலங் கழல்சிலம்ப மிகவே"

· கந்தபுராணம்

சிவபெருமான் இவைகளை அணிந்தருளி யமை தமது பிரயோசனங்கருதியன்று. எதற் காக அணிந்தருளினரெனில், ஆன்மாக்கள் அஞ்ஞான வளர்ச்சியினால் தாம் பிரமமென நினைத்து அகந்தைகொண்டு நரகத்தித லாழாது பதியுண்மையறிந்து, தன்மையடைந் துய்யும்படி கொண்டருளிய உண்மையேயாகும்.

*"ஆதலாற்றனை வியப்பதற் கன்றவை யணித*
*லீதலாதொரு திறமுள தியாவரு மெவற்கு*
*நாதனேயிவ னென்றுதன் பாங்கரே நண்ணித்*
*தீதெலாமொரீ இ முத்திபெற் றுய்ந்திடுஞ் செயலே"*

– கந்தபுராணம்

என்பதனாற்றெளியப்படும்.

**சிவாசனம்**

பிருதுவிதத்துகூ முதல் முடிலா சத்ததி யந்தமான முப்பத்தாறு தத்துவங்கயையும் இரு நூற்றிருபத்து நான்கு புவனங்னளையும் உறுப் புக்காளாக உள்ளது அநந்தாசனம் சிம்மாசனம்; யோகாசனம் பதுமாசனம்; விமலாசனமெனும் பஞ்சாசனங்களையுடையதும் ஈகிய பெருமை வாய்ந்த சிவமூர்த்திக்கு ஆசனமாம்.

**விளக்கம்**

பிருதுவிதத்துவம் தாமரைக்கிழங்கு அது தவிர்ந்த கலையால் வியாபிக்கப்பட்டு ஆதாரசக்தியின் சிரசிலிக்கும். ஒன்றுபடுத்தி நீரை இழுக்கும். வாயுதத்துவம் இயக்கிக் கூட்டும். ஆகாசதத்துவம் இடங்கொடுக்கும்.

சத்தம் பரிசம் ருபமம் இரசம் கந்தமெனும் ஐந்து தத்துவங்கள் தாமைரயின் முளையாகும் வாக்கு; பாதம் பாணி பாயு உபதத்தம் என்னும் கன்மேந்திரிகள் ஐந்தும் சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் ஐந்தும் ஆகப்பத்துத் தத்து வங்களும் நாளத்தினுள்ளாக இருக்கும் ஒன்பது துளைவடிவங்களாகும மனம் அகங்காரம் புத்தி என்னும் தத்துலங்கள் அகத்தில் நின்று தொழிற் படுத்தும். புத்தியின் பாவட்டங்கள் சிம்ஹ வடிவாயிருக்கும். பிருகிருதிதத்துவம் புருடதத் துவம் அராகதத்துவம் விதியாதத்துவம் கலா தத்துவம் நியதிதத்துவம் காலதத்துவம் என்பன தாமரையின் நாள வடிவாகும். இத்தத்துவங் களிலுள்ள புவனங்கள் நாளத்தின் முட்களாகும். அசுத்தமாயாதத்துவம் புறவிதழாகும்.

சுத்த வித்தியாதத்துவத்தில் அட்டவித்தி யேசு வரருகங்களாகிய எட்டுத்தளங்கள் இருக்கும். ஈசுவரன் சாதாக்கியமென்னு மிவ்விரு தத்துவங்களும் அறுபத்துநான்கு கேசர வடிவாயிருக்கும் கிழக்குமுதலிய எட்டுத்திக்கு கயிலுமுள்ள அறுபத்து நான்கு கேசரங்களில் வாமை முதலிய எட்டுச்சத்திகளிருப்பர்.

சத்தித்த்துலம் அக்கேசங்களுக்குள்ளா. பொருத்திய பொகுட்டு வடிவாம். சிவதத்துவம் ஐம்பது பீச வடிவாயிருக்கும். ஐம்பது வர்ணுத்து வாவும் ஐம்பது பீசங்களக்கும் அதிதே வதையாளாக இருப்பர். கர்ணிகையின் நடுவில் பிரணவ ரூபமான சத்தியமண்டலமிருக்கும் அதில் சிவபெருமான் எழுந்தருளி இருப்பர். இப்படிப் பரமசிவனுக்கு ஆசனமாகிய பதுமத்தை ஆதாரசத்திக்குமேல் பிருதுவிதத்துவமுதல் குடிலைபரியந்தம் வியாபித்துள்ளதாக சிந்திக்க வேண்டும். இம்முறை அறிந்து தியானித்து க்கற்பிக்கும் ஆசனமே லிவாசன கற்பனமாகும்.

*"பதுமானந் தாணுற வீற்றிருப்பர் சதாசிவர் தத்துவத்தவிசினுகந்தே"*

– சிவதருமோத்தரம்

**சோடசோபசாரம்**

ஆவாகனம் தாபனம் சந்நிதானம் சன்னிரோதனம் வேகுண்டனம் தேனுமுத்திரை பாத்தியம் ஆசமனீயம் அருக்கியம் புஷ்பதானம் தூபம் தீபம் நைதேத்தியம் பானீயம் ஜபசமர்ப்பணம் ஆராத்திரியம் என்பன சோடசோபசாரங்கள்.

**ஆவாகனம்**

ஆவாகனமாவது பூசையின் பொருட்டுச் சிவபெருமானை லிங்கம் முதலியவற்றில் வரைவழைத்து அபிமுகமாகச் செய்வதென்னும் பாவனையாகும். எங்கும் வியாபித்திருக்கும் கடவுளை ஆவாகனஞ் செய்து எங்ஙனடெனில் விறகுமுழுவதும் நிறைந்திருக்கும் நெருப்பைக் கோலினாற்கடைய அது ஓரிடத்திலே பிரகாசித்தல்போல எங்கு நிறைந்திரும்கும் கடவுளைச் சிரத்தையுடன் ஓரிடத்தில் அழைத்து அபிமுமாகச்செய்வதேன்க.

**ஆவாகனம் இருவகைத்து**

பிரதிட்டாகாலத்திலே சர்வசங்கார காலயவாக சிவலிங்கத்திலே சாந்நித்தியமாதற்காகச் செய்யக்கடும் ஆவாகனம் " சிற்பிரகாசாவானம் எனவுமங தினந்தோறும் பூசாகாலத்தில் சிவலிங்கத்தில் எழுந்தருலியிருக்கும் சதாசிவமூர்த்தியினுடைய நான்கு முகங்களிலும் வியாபித்திருக்கும் ஈசான முகம் தன்னைப் பார்க்கும்படி செய்து 'அபிமுகீகரண ஆவாகனம்' எனவும் ஆவாகனமடிருவகைப்படும். மூலமந்திரதினால் தரிசிக்கப்பட்ட பரிபூரணத்தை ஆன்மாவானது சிவபிரகாசமாகிய அலுளினால் அறிந்து அதில் அழுந்துதலே இதனுண்மையாகும்.

**தாபனம்**

தாபனமாவது தாயாநிதியே அடியேனுக்கு அனுக்கிரகம் செய்யும் நிமித்தம் இச்சிவலிங்கத்தில் எழுந்தருளியிருக்க வேண்டுமென்று அன்புடன் செய்யும் பாவனையாம். இதனுண்மையைக்கூறுமிடத்து ஆன்மா சிவபெருமானைத் திருவருளினால் அதிலழுந்துதலை நிவைபெறச் செய்தலாகும்.

*"அலையாழுந்த நிலைபெறல் தாபனம்"*

**சந்நிதானம்**

சந்நிதானமாவது ஆன்மாவினறிவு சிவபெருமானுடைய பரிபூரண குணத்திலும் சிவபெருமானது பரிபூரணத் தன்னையானது ஆன்மாவினறிவிலும் ஒன்றையொன்று பிரியாதபடி ஆண்டானுமடிமையுமாக இதனுண்மையாகும்.

**சந்நிரோமனம்**

சந்நிரோதனமாவது பகவானே எப்பொழுதும் என்னிடத்தில் அனுக்கிரகம் வைத்திருக்க வேண்டும் என்னும் மனேபாவனையேயாகும்.

ஆன்மாவினிடத்துப் பொருந்திய அறிவு எக்காலத்தும் நீங்காதபடி சிவத்திலொடுங்குதலெனும் உண்மையேயாகும்.

**அவகுண்டனம்**

அவகுண்டனமாவது எண்ணிறந்த காரணங்களைவுடையவாராகவும் சின்மயராகவும் எங்கும் நிறைந்திருப்பவராகவும் அருக்கும் பரமேசுவரரை பத்தர் அல்லாதவர்களுக்கு அறிவிக்காமல் மறைத்தல் என்று சோமசம்பு பத்ததி கூறுகிறது.

**பாத்தியாதி**

சிவனைப் பூசித்திலினால் சிவசக்தி பதியம் பெற்று சிவாக்கியத்தால் பாத்தியம் ஆவமனீயம் அருக்கியம் என்பவைபளைக் கொடுத்தல் ஆன்ம சுத்தியின் பொருட்டாகும்.

**அபிஷேகபலன்**

வடிகட்டிய திருமஞ்சனம் கங்காதீர்த்தத் திற்குச் சமான மாதலால் விருமஞ்சனத்தை வடிகட்டி வாசனைத் விரவியங்களையும் புஷ்பங்களையும் மிட்டு "அருளெனும் புனலினையாட்டி" ஏனக் காசிகாண்டம் பகர்ந்தாங்கு திருவருளாகிய ஞானமே திருமஞ்சனமேனப்பாவித்து அபுஷேகஞ் செய்யின் மல நிவாரணமாகும். "திகழ்மலசுத்தி நிமித்தமாக மகிழ்வுடனே திருமஞ்சனம்பண்ணி" என்பதால் உணர்க. சந்தனாதித்தைலம் சுகத்தையும் மாக்காப்பு மலநிவாரணத்தையும் ஆமலகம் ரோகசாந்தியையும் மஞ்சள் மா இராசவசியத்தையும் பஞ்ச கவ்வியம் ஆன்மா சுத்தியையும் பால் ஆயுள்விருத்தியையும் தயிர் பிராஜ விருத்தியையும் நெய் மோக்ஷத்தையும் தேன் சங்கீத தவன்மையும்

கருப்பஞ்சாறு நித்திய சுகத்தையும் சர்க்கரை சத்துரு நாசதிதையும் வாழைப்பழம் பயிர் விருத்தியையும் பலாப்பழம் லோக வசியத்தையும் மாம் பழம் சகல வெற்றியையும் தமரத்தம்பழம் பூமி லாபத்தையும் மாதுளம்பழம் பகை நீக்கத்தையும் நாரத்தம் பழம் நற்புத்தியையும் எலுமிச்சைப்பழம் மிருத்துசிவாரயத்தையும் இளநீர் சற்புத்திரபேற்றையும் அபமிருத்யு சிவாரயத்தையும் கோரோசனை தீர்க்காயுளையும் பச்சைக்கற்பூரம் பய நிவாரணத்தையும் கஸ்தூரி வெற்றியையும் பன்னீர் சாலோக்கியத்தையும் சந்தனக் குழம்பு சாயுச்சியத்தையும் சகஸ்ரவாரை ஞானத்தையும் ஸ்நபனம் ஜன்ம சாபல்யத்தியும் கொடுக்கு மென்று சிவாகமங்கள் செப்புகின்றன.

**திருவொற்றாடை**

சிவபெருமானுக்குத் திருவொற்றாடை சாத்தியவர்கள் தங்கள் மரபிலுள்ள சுற்றத்தார்களை நகரத்திலிருந்தெடுத்து முத்தியிற் சேர்ப்பார்கள்.

**சந்தனம்**

சுபந்த திரவியங்கள் செராக்கப்பட்டதும் திருவருட் சத்திமயமானதுமான சந்தனத்தைச் சாத்துவர்கள் பிரபஞ்ச வைராக்கிய முடையவர்களாய்ச் சிவலோகத்தை அடைவார்கள். மெய்யன்போடு சந்தனம் சாத்துவருடைய பேற்றை மூர்த்தி நாயனாருடைய சரித்திரத்தால் அறிக. இது திருவருட்சத்தி பதிதலென்னும் பாவனையாம்.

**புஷ்பதானம்**

வாசனையுள்ள புஷ்பங்களைச் சிவபெருமானது திருமுடியிற் சாத்துதல் சுத்தசைதன்னியமான ஆனந்தத்தின் பொருட்டாம்.

*"நறுமலர் தன்னை நல்வீட்டின்பங்*
*குறுகுத லேது வாகவுங் கொடுத்து"*

என்பதனால் அறிக. சாத்துவிக குணமுள்ள வெண்ணிற புஷ்பங்களால் சாத்துவிககாலமாகி உஷ்க்காலம் சாயரக்ஷத்தை மோக்ஷத்தை அடைவாரடகள்.

இராசதகுணமுடைய செந்நிறப் புஷ்பங்களால் இராசத காரமாகி மத்தியானத்திற் பூசித்தவர்கள் போகத்தை அடைவார்கள். இராசத சாத்துவிக குணமுடைய கொன்றை முதலிய ரஷ்பங்களைல் இராசத சாத்துவிக காலமாகிய பிராதக் காலத்தில் அருச்சித்மவர்கள் போக மோக்ஷங்களைப் பெறுவார்கள்.

இராசத தாமத பத்திரங்களைகிய வில்வம் முதலியவைகளால் அருச்சித்தவர்கள் போக மோக்ஷங்களைப் பெறுவார்கள்.

*வாசலஞ் செய்திமையோர் சாடோறும் மலர்தூவ*
*ஈசமெனும் பெருமானா ரினிதாக வுறையுமிடம்*
*யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் பொருநாளு*
*(மொழியாமே*
*பூசனை செய் தனித்தீருந்தான் புய்யிருக்கு வேளூரே*

– திருஞானசம்பந்தர்.

*விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்*
*அண்டர் நாயகன் றன்னடி சூழ்மின்கள்*
*பண்கு நீர்செயத பாவம் பறைந்திடும்*
*வண்டு கேர்பொழில் வான்மியூ ரீசனே.*

– திருநாவுக்கரசர்.

**வஸ்திரம்**

வெண்மை நிறமுடைய பட்டு வஸ்திரத்தை அன்புடன் சிவபெருமானுக்குச் சாத்தியவர்கள் சிவலோதத்திலிருப்பர். இது திரோதன சத்தி நீக்கமென்னும் பாவனையாம்

**தூப தீபம்.**

கிர்யா சத்தி ரூபமாகிய துாபத்தால் ஆதாரனை செய்தவர்கள் ஆவண மல சத்தியாகிய அறியாமையினின்று நீங்குவார்கள்.

சிற்சத்தியின் வாசமாய் ஞான விளக்கமாகியிருப்பது தீபம். இதனால் ஆரைதனை செய்பவர்களுக்குச் சிவபெருமான் அபமிருத்து நிவாரணத்தையும் பாபநீக்கத்தையும் ஞானத்தையும் கொடுத்தருளவார்.

**நைவேத்தியம்.**

யானையானது வியாம்பழத்தினுடைய சாரத்தை எப்படிப் பக்ஷிக்கின்றதோ அப்படியே கடவுள் மந்திரத்துடன் நிவேதிக்கப்பட்ட பொருளை ஏற்றருளுகின்றார். மனவமைதி பிறப்பதற்காகத்

தற்போதத்தை நைவேத்தியமாக ஒப்பித்தலே இதன் பாவனையாகும்

*பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீர்*
*ஆட்டிச் சொன்மல ரணிந்துதற் போதவின் னமுதை*
*ஊட்டித் தற்பர ஞானமா மோமவெங் கனலே*
*மூட்டிச் சம்புவின் பூசைடேன் முயற்சிய ரானார்.*

– திருவிளையாடற் புராணம்.

**சிவயாக மண்டப சொரூபம்.**

யாக மணடபமானது அத்துவாக்களின் வடிவமாயுள்ளது. மண்டபம் அமைக்கப்பட்ட இடம் இரு நூற்றிருபத்துநான்கு புவனாத்துவா வடிவாயுள்ளது. மண்டபத்திலே அமைக்கப்பட்ட பதங்பள் எண்பத்தொரு பதாத்துவாவடிவாக உள்ளன. மண்டபத்தின் நடுபாகம் ஐம்பத்தொரு வர்ணுத்துவா வடிவாயுளஙளது.கும்பங்கள் பதினெரு மந்திராத்துவாவடிவமாக உள்ளது. ஓமத்திரவியங்கள் முப்பத்தாறு தத்துவாத்துவா வடிவமாயுள்ளது. யாகசாலையானது சாந்விய தீதாகலா சொரூபமாகும். நான்கு துலாரங்களும் சாந்திக்கலை முதலிய நான்கு கலை வடிவ மாகும். என்று சைவ பூஷணம் பகரும்.

**ஆசனம்.**

யாக கும்பத்திலே ஆவாகிக்கப்படும் மூர்த் திக்கு உப வேதிகை அநந்தாசனமும் மகாவே திகை சிம்மாசனமும் வெல் யோகாசன மும்அரிசி பதுமாசனமும் எள் விமலாசனமும் நல்ல மலர் பிரணவாசனமுமாகும். புருதுவு முதல் குட்லை யீறாகிய முக்கத்தாறு தத்துலங்களும் பஞ்சாசனமாக அமைந்துள்ளது.

நெல் தாமரை நாளத்தின் முட்கனாகவும் அரிசி தாமரைப்பூ இதழ்களாகவும் பயநு தாமரை பொகுட்டாகவும் பாவனை செய்யப்படுகின்றன.

**யாக தேவர்கள்.**

பிரம விட்டுணுக்கள் இந்திராதேவர்கள் யாவரும் அசுத்தாமாயா புவனங்களிலுருப்பவர்களும் சுத்தவித்தியாதத்துவவாசிகளுமென இருதிறப்படுவர்.

சுத்த வித்தியாதத்துவத்தில் நந்தி முதலிய கணநாதர்கள் எண்மர்களும் பிரம விட்டுணு க்களும் இந்திராலோகபாலகர்களும் இருப்பார் கள். சுத்தவித்தை முதலிய தத்துவங்களி லிருப்பவர்களுடைய சரீரம் நைந்தவமாகையா லும் மலபரிபாக முற்றுப் பரமசிவனருளாற் பதம் பெற்றவர். ஆதலானும் பிறப்பக்கள் நீங்கி விளக்கத்தை அடைபவர் ஆகலானும் இவர்களே சிவபூசையாகாதி ஆவார்கள். என்பது சிவாகம நூற்றுணிபாகும். அசுத்த மாயாதத்துவ வாசி களாகிய பிரமவிட்டுணு அந்திரன் முதலிய தேவர் களது சரீரம் பிரகிருதி சம்பந்த மாகலானும் முன் பரமசிவன் அனுக்கிரகமில்லாமையாலும் அவர்களுடைய தானம் பசுத்தானமாகையாலும் அசுத்தத்துவம் முப்பத்தொன்றையும் மனசாற் கடச்து சுத்தவித்தியாதத்துவமயமான யாகசா லையை அடைத்து பூசித்து வணங்குவதனாலும் அசுதடதபுவனவாசுகளான புரம விட்ணு முதலியோர் சுத்தவித்தியாதத்துவமயான யாகசாலையில் பூசிக்கப்படத்தக்கவர்கலல்லர்.

**ஆகுதி**

யாகசாலையிலுள்ள சிவாக்கினியில் ஆகுதி செய்தல் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அனுபவத்துக்கு வரவொட்டாது சுத்தமாகக்கும் பாவனையாகும்.

**கர்ப்பூர ஆராதனை**

கற்பூரம் வெண்மைநிற முடையதாய் அக்கினி பற்றியவிடத்தே அதன் வடிவமாக விளக்கி ஒரு பற்றுமில்லாமல் முற்றுங்மரையப் பெற்று ஆமாயத்துடன் கலந்து அத்துவிதமாய் விளங்கல்போல ஆன்மா வெய்மை நிறமான சாத்துவிதகுணத்தைக் பொருந்திஞானக் கினு பற்றியவிடயத்தை பசுந்தன்மை நீக்கி சிவத்தன்மை விள்ங்கப்பெற்று துாலசூக்கும சரிரங்கள் நீங்பப்பெற்று எல்லாப்பற்றுங்கழன்று சிவத்தோடு கலந்து அத்துவிதமாய்ப் பெரா னந்தப் பெருவாழ்வடைதல் வேண்டும் என்னும் பாவனையாகவே கர்ப்பூராதனை செய்யப் படுகின்றது.

*"அக்கினி கர்ப்பூரத்தை அறவிழுங்கிக் கொண்டாற்*
*மக்கினம்பட்டுள்ளே மருவிருந்தானடி.* (போல்)

– பட்டினத்து அடிகள்.

*"தீ தணையாக் கற்பூர தீபமென நான்கண்ட*
*சோதியுடனென்றித் துரிசறுப்ப தெந்நாளே.*

– தாயுமான சுவாமிகள்.

**நாஸ்காரம்**

பிரமவிட்டுணுக்களுது தொழிலையும் அவர்களை அதிட்டிருக்கும் ஞானக்கிரிகளையும் தற்போதமென்னும் அதிகாரத்தையும் நீங்கி நதியான சமுத்திரத்தோடு செர்ந்து ஒன்றாயிருத்தல்போல் ஆன்மா சிலத்தோடு சேர்ந்து அத்துவிதமுற்றிருப்பதே நமஸ்காரத்தின் உண்மையாகும்.

*"ஞானத்தாற் றெழுவார் சில ஞானிகள்*
*ஞானத்தாற் றொழவே னுனை நானலேன்*
*ஞானத்தாற் றொழவார்கள் தொழக்கண்டு*
*ஞானத்தா யுனை நானுந் தோழுவனே."*

என்பதனாலும்

*"பெருகலாந் தவம் பேதைமை தீரலாந்*
*திருகலாகிய சிந்தை திருத்தலாம்*
*பருகலாம் பரமாய தோரா னந்தம்.*
*மருகலானடி வாழ்த்தி வணங்கவே"*

என்பதனாலுமன்றிக.

திருச்சிற்றம்பலம்.

☆ ☆ ☆

*"யஸ்ய சர்வே சமாரம்பா; காம ஸங்கல்ப வர்ஜிதா*
*ஞானாக்னி தக்த கர்மண் தமாஹுு பண்டிதம் புதா"*

***Whose doings are all devoid of design and descie for results, and whose acliors are all buenf by fine of knowledge him, the oceges call wine***

– பகவத்கீதை

# திருக்கேதீச்சரமும் திருமுறைகளும்

**வித்துவான் தி. பட்டுச்சாமிஓதுவார்.**

*"தொண்டர் நாடொறும் துதிசெய*
*அருள் செய் கேதீச்சரம் அதுதானே."*

குமரியின் தெற்கே தென்கடலின் அண்மையில் அமைந்திருக்கும் பெருந்தீவு இலங்கைத்தீவு (ஈழநாடு) ஆகும். இந்த இலங்கைத்தீவு விராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்திலே 'இடைகலை நாவு ஓடும்தானம்' என்று சாந்தோக்கிய உபநிடதமும் சிவபூமி என்று திருமந்திரமும் புகழும். இத்தீவு எந்நாளும் அழியாமல் பற்பலவளங்களைக் கொண்டது; எவ்விடத்தும் முத்துக்களையும் இரத்தினங்களையும் தன்னிடத்தே கொண்டு திகழ்வது: "எங்கணும் மணியிலங்குமால் இலங்கை" என்பது தட்சிணை கயிலாய புராணம் "தென்கடல் முத்தும் குணகடல் துகிரும் ஈழத்து உணவும்" என்பது பட்டினப் பாலை.

இலங்கைப்பதி சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே பலமாகாணங்களாகப் பிரிக்கப் பெற்றுத் திகழ்வது. இங்கு சரித்திர காலத்திற்கு முற்பட்டே பல சிவத்தலங்கள் உள்ளன. அவற்றுள் திருக்கேதீச்சரம் என்னும் சிவத்தலமும் ஒன்றாகும்.

**இலங்கை – திருக்கேதீச்சரம் :**

இலங்கைப்பதியின் வடபெரும் நிலப்பரப்பில், வடகடல் அருகே மன்னார் என்ற சிறு தீவு உள்ளது. அது தலைமன்னார், கோட்டை மன்னார் என்ற இருபிரிவுகளை உடையது. கோட்டை மன்னாரிலிருந்து வட பெரும் நிலத்துடன் இணைக்கப்பெற்ற பாலத்தின் வழியாகத் தென்திசை வழியில், ஆறரைக் கல் தொலைவில், வடகடல் ஓரமாகத் தென்பால் திகழ்வது திருக்கேதீச்சரம் என்ற சிவத்தலம். ஆதியில் இப்பகுதி மாதோட்ட நகர், மாந்தைநகர் என வழங்கியது. மாதோட்டம் என்பது ஊரின் பெயர்; திருக்கேதீச்சரம் என்பது மாதோட்டத்து ஊரின்கண் விளங்கிய சிவாலயத்தின் பெயர். தற்போது மாதோட்டம் என்ற பெயர் அருகிச் சிவாலயத்தின் பெயராகிய திரக்கேதீச்சரம் என்ற திருப்பெயரே பெருவழக்காக வழங்கி வருகிறது.

ஆதியில் இத்திருக்கேதீச்சரம் திருக்கையிலைமலையின் சிகரங்களின் ஒன்றாகத் தோன்றி விளங்குவது. முன்னொரு காலத்தில் திருக்கயிலையினையும் அதன் சிகரங்களையும் இறுகக் கட்டிப் பிடித்து நின்ற ஆதிசேடனோடு மாறுகொண்ட வாயுதேவன் தனது காற்றினால் மோதித்தள்ளப் பெற்றுத் தென்பகுதியில் – ஈழப்பகுதியில் ஒரு சிகரம் வந்து விழுந்து பூமியுள் பதிந்து நின்றது. அதன் மீது அமைந்த – சுயம்பு வடிவான சிவலிங்கப் பெருமான் திருக்கோயில் தென்கயிலாயம் அல்லது ஈழக்கயிலாயம் எனப் பெயர் பெற்றது இங்கு தோன்றிய ஊரும்.

இத்தலத்துத் தென் கயிலாத நாதனை – சிவலிங்கப் பெருமானை நவக்கிரகங்களில் ஒருவனான கேது என்பவன் பூசித்தப் பேறு பெற்றான். அதனால் இத்திருக்கோயில் திருக்கேதீச்சரம் எனப் பெயர் வழங்கியது.

இங்கு கேது பகவான் பூசித்த பின்பு அக்கேதுநாதனைச் சூரபன்மன் மனைவியான பதுமகோமளையின் பாட்டானும் விசுவகன்மா என்பவனின் தந்தையுமான மாதுவட்டா என்ற தேவதச்சன் வந்து பூசித்து வழிபட்டான். பிறகு அவன் திருக்கேதீச்சரத் திருக்கோயிலைச் சிறப்பு முறைப்படி திருப்பணி புரிந்தான்; ஊரையும் நன்முறையில் அமைத்தான். ஊர் மகாதுவட்டா புரம் எனப்பெயர் பெற்றதென்று வடமொழி தட்சிணகயிலாய மான்மியம் கூறுகிறது. இம் மகாதுவட்டா புரம் என்ற பெயரே காலப்போக்கில் மாதோட்டம் என்று மருவி வழங்கியது என்பர்.

இம்மாந்தோட்ட நகர் பௌத்த இலக்கியங்களில் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து மகாதீர்த் தம் என்ற ஒரு பெயரைப் பெற்று வருகிறது. மாதீர்த்தம் – இது மிகப் புனிதமான ஒரு புண்ணியத்தலம் என்பதாகும். தீர்த்தம் – பரிசுத்தம்; புனிதமாக்குவது; அதாவது தன்னிடம் வந்து முழுகுவோரின் – தரிசில்போரின் பாவங்களைப் போக்கித் தூய்மை செய்வதாம். இறைவனுக்குத் தீர்த்தன் என்ற ஒரு திருப் பெயரும் உள்ளது. "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே" என்பது ஆறாம் திருமுறை; "ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என்பது எட்டாம் திருமுறை – திருவாசகம்.

இம்மகாதீர்த்தத்து அருகே பாலாவி என்ற சீவநதி ஒன்று ஓடுகிறது. மக்கள் வாரணாசி (காசி) சென்று கங்கையில் நீராடுவது போல இங்குள்ள மக்களும் மாதோட்டத்தைப் புனிதத்தலமாகக் கருதி வந்து பாலாவில் நீராடியதாகத் தெரிகிறது. ஆகவே மாந் தோட்டம் – திருக்கேதீச்சரம் – பாலாவி நதி இம்மூன்றும் மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றிற் சிறப்புடையனவாம். இச்சிறப்பினால் தெய்வத்தன்மை விளங்கும் இத்தலம் மகாதிவ்யத்தலம் ஆகும்.

**மாதோட்டம் – துறைமுகப்பட்டினம் :**

பண்டைக் காலம் தொட்டே இம்மாதோட்ட நகர் இலங்கை – வடகடல் துறைமுகமாக இருந்துவந்ததாகும். இத்துறைமுகத்தின் வழியாகத்தான் தசரதராமன், அகத்திய முனிவர், அருச்சுனன் முதலியோர் இலங்கை சென்றிருத்தல் வேண்டும் என்றும் கி. மு. 6ஆம் நூற்றாண்டில் கலிங்கநாட்டு இளவரசன் – விஜயன் என்பவன் தன் நண்பர்களுடன் இலங்கைக்குச் சென்றான் என்றும் ஆராச்சியாளர் கூறுகின்றனர். இம்மாதோட்டக் கப்பல் துறைமுகம் போக்குவரத்துத் துறைமுகமாகவும் விளங்கிவந்தது.

இங்குக் கடல் வாணிபம் வெகுகாலம் வரையில் பண்டமாற்றாகவும் பின்பு சிலகாலம் வரையில் பண்டமாற்று நாணயமாற்றும் கொண்டதாகவும் இருந்து வந்தனவாம். இவ்வாணிபம் மாசந்தை போல் விளங்கியது. அதன் தந்தை என்பது ஆந்தை என மருவியது போல மா சந்தை என்பது மாந்தை என ஆயிற்று. ஆகவே மாதோட்ட நகர் மாந்தை நகர் என வழங்கப் பெற்றது. "நன்னர் மாந்தை முற்றத்து ஒன்னார், பணிதிறை கொணர்ந்த பாடுயர் நன்னகர்" என்பது அகநானூறு; "புன்னாகச் சோலை புனற்றெங்கு சூழ்மாந்தை" என்பது முத்தொள்ளாயிரம்.

இம்மாதோட்டக் கடற்கரை பலநாட்டுக் கப்பல்களையும் தோணிகளையும் கொண்டு விளங்கிவந்தது. அங்கு வாணிபத்தின் பொருட்டுப் பற்பல நாட்டு மக்கள் வந்து கூடி இருப்பர். இதனை "வங்கம் மலிகின்ற கடல்மா தோட்ட நன்னகர்எனவும் "வையம் மலிகின்ற கடல்மா தோட்ட நன்னகர்" எனவும் வரும் சுந்தரர் தேவாரத்தால் அறியலாம்.

**மாதோட்டத் தலச் சிறப்பு :**

முற்காலத்தில் மாதோட்ட நகரும் அங்குள்ள திருக்கேதீச்சரத் திருக்கோயிலும் நீர்வளம், நிலவளம், செல்வவளம், குடிவளம் முதலிய பலவளங்களுடன் பாலாவி நதியின் வளமும் கூடிச் சிறப்புற்று விளங்கின.

"வாழையம் பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்ட...... கேதீச்சரம்" என்பதும் "மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர்.... கேதீச்சரம்" என்பதும் "கடல்வாய்ப் பொன் னிலங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்ட...... கேதீச்சரம்" என்பதும் இரண்டாம் திருமுறை. "மாவின்கனி தூங்கும் பொழில்மா தோட்ட நன்னகரில் பாலாவி கரைமேல்...... திருக்கேதீச்சரத்தானே" என்பதும் "வங்கம் பொழில் சூழ்ந்த திருக் கேதீச் சரத்தானே" என்பதும் ஏழாம் திருமுறை.

மாதோட்டத்திருக்கேதீச்சரத்தலம் காசி (வாரணாசி)த்தலத்தைப் போலச் சிறப்புடைய புண்ணியத்தலம். இங்கு மரணம் அடையும் ஒரு உயிர் அச்சமயம் திருக்கேதீச்சரப் பெருமான் மகிமையால் அது சிவாலயத்தின் பாகமாகத் தலை வைத்துக் கிடக்குமாம். ஒருவர் இத்தலத் தில் மரணம் அடையும் தருவாயில் திருக்கேது நாதன் அவரைத்தம் மடிமீது இருத்திக் காசி யைப் போல அவரது வலக்காதிலே ஸ்ரீ பஞ்சாட்

சரம் மந்திரத்தை ஓதி இவர்க்குச் சிவகதி அருளுவர் எனத் தலமான்மியம் கூறுகிறது. "திருவாரூர் பிறக்க முத்தி" என்பது போல இத்தலத்துப் பிறந்த மக்கட்கும் முத்தி பேறு கிட்டுவது திண்ணம்.

ஒருவர் கடல் சூழ்ந்த இம்மாதோட்டத் திருக்கேதீச்சரத்தலத்தை அடைந்து சிலகாலம் தங்கித் திருக்கேதுநாதனை இரவுபகல் சிந்தித்துத் துதித்து அவனது திருவடிக்கமலங் களை வணங்கி வழிபடும் அன்பர்களே சிவத்தொண்டர்களாம். அத்தொண்டரது கொடுவினைகள் அவர்களை அடைவதும் இல்லை; துன்புறுத்துவதும் இல்லை; பாவச் செயல்களும் அவர்களை வந்து தூக்குவதும் இல்லை.

".....மலிகடல் மாதோட்டத்து எல்லை யில்புகழ் எந்தைகேதீச்சரம் இராப்பகல் நினைத்தேத்தி அவ்வவ் ஆசறுத்து அரனடி இணைதொழும் அன்பராம் அடியாரே"எனபதும் ".....கனைகடல் கடிகமழ் பொழிலணி மாதோட்டம், கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை அடையாவே" என்பதும் சம்பந்தர் தேவாரம். "மாதோட்ட நன்னகரில், பாவவினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்.... திருக்கேதீச்சரத்தானே" என்பது சுந்தரர் தேவாரம்.

இத்தலத்துச் சிவமே நிலவும் நான்கு மாடவீதிகளிலும் திருவைந்தெழுத்தை - ஸ்ரீ பஞ்சாட்சரத்தை மனத்தில் செபித்துக்கொண்டு அங்கப்பிரதட்ணம் செய்பவர்களின் உடலுறு பிணிகள் நீங்குவதுடன் பிறவிப்பிணியும் நீங்குமென்க; "அங்கத்துறு நோய்கள் அடியார் மேலொழித் தருளி..... மாதோட்ட நன்னகரில்..... திருக்கேதீச்சரத்தானே" என்பதும் "ஊனத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருளி, ... மாதோட்டநன் னகரில், .... திருக்கேதீச் சரத்தானே" என்பதும் சுந்தரர் தேவாரம்.

**மாதோட்டப் பாலாவித் தீர்த்தத்தின் மகிமை :**

மாதோட்டத் திருக்கேதீச்சரத்தில் நிகழும் புண்ணிய தீர்த்தம் பாலாவி என்ற தீர்த்தம் ஒன்றேயாம். இதனை, "மாதோட்டத்துள் மன்னு பாலாவியின் கரையில் கேதீச்சரம்" எனச் சம்பந்தர் தேவாரமும் ".... மாதோட்டநன்னகரில், ..... பாலாவியின் கரைமேல், செய்ய சடை முடியான் திருக்கேதீச்சரத்தானே" எனச் சுந்தரர் தேவாரமும் கூறுகின்றன.

இப்பாலாவி தீர்த்தம் சிவவடிவமாகும்; இஃது இத்தலம் தோன்றியபோதே தோன்றியது. இமயத்திலுள்ள மானசவாவி என்னும் தெய்வத்தடாகத்தைப் போல மிகமேன்மை உடையது. இதனை, "பரம்பரன் உருவாய் உற்ற பாலாவி" என்றும் "பலவினை குறும்பு போக்கும் பாலாவி" என்றும் கேதீச்சரப்புராணம் புகழ்கிறது.

இப்பாலாவி சிவத்தீர்த்தம், திருக்கேதீச்சர ஆலயத்தின் அம்மன் சந்நிதிக்கு நேர் எதிரே – தென்பால் சிறிது தூரத்தில் உள்ளது. இது கி. பி. 9ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியான சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திலும் பெருநதி யாக இருந்து, மேலைக் கடலுடன் கலந்து நின்றதாக ஆராச்சியாளர் கூறுகின்றனர். தற்போது பாலாவியானது அணைகட்டித் தேக்கிய நீர்நிலைபோல் காணப்படுகிறது. அது கீழ்மேல் மிக. நீண்டு அகன்று ஏரிபோன்று திகழ்கிறது.

ஒருவர் இப்பாலாவி தீர்த்தத்தில் நாடோறும் ஸ்நானம் செய்து, கேதுநாதனைத் தரிசிக்கின் இஷ்ட சித்திகளைப் பெறுவர். அவ்வாறு இயலாதவர், விசேட புண்ணிய காலத்திலேனும் வந்து ஸ்நானம் செய்து இறைவனைத் தரிசிக்கின் இஷ்ட காமியங்களைப் பெற்று உய்வர் என்பது திண்ணம். ஒரு நாளேனும் பாலாவியில் வந்து ஸ்நானம் செய்யாதவர் அவரது மானுடப்பிறவி ஒரு பிறவி ஆகுமோ? ஆகாது என்று தலபுராணம் கூறும்.

ஒருவர் தமது பிதுர்தினத்தில் இப்பாலா வியில் வந்து நீராடி நியமம் முடித்து அங்கேயே திலதர்ப்பணம் அல்லது ஆமசிரார்த்தம் செய்து கேதுநாதனைத் தரிசித்து நெய்விளக்கு இட்டு வழிபடின் கயாவில் சிவதர்ப்பணம் அல்லது சிவசிரார்த்தம் செய்த பெரும் பயனை அடைவர்; தென்புலத்தாரும் மிகமகிழ்ந்து ஆவர்க்கு ஆசிகூறுவர்.

**மாதோட்டத்துக் கேதுநாதனின் பெருமை :**

இம்மாதோட்டத் திருக்கேதீச்சரத் திவ்யத் திருக்கேயிலில் எழுந்தருளிய மூலஸ்தான சிவலிங்கப் பெருமான் திருக்கயிலைச்

சிகரத்தில் முளைத்தெழுந்த - திருக்கேதார லிங்கம் போன்ற -சுயம்பு வடிவான மூர்த்தி ஆவார். அவர், தென்கயிலாய நாதர், ஈழக்கயிலாய நாதர், திருக்கேதீச்சர நாதர், மகாதுவட்டாபுர நாதர், கௌரிநாதர் எனப் பல திருநாமங்களைப் பெற்று விளங்குபவர்.

அன்றியும் ஆதியில் ஒருவகை நாககுலத் தினர் கேதுநாதனைப் பூசித்துவந்ததால் அவர், நாகநாதர் என்றும் மெய்யன்பர்களின் பிறவிப்பிணியினைப் போக்கும் அரிய மருந்தாகக் கௌரிநாதர் மாதோட்டத்தில் வீற்றிந்ததால் அவர் மாதோட்டத்து மருந்து என்றும் இராசேந்திர சோழன் கல்வெட்டு ஒன்றில் கேதுநாதன், இராசராசேச்சரத்து மகாதேவர் என்றும் திருப்பெயர்களைப் பெற்றுள்ளார்.

ஆங்காங்கே முழங்கும் மணமுரசின் ஒலியைப்போலக் கடலொலி நீங்காத மாதோட்டத்துத் திருக்கேதீச்சரத்தில் கேதுநாதன், பக்குவ ஆன்மாக்களுக்குத் திருவருள் புரியும் பொருட்டு எக்காலத்தும் அங்குநின்றும் பிரியாமல் வீற்றிருந்தருளுகின்றார் என்றும், இக்கேது நாதரே நித்திய கல்யாண மணவாளராக எழுந்தருளி இருந்து யாவருக்கும் மங்கல வாழ்வு அருளுகின்றார் என்றும் சைவத் திருமுறைகள் முழங்குகின்றன.

"..... மாதோட்டக், கேழல் வெண்மருப்பு அணிந்தநீன் மார்பர்கே தீச்சரம் பிரியாரே"

என்பது சம்பந்தர் தேவாரம். 'நனை கவிழ்வாய் மத்தமத யானையுரி போர்த்த மணவாளன்' என்பதும் சுந்தரர் தேவாரம். இங்கு எழுந்தருளிய அம்மையார் திருநாமம் கௌரியம்மையார் என்பதாம்.

**திருக்கேதுநாதனை வழிபட்டோர் :**

திருக்கேதீச்சரப் பெருமானைத் திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும், கேதுபகவான், மகா துவட்டா, அகத்திய முனிவர், பிருகுமுனிவர், தசரதராமன், அருச்சுனன் முதலியோர்களும், பாண்டியன், சேரமன்னன், கலிங்கநாட்டு இளவரசனான விஜயன், அவனது பிராமண குருவான உபத்தீசன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர்.

இலங்கை நகரிலும் மாதோட்ட நகரிலும் முற்பூறு வாழ்ந்துவந்த இராவணன், மாலியவான் மயன், மண்டோதரி முதலியவர்களும் திருக்கேதீச்சரரை நாளும் வழிபட்டு இஷ்ட சித்திகள் அடைந்தவர் ஆவர்.

திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமி கள் ஆகியோர் இராமேசுவரத் தென்பகுதியான கடற்கரையின்கண் நின்று திருக்கேதுநாதனை மனக்கண்ணால் தரிசித்து வயங்கி தொழுது தேவாரப்பதிகங்கள் பாடினர் என்று பெரிய புராணம் கூறும்.

---

திருக்கேதீஸ்வர தேவஸ்த்தானத்தில் பிரதம சிவாசாரியாராக பணியாற்றிய சிவஸ்ரீ ச. சுப்பிரமணியபட்டர் அவர்கள் ஆயிரம் பிறைகண்டு சதாபிஷேகம் நடைபெற்றதையிட்டு நகரத்தார் ஆகிய நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

சிவாச்சாரியார் அவர்களுக்கு எல்லாம் வல்ல எம்பெருமான் திரக்கேதீஸ்வர நாதனிதும் ஸ்ரீ பழைய கதிர் வேலாயுதஸ்வாமியினதும் பரிபூர்ண கடாக்ஷமும் ஆசியும் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்து இன்னும் பல்லாண்டுகாலம் சிறப்பாக சமயத் தொண்டாற்றும் வண்ணம் மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்,
ஸ்ரீ பழைய கதிர் வேலாயுத ஸ்வாமி கோவில் நகரத்தார்.

# நித்திய பூசையும் அதன் தத்துவமும்

– தருமபுரம் சிவாகமரத்னாகரம் எஸ். சுவாமிநாதசிவாசாரியர்.

**நூன்முகம் :** சர்வக்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசக்தி, அநந்தசக்தி, சுதந்திரத்வம் என்னும் ஆறு குணமுடையவராய், அஷ்டமூர்த்தியாய் விளங்கும் சிவபெருமான் எங்கும் வியாபகமாக இருப்பினும், சிவலிங்கம் முதலிய திருமேனியும் குருவும் சங்கமும் இடமாகிக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யுள் வழிபாட்டைக் கொண்டருளுவர். சிவபெருமான் இவ்விடயங்களில் தயிரில் நெய்போல் விளங்கி நிற்பர்; மற்றவிடயங்களில் பாலில் நெய்போல் வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே ஆன்மாக்கள் யாவரும் பரமபதியான சிவபெருமானை குரு, லிங்க, சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபட வேண்டும்.

இவ்வழிபாடு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாலும் செயற்பாலதேயாகும். மலம்நீங்கிய சிவஞானிகளும் பூர்வமலவாசனை தாக்காமையின் பொருட்டும் மேன்மேலும் சிவானந்தம் வளருதற் பொருட்டும், சிவலிங்கம் முதலிய திரு மேனிகளை வழிபடுவர். ஆன்மாக்களை முக்தியாகிய கரையில் ஏற்றும் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார். இவற்றை முறையாக வழிபடுவோர் பரமாசாரியரால் உண்மைஞானம் பெற்று முக்தியடைவர்.

*"மூர்த்தி தலம் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்*
*வார்த்தை சொலசற்குருவும் வாய்க்கும் பராபரமே."*

– தாயுமான சுவாமிகள்.

விபூதி இல்லாத நெற்றி வீண்; சிவாலய மில்லாத ஊர் பாழ்; ஈஸ்வர பூஜை செய்யாத ஜன்மா பாழ்; சிவனைக் கூறாத வித்தை பாழ் என்று "ஸ்மிருதிசங்கிரஹம்" என்னும் நூல் கூறுகிறது.

பிறவிகளுள் சிறந்த மானுட ஜன்மத்தை முற்பிறப்பில் செய்த புண்ணியமேலீட்னால் அடைந்த யாவரும் பசுபதியாகவும், உலகிற்குக் கர்த்தாவாயுமுள்ள சிவபெருமானைப் பூஜிக்க வேண்டும். அந்த சிவ பூஜையானது ஆன்மார்த்த பூஜை பரார்த்த பூஜை என இரு வகைப்படும். ஆசாரியாரால் தீக்ஷை செய்விக்கப்பட்டு, அந்தத் தீக்ஷாகுருவால் கொடுக்கப்பட்ட மண்டலம், க்ஷணிகம், ஸ்படிகம் முதலான லிங்கங்களில் ஆன்ம நலம் கருதிச் செய்யப்படுவது ஆன்மார்த்தமாகும். பரார்த்த பூஜை என்பது சிவாலயங்களில் தனக்கும் பிறர்க்கும் அருள் பாலிக்கும் பொருட்டுச் சிவாலயங்களில் விளங்கும் சுயாம்புவம், தேவிகம், திவ்யம், மானுஷம், ஆர்ஷம், ஆசுரம், பாணம் என்ற ஏழுவித லிங்கங்களுள் ஒரு லிங்கத்தில் ஆதிசைவர்கள் எனப்படும் சிவாசாரியாரைக் கொண்டு செய்விக்கப்படும் பூஜையாகும்.

*"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்*
*உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள*
*அண்ணலார் தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்*
*பெண்ணின் நல்லாளாயின பெருந்தவக் கொழுந்து"*

– பெரிய புராணம்

இருபத்தெட்டு ஆகமங்களையும், இருநூற்றிருபத்து நான்கு உபாகமங்களையும் தோற்றுவித்த பரம கருணாநிதியாகிய இறைவனை விரும்புவது சிவாகமத்தினால் செய்யப்படும் பூஜை என்பதை உணர்ந்த உமா தேவியார்.

*"இங்கு நாத! நீ மொழிந்த வாகமத்தியல் பினாலுனையர்ச்சனை புரியப்*
*பொங்குகின்ற தென்னாசை யென்றிறைஞ்சிப் போகமார்த்த பூண்முலையாள் போற்றி"*

என்றபடி, ஆலய வழிபாட்டின் அவ்வன்பினால் ஆன்மாக்களுக்குக் கிடைக்கும் அறம்பொருள் இன்பத்துடன் பேரின்பத்தையும் உலக மக்களுக்கு உணர்த்தவே திருவுளங்கொண்ட உமாதேவியார் காஞ்சிபுரம், திருவானைக்கா, மாயூரம், மயிலாப்பூர் முதலிய இடங்களில் சிவப்பெருமானைப் பூஜித்தாள் என்று அறியப்படுகிறது.

எல்லாக் காரியங்களையும் நிறைவு செய்வதாலும், ஆன்மாவிற்கு ஞானத்தை அளிப்பதாலும் பூஜை எனப் பெயர்பெற்றது. அத்தகைய சிவபூஜை செய்பவன் விஸ்தாரமான ராஜ்யத்தையும், அக்னி காரியத்தினால் சம்பத்தையும், ஜபத்தினால் பாபநிகரஹத்தையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகிறான். மதம் கொண்ட யானைகளும், காற்றைப்போல் வேகமாக ஓடும் குதிரைகளும், தேவவனிதைகளுக்கு ஒப்பான பெண்மணிகளும் எவருடைய இல்லத்தில் இருக்கின்றனவோ, அது முறையுடன் செய்யப்படும் சிவபூஜையின் பலன் என்ற வாக்கியங்களைக் கொண்டு, முறையுடன் செய்யப்படும் சிவார்ச்சனை ஆன்மார்த்த பூஜையாயினும் பரார்த்த பூஜையாயினும் அது வேண்டிய பயனை அளிக்கக் கூடியது ஆகும்.

சிவதீக்ஷைபெற்ற அந்தணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் யாவரும் ஆன்மார்த்த பூஜை செய்யலாம்; பரார்த்த பூஜை செய்யக்கூடாது.

சிவதீக்ஷை பெற்றவர்களாயினும் சாதாரண அந்தணர் முதலானோர் மோஹத்தினால் பரார்த்த பூஜையைச் செய்வார்களேயானால், அரசனுக்கும் ராஷ்டரத்திற்கும் நாசம் உண்டாகும். மற்றும் தனது ஜீவனத்திற்குச் சாமான்ய பிராம்மணர்கள் பரார்த்தமாகச் சிவனை அர்ச்சிப்பார்களேயானால் ஆறு மாதத்தில் வீழ்ச்சி அடைவார்கள். ஆதலால் அத்தகைய சாமானிய அந்தணர்களைக் கொண்டு பராத்தபூஜை செய்வதை நீக்கவேண்டும்.

சிவப்பிராமணர் எனப்படும் ஆதிசைவர்களாலே "ஆன்மார்த்தம் பரார்த்தம்" இரண்டும் செய்யத் தகுந்தது. சிவபெருமானின் ஆணையின் வசமுள்ளவர்களான ஆதிசைவர்களுக்குப் "பரார்த்த பூஜை" விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஆத்மார்த்த பூஜையும் செய்ய வேண்டும். சிவ பெருமானின் ஆணைக்குட்பட்ட இவர்களுக்குப் "பரார்த்த பூஜை" தோஷமற்றது.

(தீக்ஷைபெற்று ஆன்மார்த்த பூஜையைத் தனியாகச் செய்யாத ஆதிசைவர்கள் தமது தீக்ஷையில் இஷ்டலிங்கமாகப் பெற்ற மூர்த்தியை பரார்த்தாலய சிவபூஜையுடன் பூஜை செய்யலாம்; இவ்வாறு செய்வது சம்பிரதாயம்.)

சிவாலயங்களில் பரமார்த்த பூஜை செய்யும் சிவாசாரியார்கள், பதினாறு வயதிற்கு மேல் எழுபது வயது வரையில் செய்யலாம் என்று காமிகாமம் கூறுகிறது.

இத்தகைய ஆசாரியரைக் கொண்டு பரார்த்த பூஜையை முறைப்படி செய்தால், அதிவிருஷ்டி அனாவிருஷ்டி முதலான ஈதிபாதைகள் இல்லாமலும் நீர்வளம், நிலவ்ளம் முதலான செழுமையுடன் உலகம் விளங்கும். ஆலயங்களில் செய்யப்படும் பூஜையானது உத்தமோத்தமம், உத்தமமத்யமம், உத்தமாதமம், மத்தியமோத்தமம், மத்தியமமத்திமம், மத்தியமாதமம், அத மோத்தமம், அதமமத்யமம்

என்ற எட்டுக்கால பூஜை அஜிதாகமத்தில் கூறப்படுகிறது. அவைகளுள் உத்தமத்தில் கடைசியான ஆறுகால பூஜையானது இங்கு விளக்கப்படுகிறது.

சூரியன் உதயமாவதற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகைக்கு ஆரம்பித்து நடத்தப்படும் பூஜை உஷ:காலம் எனப்படும். காரணாகம வாக்கியப்படி உஷ: காலபூஜை முடிவதற்கும் சூரியன் உதயமாவதற்கும் சரியாக இருக்கவேண்டும்.

ஆசாரியன் உஷ: காலத்தில் அதாவது 361/2 நாழிகை அளவில் எழுந்து, அவசியமான நித்திய கடன்களை முடித்துக்கொண்டு, பல்துலக்கி ஸ்நாநம் செய்து (பஸ்மதாரணம்) விபூதி அணிந்து கொண்டு பத்து ஆவர்த்தி பஞ்சாக்ஷரம் ஜபித்து, தூய்மையான வெண்மை வஸ்த்திரம் உடுத்திக்கொண்டு, ருத்ராக்ஷரம் முதலிய பஞ்சாங்க பூஷிதராய், கையில் புஷ்பம் வைத்துக்கொண்டு, மூன்றே முக்கால் நாழிகைக்கு ஆலயத்துள் நுழைந்து சுவாமியின் சன்னதியில் புஷ்பத்தை எதிரில் போட்டு சாஷ்டாங்கமாக நமஸ்ரித்து பிரார்த்தித்துப் பள்ளியறைக்குச் சென்று பாவனையினால் இறைவனுக்கு தந்ததாவனம், ஸ்நானம் முதலியவைகளைச் செய்வித்து அஷ்ட புஷ்பம் அணிவித்துச் சிவபெருமானைப் பாதுகாயில் ஆரோகணித்துப் பிரதக்ஷிணமாக வந்து மூலகர்ப்பக்ரஹத்தில் வைத்து மூலலிங்கத்துடன் சேர்க்க வேண்டும். உதயத்திற்குமுன் ஒரு முகூர்த்தத்தில் (அதாவது இரண்டு நாழிகைக்குள்) உஷ:கால சோமாஸ்கந்தர் முதலிய மகேஸ்வரபேதங்களுக்கும் மற்றைய பரிவாரமூர்த்திகளுக்கும் பூஜை செய்யக்கூடாது.

ஆசாரியனுக்கு ஆன்மசுத்தி முதலான பஞ்சசுத்தி, பலி போடுதல் முதலியன கிடையாது. அதனை காரணாகமம் உஷ: காலபூஜை விதியில் காண்க.

உஷ:கால பூஜை முடிந்தவுடன் ஆசாரியன் யதோக்தமாக இரண்டு வித கர்மானுஷ்டானங்களைச் செய்து முடிந்தபின்னர் கால சந்தி பூஜைக்குத் தொடங்க வேண்டும். காலசந்திபூஜை தொடங்கு முன்பு "தீர்த்த சங்கிரஹணம்" – அதாவது ஆறு, குளம் முதலிய இடங்களிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வரவேண்டும்.

**தீர்த்த சங்கிரஹணம் :** சிவபெருமான் அர்த்தயாம பூஜையின் முடிவில், சிபிகை மீது எழுந்தருளி கீதம், நர்த்தனம் முதலிய வாத்ய கோஷங்களுடன் சயனாலயத்திற்குச் சென்றதும், பரமசிவனுடைய ஜடையிலுள்ள கங்கை அங்கு பள்ளி அறையிலுள்ள மனோன்மணி அம்பிகையைப்பார்த்து வெகு வேகமாக அங்கிருந்து நீங்குவாள். மீண்டும் கங்காதேவியை பரமசிவனுடைய ஜடாமகுடத்தில் சேர்க்கும் பொருட்டு வேதியர் சுத்தமாக இருந்து பலவித வாத்ய கோஷங்களுடனும் ஸகல உபசாரங்களுடனும் சுவர்ணம் முதலிய ஏதாகினும் ஒரு குடத்தில் நதியிலிருந்து நீரை நிரப்பி, மாவிலை தேங்காய் முதலியவற்றால் அலங்கரித்து பரிசாரகரின் தலை மீது வைத்து குடை வெண்சாமரங்களுடன் ஆலயத்தை வலம் வந்து, பலிபீடத்தின் மீது அல்லது நந்தியின் மீது அல்லது சிவலிங்கத்தின் மீது விஸர்ஜனம் செய்ய வேண்டும். இதற்கு "கங்கா ஹரணம்" (தீர்த்த சங்கிரஹணம்) என்று பெயர். இதன் பிறகு காலசந்தி தொடங்க வேண்டும்.

சூரியன் உதயம் தொடங்கி ஏழரை நாழி காலம் காலசந்தி பூஜா காலமாகும். அதில் முதலில் சூரியனைப் பூஜித்து பின்பு கணபதியை பூஜிக்க வேண்டும். அதன் பிறகு மகேஸ்வரபேதங்களுக்கும், மூல லிங்கத்திற்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் அபிஷேகம், அலங்காரம் செய்ய வேண்டும். நைவேத்யம் செய்யும் பொழுது முதலில் கணபதிக்கும் பிறகு மூலமூர்த்தியான சுவாமிக்கும், நடராஜர், சோமாஸ்கந்தர் முதலான பரிவாரமூர்த்திகளுக்கும் நிவேதனம் செய்து, அதன் பிறகு அம்பாளுக்கு நைவேத்யம் முதலிய உபசாரம் செய்து பலி போட்டு மடப்பள்ளியிலிருக்கும் குண்டத்தில் நித்யாக்னிகாரியம் செய்து, நித்யோத்ஸவம் செய்து சண்டேச பூஜையை முடிவாகச் செய்ய வேண்டும் என்ற முறையானது காலசந்தி பூஜைக்குரியதாகும்.

காலசந்தி பூஜை முடிந்தவுடன் 33/4 நாழிகைக் காலம் ஓய்வு நேரமாகும்; அதாவது 71/2 நாழிகைக்கு மேல் 111/4 நாழிகை வரையில் பொது மக்கள் தரிசனம் அர்ச்சனை முதலியன செய்யும் காலம். அந்தப் பதினொன்றேகால் நாழிகைக்குப் பிறகு உச்சிகால பூஜை செய்ய வேண்டும். அதற்கு ஸ்நபனம் பஞ்சகவ்யம் வைத்துப் பூஜித்து, வாஸ்து நாதனைப் பூஜித்துக் கொண்டு, துவார பூஜை செய்து லிங்க சுத்தியுடன் சுவாமிக்கு முறையாக அபிஷேகம் செய்து போகாங்கம்வரையில் பூஜித்துத் தேவிக்கும் அபிஷேகமும் சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அலங்காரமும் செய்து சண்டேஸ்வரருக்கு பூஜை செய்ய வேண்டும்.

காலையிலும் உச்சிகாலத்திலும் சாயங்கா லத்திலும் பலிபோட வேண்டும் என்ற காரணா கம விதிப்படி உச்சிகாலத்தில் பலிபோட்டுப் பூஜையை முடிக்க வேண்டும்; ஸநபனாங்கமாக ஹோமம் செய்ய வேண்டும்; பரிவாரங்களுக்கு பூஜை வேத்யம் கிடையாது.

அபிஷேக திரவ்யங்களின் வரிசையும் அளவும் பலனும்.

| வரிசை | திரவ்யம் | அளவு | பலன் |
|---|---|---|---|
| முதலாவது | வாசனைத்தைலம் | ஒருபடி | சுகமளிக்கும் |
| இரண்டாவது | மாப்பொடி | ஒருபலம் | கடனைத்தீர்க்கும் |
| மூன்றாவது | நெல்லிமுள்ளி | ஒருபலம் | அரசன் வசம் |
| நான்காவது | மஞ்சள் பொடி | ஒருபலம் | ரோகத்தைப் போக்கும் |

வாறு ஜப சமர்ப்பணம் செய்யாத பூஜை பயனற்றதாகும்; சுவாமிக்கும் ஆசாரியானுக்கும் தொடர்பு அற்று பீஜா பலன் கிட்டாது. ஆதலால் சுளுகோதகசமர்ப்பணம் முக்கியமாகும். இவ்வாறு சாயுங்கால பூஜை செய்ய வேண்டும். சாயரக்ஷையில் மகேஸ்வரன் முதலிய மூர்த்திகளுக்கும், பரிவாரமூர்த்திகளுக்கும், பிறகு தேவிக்கும் சண்டீசன் பைரவன் முதலானவர்களுக்கும் பூஜை உபசாரம் செய்து பலிஹோமம் நித்தியோத்ஸவம் செய்ய வேண்டும். இது சாயரக்ஷயின் முறையாகும்.

**அர்த்தயாம பூஜை :** சாயுரக்ஷாகாலபூஜை முடிந்தவுடன் தொடங்கி 33/4 நாழிகை அளவில் அர்த்தயாம பூஜை செய்ய வேண்டும். அதாவது 71/2 நாழிகைக்குமேல் 111/4 நாழிகைக்குள் செய்ய வெண்டிய பூஜை அர்த்[illegible]ாம பூஜை எனப்படும்.

சுவாமிக்கு அபிஷே[illegible] தின் பொருட்டு ஸ்நபன பூஜை செய்து, பஞ்சாமிருதம் பஞ்சகவ்யம் செய்து கொண்டு, சுவாம[illegible]கு சலாஸனம் பூஜை செய்து, அபிஷேகம் நிவேதனம் தூபம் தீபம் கொடுத்து, கௌரிக்கும் நி[illegible]வதனம் செய்து சயனாலய பூஜையுடன் க்ஷேத்ரபாலபூஜை செய்து முடிக்கவேண்டும்.

அர்த்தயாமத்தில் அபிஷே[illegible]ம் செய்யலாம்; செய்யாமலுமிருக்கலாம். அபிஷேகம் செய்வதானால் சுவாமிக்கு மாத்திரம் செய்யலாம். அவ்வாறு செய்யும் அபிஷேகத்திற்கு நல்லெண்ணெய் கூடாது: ரஸவர்க்கம் சேர்ந்த பஞ்சாமிருதம், தேன், சர்க்கரை, பசுவின்பால், இளநீர், சந்தனம் விசேஷ திரவியங்களாகும்; மற்றவை வேண்டியதில்லை. தைவாபிஷேகம் செய்ய விரும்பினால், சந்தனாதி தைலம் முதலிய வாசனை தைலத்தால் அபிஷேகம் செய்யலாம்.

பூஜையின் ஐந்தொழி[illegible] : அபிஷேகம் படைத்தல் தொழில், நைவேத்யம் காத்தல்தொழில், பலிபோடுதல் சங்காரத்[illegible]ழில் தீபம் திரோபாவத்தொழில், ஹோமம் செய்தல் அனுக்ரஹத் தொழில் ஆகும்.

மேற்கூறியவாறு ஆறு கால பூஜையின் முறைகளைச் சில ஆகமங்களின் சாரங்கொண்டு எமது புத்திக்கு எட்டியவாறு கூறியுள்ளாம். "ஆகமவிபின" என்றார் ஒரு அபிக்ஞர். "ஆகமம்" என்பது நுழைய, முடியாத காடு; 28 எண்ணையுடையதாயினும், 224 உபாகமங்ளை உடையது. இறைவனின் திருவாக்கு கேட்பவர் தகுதிக்கு ஏற்றவாறு சிலவற்றைக் கூட்டியும், குறைத்தும் மாற்றியும் கூறியிருக்கிறார் பரம கருணாநிதியான பரம சிவன். இதைக் கண்ணுறும் அன்பர்கள் குற்றம் நீக்கிக் குணம் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இக்கட்டுரையை திருக்கேதீச்சரம் ஸ்ரீ கௌரி அம்பாள்சமேத ஸ்ரீ கேதீச்வரஸ்வாமி திருவடி களில் மலராக கும்பாபிஷேக மலருக்கு அளிக் கிறோம். திருக்கேதீச்சரம் ஆலய தருமகர்த்தாக் களும், திருப்பணிக் குழுவினர்களும், நோயற்ற வாழ்வுடன் சகல போக பொக்யங்களைப் பெற்று நூறு ஆண்டுவாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மழை வழங்குக மன்னனோங்குக
பிழையில் பல்வள மெங்கும் பெருகுக
தழைக வஞ்செழுத்தோசை தரையெல்லாம்
பழைய வைதீக சைவம் பரக்கவே.

சிவம்.

# ஸ்ரீ தியாகையர் கீர்த்தனை

ஆட்கொண்டார்

இராகம் - பிலஹரி

தாளம் - ஆதி

**பல்லவி**

க்ஷேத்ர பாலக க்ஷேமமு கிந்த
தாமஸ மேலரா ஸகல பாக்யதபயக (க்ஷேத்ர)

**அனுபல்லவி**

க்ஷாத்ரமுகா தர்ம ராஜுநி மதஹரண
ஸ்ரீப்ரண தார்த்தி ஹராக்ஞதோ ஜேஸின (க்ஷேத்ர)


**சரணம்**

ஸாதுஸத்யவ்ரத ஸுசரித வத்ஸுடகு
சோக நாசன ஸுந்தரமூர்த்தி
வாது சேயக ஸுரவர்ந்தித சரணஸ்ரீ
வர தியாகராஜு நீ சரணமு நம்மின (க்ஷேத்ர)


வழங்கியது :- ஸ்ரீ தியாக ப்ரம்ம மஹோத்ஸவ சபா, திருவையாறு.



கும்பாபிஷேகம் விசேஷசந்தி



கேதீச்சரம் துவஜா ரோகணம்



சோமாஸ்கந்தர் பிரதிஷ்டை
கேதீச்சரம்



யாக பூசை கேதீச்சரம்

# சிவபூஜை தத்துவம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம்,
சிவஸ்ரீ எஸ். சுவாமிநாத சிவாச்சாரியார்

(இறைவனுக்குப் பூஜைசெய்யும் பூஜகர் இலக்கணம், பூஜை முறைகள், பூஜையின் தத்துவம், உபசாரங்களின் உட்பொருள், குற்ற நீக்கம், பூஜையால் அடையும் பயன் போன்ற பல்வேறு கருத்துக்களை வேதாகம மேற்கோள்களுடன் விளக்குகிறது இக்கட்டுரை.)

சிவாகம முறைகொண்டு ஆலயங்களில் செய்யப்படும் பூஜை நித்யம் நைமித்தியம், காம்யம் என மூவகைப்படும். நித்யபூஜை உத்தமோத்தமம், உத்தமமத்தியமம், உத்தமாதமம், மத்திய மோத்தமம், மத்தியமமத்தியமம், மத்திய மாதமம், அதமோத்தமம், அதமமத்தியமம் என்று எட்டு வகைப்படும். உத்தமத்தில் மூன்றாவதாகவுள்ளது ஆறுகால பூஜை.

**ஆறுகால பூஜைக்குரிய நேரம் :**

தினகரனுதயத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகை தொடங்கி சூரிய உதயம் வரையில் செய்யவேண்டிய பூஜை உஷ : காலம் பூஜையின் முடிவில் சூரியன் உதயமாக வேண்டும். பிறகு சூரியன் உதயம் தொடங்கி ஏழரை நாழிகை வரையில் ப்ராதக்கால பூஜையின் காலம் (காலசந்தி) அவ்வேழரை நாழிகைக்குமேல் ஐந்து நாழிகை சங்கவகாலம் (ஓய்வு. பக்த்தர்கள் தெரிசிக்கும் நேரம்) இதற்குமேல், ஏழரை நாழிகை மாத்தியந்தின காலம்; அதாவது பன்னிரண்டரை நாழிகைக்கு மேல் இருபது நாழிகை வரையில் உச்சிக்கால பூஜையின் காலமாகும். அதன்பிறகு அபரான்னகாலம். சூரியன் அஸ்தமிக்கும் முன்பு மூன்றேமுக்கால் நாழிகை முதல் செய்யப்படும் பூஜை பிரதோஷகால பூஜை. சூரிய அஸ்தமனம் தொடங்கி ஏழரை நாழிகையளவில் செய்யப்படும் பூஜை சாயங்கால பூஜை (சாயரக்ஷை). அதன் பிறகு மூன்றே முக்கால் நாழிகை அர்த்தயாம பூஜா காலம் (ஏழரை நாழிகைக்குமேல் பத்தரை நாழிகைக்குள்).

**பூஜகர் :**

பரார்த்த பூஜை செய்யத் தகுதி உள்ளவர் ஆதிசைவர்கள் (குருக்கள்) என்று ஆகமங்கள் வலியுறுத்துகின்றன. மற்ற அந்தணர்களும் பூஜிக்கக்கூடாது என்று கூறுகிறது. அவ்வாசாரியர் சமய விசேஷ நிர்வாணதீக்ஷை பெற்று, ஆசாரியாபிஷேகமானவராய் மந்திரம், கிரியை, பாவனைகளின் தேர்ச்சி பெற்றவராய் பதினாறு வயதுக்குமேல் எழுபது வயதுக்கு உள்பட்டவராய் இருக்கவேண்டும்.

**பூஜைசெய்யும் முறை :**

ஆசாரியன் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்குமுன் எழுந்து ஸ்நானம் நித்தியகர் மானுஷ்டானம் முதலியவற்றை முடித்துக் கொண்டு சூரியன் உதிக்க மூன்றேமுக்கால் நாழிகை இருக்கும் பொழுதே சிவாலயத்திற்குச் சென்று இறைவனுடைய சன்னதியில் புஷ்ப்பாஞ்சலி செய்து ஷாஷ்டாங்கமாக நமஸ்க்கரித்துவிட்டு கை, கால்களை அலம்பிக் கொண்டு பஞ்சசுத்தி செய்து முடித்துப் பிறகு பூஜை தொடங்கவேண்டும்.

முதலில் க்ஷேத்திரபாலரைப் பூஜித்து முத்ரா தண்டம் (திறவுகோல்) பெற்று சயனாலய பூஜை முடித்து சயனாலய மூர்த்தியை கர்ப்பாலயம் சேர்த்து மூலலிங்கத்திற்கு அபிஷேகம் தீபாராதனை செய்து, தேவிக்கும் பூஜைசெய்ய வேண்டும், சோமாஸ்க்கந்தர், நடராஜர் முதலிய மகேச்வரமூர்த்திகளுக்கும் பூஜை உஷக்காலத்தில் கிடையாது.

**தீர்த்த சங்கிரஹணம் :**

காலசந்தி பூஜை ஆரம்பம் செய்யும் முன்பு, நதி முதலிய யாதானுமொன்றிலிருந்து திருமஞ்சனம் கொண்டுவந்து நந்தியின் சிரசில் அல்லது பலிபீடத்தின் சிரசில் விடவேண்டும். இறைவன் முதல் நாள் அர்த்தயாம காலத்தில் சயனாலயம் சென்றதும் இறைவனின் ஜடையிலிருக்கும்

கங்காதேவி அங்குள்ள மனோன்மணியைப் பார்த்துவிட்டு அங்கிருந்து கிளம்பி வெளியில் சென்று நதி முதலிய தீர்த்தத்தில் கலந்து விடுகிறாள். ஆதலால் அந்தக் கங்கையை மீண்டும் இறைவனிடம் சேர்ப்பதே இதன் தத்துவம்.

**காலசந்தி பூஜை :**

சூரியனை முதலில் பூஜைசெய்து விநாயகரையும் அர்ச்சித்து சுற்றுக்கோவிலிலுள்ள எல்லாப் பரிவாரமூர்த்திகளுக்கும் அபிஷேகம் அலங்காரம் செய்துவைத்து, மூல லிங்கத்திற்கு அபிஷேகம் அலங்காரம், நிவேதனம், தீபாரதனை, உபசாரம் முடித்துப் பிறகு நடராஜர் முதலிய எல்லா மூர்த்திகளுக்கும் நிவேதனம், தீபாரதனை செய்து பின்னர் தேவிக்கும் அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை செய்து சண்டீச பூஜையுடன் பூர்த்தி செய்யவேண்டும்.

**உச்சிக்கால பூஜை :**

உச்சிக்கால பூஜையின் ஆரம்பத்தில் ஸ்னபனம் வைத்து பஞ்சகவ்யம் செய்து த்வார பூஜையுடன் மூலலிங்கத்திற்கு அபிஷேகம் அலங்காரம் செய்து நைவேத்தியம் முதலிய உபசாரம்செய்து தேவிக்கும் இவ்வாறு செய்து சண்டீசனுக்குப் பூஜைசெய்து பூர்த்திசெய்ய வேண்டும்.

**பிரதோஷகால பூஜை :**

முதலில் நடராஜப்பெருமானுக்கு பூஜை நைவேத்தியம் தீபாராதனை செய்து முடித்து பிறகு மூலலிங்கத்திற்கு அபிஷேகம் நைவேத்தியம் தீபாராதனைகளைச்செய்து அதன்பிறகு சோமாஸ்கந்தர் தேவி இவர்களுக்கும் பூஜை செய்யவேண்டும்.

**சாயங்கால பூஜை :**

ஸ்நபைம் த்வாரபூஜையுடன் மூல லிங்கத்திற்கு அபிஷேகம் அலங்காரம் செய்து நைவேத்தியத்துடன் ராஜோபசாரத்துடன் பூஜை செய்து பிறகு மகேச்வராதி பரிவாரங்களுக்கும் நைவேதனம் செய்து பிறகு பார்வதி தேவிக்கும் சண்டன், பைரவன் வரையில் பூஜை நிவேதனம் செய்து அக்னிகாரியம் நித்யோஸவத்துடன் முடிக்கவேண்டும்.

**அர்த்தஜாம பூஜை :**

நல்ல வாசனையுடைய தைலம் சந்தனாதித் தைலம் (வேறு தைலம் கூடாது) அபிஷேகம் செய்யவேண்டும். இல்லையேல் தேன், சக்கரை, பால், இளநீர் சந்தனம் இவைகளை அபிஷேகம்செய்து நிவேதனம் செய்து தேவிக்கும் பூஜை செய்தவுடன் பாதுகாராதனம், க்ஷேத்ரபால பூஜையுடன் பூர்த்தி செய்ய வேண்டும்.

**பூஜாதத்துவம் :**

செய்யப்படும் பூஜை யாவும் பிரதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து பூத சம்பந்த மாகும். அதாவது சந்தனம், பழம், கிழங்கு, புஷ்பம், அன்னம் முதலியவை பார்த்திவ உபசாரம். திருமஞ்சனம், பால், தயிர், முதலியவை அப்பு உபசாரம். இரத்னம், கர்ப்பூரம் மதலியவை அக்னி உபசாரம் – தூபம், சாமரம், விசிறி முதலியவை வாயு உபசாரம். மணி, தோத்திரம், வாத்யம், முதலியவை ஆகாச உபசாரம். சித்தாந்த சாராவளி

*"கபீராபாய தெளர் பாக்ய க்லேச*
*நாசன காரணாத்!*

*தர்ம ஞான ப்ரதானாச்ச*
*கந்த த்யபிதீயதே!!*

(நறுமணமுள்ள சந்தனம்) சுகந்தம், சாத்த வேண்டும்.

அதிகமான அபாயத்தினின்றும் காப்பது. துர்ப்பாக்கியம், க்லேசம் இவைகளைப் போக்குவது என்ற செயலினால் கந்தம் எனப் பெயர் பெற்றது. இது போல் புண்யத்தை வளர்ப்பதாலும் பாபக்கூட்டங்களை ஒழிப்பதாலும் புஷ்ப்பம் எனப் பெயர் வந்தது. நாவுக்கரசர்;

*"விண்ட மாமலர் கொண்டு*
*விரைந்து நீர்*
*அண்ட நாயகன்றன் னடி*
*சூழ் மின்கள்*
*பண்டு நீர்செய்த பாவம்*
*மறைந் திடும்*
*வண்டு சேர் பொழில்*
*வான்மியூரீச னே."*

தூபமானது பாபத்தைக் கொளுத்தும், ஆன்மாவை மறைத்திருக்கும் ஆணவ மல சக்தியாகிய அறியாமையை நீக்கும்

தத்துவமடையது. (கிரியா சக்தியை அதிதேவ தையாகக் கொண்டது தூபம்). சிற்சக்தியின் வாசமாய் ஞானவிளக்காயிருப்பது தீபம் எனவே தீபத்தினால் அபமிருத்யு நிவாரணமாகும்.

ஆவாஹனத்திற்குப்பின் மது பர்க்கமும், சந்தனாபிஷேகத்திற்குப் பின் ரஹஸ்ய நிவேத னமும், திருவொற்றாடைக்குப்பின் சுத்தான்ன நிவேதனமும் அலங்காரத்திற்குப்பின் அலங்கார நிவேதனம் அதாவது வர்க்கான்னம் அல்லது திருத்தளிகை செய்யவேண்டும்.

**உபசாரம் :**

உபசாரங்களாவன : 5 உபசாரம், 10 உபசாரம், 16 உபசாரம், 25 உபசாரம், 36 உபசாரம் 40 உபசாரம் என்ற பல பிரிவை உடையன். ஒவ்வொரு உபசாரப் பொருள்களுக் கும் தனித்தனி அதிதேவதைகள் உண்டு. அந்தந்த அதிதேவர்கள் திருப்த்தியடைந்து நமக்கும் இறைவனின் அனுக்ரகம் கிடைக்க உதவுகிறார்கள்.

**உபசாரப்பொருள்களின் அதிபதிகள் :**

1) தூபத்திற்கு அக்னிதேவன், 2) மகாதீ பத்திற்கு சிவன், 3) நாக தீபத்திற்கு கேது, 4) விருஷப தீபத்திற்கு தருமதேவதை, 5) புருஷாமிருக தீபத்திற்கு விஷ்ணு, 6) பூர்ண கும்பத்திற்குருத்ரன், 7) பஞ்சதட்டுத்தீபத் திற்கு பஞ்சப்பிர்மதேவதை, 8) நக்ஷத்திர தீபத்திற்கு 27 நக்ஷத் திரங்கள், 9) மேருதீபத்திற்கு த்வாதசாதித்யர்கள், 10) திருநீற்றில்பரமேச் வரன், 11) கண்ணாடியில் சூரியன், 12. குடையில் சந்திரன், 13) சாமரத்தில் மகாலக்ஷ்மி, 14.)விசிறியில் வாயுதேவதை, 15) ஆலவட்டத் தில் பிரும்மா, 16) கற்பூரத்தில் அக்னி என்ப வர்கள் அதிதேவர்களாவார்கள்.

**குற்ற நீக்கம் :**

எனத் தொடங்கி என்று கூறுகிறது சிவாகமம். அதாவது தீர்த்த அபிஷேகத்தினால் 10 அபாரதத்தை போக்குகின்றார். இவ்வாறு பாலினால் 100 அபராதத்தையும் தயிரினால் 1000 அபராதத்தையும் போக்கும் இறைவன் சந்தனாபிஷேகத்தினால் எல்லையற்ற குற்றத்தைப் போக்குகின்றார்.

**சுளுகோதக சமர்ப்பணம் :**

சுளுகோதக சமர்ப்பணம் செய்யாவிடில் பூஜை பயனற்றது. பணனில்லாத காரியம் செய் வது பாபம். எனவே பூஜையின் முடிவில் கையில் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு கைநிறைய அர்க்கிய ஜலத்தை எடுத்துச் சுட்டுவிரல் நுனி யால் இறைவனின் முன்பு அந்தத் தீர்த்தத்தைப் பூமியில் விட்டுவிட்டு, அந்த புஷ்பத்தை சுவாமிக்குச் சாத்துவது. இவ்வாறு சாத்தினால் பூஜை சபலமாவதுடன் மூன்று தலைமுறை களுக்குச் சிவலோகம் கிடைக்கும். இது சிவாகமத்தில்

**பூஜாத்திரவியத்தின் பயன் :**

எண்ணை அபிஷேகத்தினால் சௌக்கியம் உண்டாகும். இவ்வாறு பஞ்சாமிருதத்தினால் பரிசுத்தம், நெய்யினால் முக்த்தி, பாலினால் ஆயுள் விருத்தி, தயிரினால் புத்திரப்பேறு, தேனினால் சுகம், அன்னாபிஷேகத்தால் சாம்ராஜ்யம், சந்தனத்தினால் மோக்ஷம் கிடைக்கும். வஸ்திரத்தினால் தாரித்திரியம் நீங்கும். புஷ்பமாலை ஐசவர்யமளிக்கும். நைவேத்தியத்தினால் அரசபதவி கிடைக்கும் தாம்பூலத்தினால் குறைவற்ற பயன் உண்டாகும்.

**திரவியலோபத்தினால் உண்டாகும் தீமை :**

சந்தனம் இல்லையேல் குஷ்டம் உண் டாகும். புஷ்பமில்லையேல் குலமழியும். தீர்த்த மில்லாவிடில் துக்கமுண்டாகும். தூபமில்லா விடில் சுகக்குறைவு உண்டாகும். தீபமில்லை யேல் தனநாசம் உண்டாகும். நைவேத்தியமில் லாவிடில் துர்பிக்ஷம் உண்டாகும் என்று ஆகமங் கள் கூறுகின்றன.

**பூஜையால் அடையப்படும் நன்மை :**

– காரநாமம்.

யாகம், தவம், தானம், புண்யதீர்த்தாடனம் இவைகளாலுண்டாகும் பலனுக்கு நூறுகோடி பயன் சிவலிங்கார்ச்சனையால் உண்டாகும். மற்றும்,

பூஜகருடைய தவவலிமையாலும் பூஜையின் அதிகத்திகாலும் பிம்பத்தின் லக்ஷணத்தினாலும் சிலையானது தெய்வத் தன்மையையடைகிறது.

# பதினென் புராணச் சுருக்கம்

வைதிக தர்ம வர்த்தனி ஆசிரியர், பிராணஸாகரம்,
ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா

(வேத அங்கமாகிய புராணங்களின் உள்ளுறை, பாகுபாடு அத்தனையும் விளக்குவதுடன் அவை எப்படி அறிவியல் உலகிற்கு உண்மை விளக்கவும், கடவுள் நெறி பரப்பவும் துணை புரியும் என்று விளக்குகின்றார். 'புராண சாகரம்' எனும் புகழ் பெற்ற வடமொழிப்புலவர்.)

**புராணம் :**

மிகப் பழமையான பதினான்கு வித்தைகளில் ஒன்று புராணம். இது வேதத்தின் அங்கமாகும். வேத தத்துவத்தைக் கதைகளின் மூலமாக மாந்தர் மனத்திலே பசுமரத்தாணி போல் பதிப்பிப்பது புராணம். துவாபரயுகத்தின் முடிவில் விஷ்ணு வேத வயாஸராகத் தோன்றி புராணப் பாகுபாடு செய்தார். ஆதலின் "வ்யாஸாய விஷ்ணு ரூபாய வயாஸ ரூபாய விஷ்ணவே" என்பர்.

**பதினெட்டு என்ற எண்ணின் பெருமை :**

பதினெட்டு என்ற எண் வெற்றியை அளிக்க வல்லது. அதனை மனதிற்கொண்டு பலவற்றைப் பதினெட்டாக வகுத்தனர் முன்னோர்கள். 18 கிராமங்கள், 18 ஜாதிகள், 18 மொழிகள், 18 வாத்தியங்கள், உடுத்தும் ஆடை 18 முழம், பாரதம் 18 பர்வா, பாரதப் போர் 18 நாட்கள், ஆங்கு அழிந்த படை 18 அக்ஷௌஹிணி, கீதை 18 அத்யாயம், வேள்விகளில் 18 பேர் ஈடுபடுவர், ஸூக்ஷ்ம உடல் 18 பொருட்களால் அமைந்தது, தர்ம நூல்கள் 18, ஆகமங்கள் 18, சபரிமலை ஐயப்பன் படி 18. ஆகவே புராணங்களையும் வ்யாஸர் பதினெட்டாகப் பகுத்தார்.

**புராணத்தில் உள்ளதென்ன?**

புராணத்தில் இல்லாததென்ன? மறைகளிலுள்ள வேள்விகள் பிரும்மா முதல் கொசு ஈறாக உள்ள உயிரினங்களின் படைப்பு, பிரும்மாண்டத்தின் அமைப்பு, நவக்ரஹ மண்டலம் அவைகளின் சலனம், அதனாலுண்டாகும் நன்மை தீமைகள் சிருங்காரம் முதல் ப்ரும்மவித்தை ஈறாக உள்ள சாத்திரங்கள், நக்ஷத்திரமண்டலம், சொர்க்க நரகம், பதினான்கு உலகங்கள், அங்கே வாழ்பவரின் சரிதம், ஆலய அமைப்பு, தேவதைகளை ப்ரதிஷ்டை செய்த விருதங்கள், துதிகள், சிற்பம், கோபுரம், பிராணிகளின் உடலமைப்பு, நாடிகளின் எண்ணிக்கை, மூச்சு, உடல், எலும்பு, உரோமம் இவற்றின் எண்ணிக்கை, பிறத்தல், இறத்தல், பின் ஜீவன் செல்லுமிடங்கள், மேகம், மழை, சூரிய சந்திர கிரஹணம் கால அளவு, சங்கீதம், நடனம், காவிய நாடக அமைப்பு, கீதைகள், சகுனம், கனவு, நோய், அதை அகற்றும் வழி, விலங்கு, செடி கொடிகளுக்கு சிகிச்சை, பாம்பு எத்தனை முட்டையிடும், கூடுவிட்டுக் கூடுபாயும் வகைகள், நீதி, விமானம், ரதம், வெற்றி பெறவழி, சூன்யம் வைப்பது எடுப்பது, பசியின்றி இருக்க மருந்து, எங்கு வசிக்கவேண்டும்? யாருடன் பழக வேண்டும்? நமக்காக, பிறருக்காக என்ன செய்ய வேண்டும்? குருபரம்பரை, சீடர் கடமை பெண்கள், கடை நிதிகளைக் காணும்வகை, ஞான, பக்தி, கருமம், வேதாந்தம், இன்னும் பல எண்ணற்ற விஷயங்கள், புராணத்தில் உள்ளன.

**1. பிரும்ம புராணம்:**

பிரும்மாவினால் கூறப்பட்டதாலும் அவர் பெருமையை வர்ணிப்பதாலும் இப்பெயர் பெற்றது. பதின்மூன்றாயிரம் சுலோகங்களையும், 143 அத்தியாயங்களையும் கொண்டது. கோத்திரங்களுக்கும் ப்ரவரங்களுக்கும் முதற்காரணமான ஏழு முனிவர், 8 வஸு 11 ருத்திரர்கள், 12 ஆதித்தியர்கள் பிறப்புப் பெயர், 14 மன்வந்த்ரம், மார்த்தாண்டன் என்ற சூரியனின் கதை, தன்வந்த்ரி அவதாரம், ஆயுர்வேதம், 12 சூர்ய பூஜை, சிவ சகஸ்ரநாமம், ஸூர்ய அஷ்டோத்தரம், முருகன் பர ஸ்தீரிகளிடம் பார்வதியைப் பார்த்தது. அகல்யையைப்பற்றி

இந்திர கௌதமர் போட்டி, ஏன் கருடா? சுகமா? என்பதற்குக் காரணமான கருடமணிநாத கதை, கங்கையின் பற்பல கட்டிடங்கள், கிருஷ்ண சரிதம், சுபத்ரையின் முற்பிறவி, கோணாதித்திய க்ஷேத்ரம், தீர்த்த யாத்திரை, உமாவின் வர்ண விசேடம், சகல பாபங்களையும் அகற்ற வல்ல பாரம்பர ஸ்தோத்திரம், கௌசிகன் பூர்வ ஜன்மம் முதலியவைகள் இங்குக் காணப்படும் விசேடங்களாம்.

**2. பாத்மம் :**

பத்ம வடிவமான உலக விஷயம் கூறப்படுவதால் பாத்மம் எனப்படும். ஆதி சிருஷ்ட பூமி பாதாள புஷ்கர உத்தர என்ற கண்டங்களுக்கு 628 அத்தியாயங்களும்; 55000 சுலோகமுமுள்ள இதுவும் பிரும்ம புராணம் என்றாலும் இது சிறந்த புராணம். வாலி, சுக்ரீவர், பிரஹலாதர் இவர்களது முற்பிறவி, விஷ்ணுவின் 1008 நாமம், கிருஷ்ணனது 108 நாமம். இரசு துளசி மகிமை, 25 ஏகாதசிகளின் பெயர் பெருமை கதைகளுடன், பகவத்கீதை 18 அத்தியாயங்களுக்கும் தனித்தனிக்கதை, பாகவத மஹிமை, வைசாக மஹாத்மியம், ராம அச்வமேத விரிவு, க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள், விருத்தங்கள், பெண் கடமை, துர்வாஸ சாபத்தால் தர்மம், 3 பிறவி எடுத்தல், மோதகம் உண்டான வகை, கோ விருதம், பாகவத ஸப்தாஹம், சந்ததி உண்டாகா தபாபம், ஸதாசாரம், சிவகீதா, ராம கீதா பிரதக்ஷிண தத்துவம், கற்பூர தத்துவம், ஆஞ்சநேயரது சிவபக்தி, வேதாந்தக்கதை முதலியவைகளைக் காணலாம். காளிதாஸன், பவபூதி, கிருஷ்ணமித்திரர், தேசிகன் முதலியோர் இப் புராணத்தினின்றும் தங்கள் நூல்களுக்கு ஆதாரம் கருத்து சில பதங்கள், சில பாதங்கள் ஆகியவைகளைக் கைக்கொண்டனர்.

**3. விஷ்ணு புராணம் :**

இது பூர்வம், உத்தரம் என இரு பிரிவுகளைக் கொண்டது. விஷ்ணுவைப் பற்றியது. 23 ஆயிரம் சுலோகங்களைக் கொண்டது. பூர்வபாகம் 36 அம்சமுள்ளது. இதற்கு ஏழு உரைகள் உள. பராசரர் இதை மைத்ரேயருக்கு உரைத்தார். வேதாந்தம் வைராக்கியம் நிறைந்தது. ஸ்ரீ சங்கரபகவத்பாதர் தனது பாஷ்யத்தில் இந்தப் புராண சுலோகங்களையே அதிகமாக எடுத்துக் காட்டுகிறார். துருவன், பிரஹ்லாதன், யாக்ஞவல்க்யர் கங்கை, ஜடபரதர், நிதாகர், வ்யாஸாவாதாரம் வேதம் வகுத்தல், தன்வந்த்ரி, வரப்போகும் மன்னர் ராம கிருஷ்ண சரிதம். கவியின் தன்மை முதலியன பூர்வ பாகத்திலும், கர்மவிபாகம், கீதம் நாட்டியம் காவியம் நாடகம் அர்த்த சாஸ்திரம் பிராகிருத மொழி முதலியனவும் ஹம்ஸ கீதையும் உத்தரபாகத்தில் உள்ளன. இதற்கு வில்ஸனது ஆங்கில மொழிபெயர்ப்பும் உளது.

**4. சைவம் :**

சிவ புராணமிது. இதையே வாயுபுராணம் என்பர். வாயு கூறியதால் அப்பெயர் உண்டானது. சிவபுராணம் என்ற புராணத்தில் சில மாறுதல்களுடன் வாயுபுராணம் என்ற பெயரால் அச்சிட்ட வேறு நூலும் உள்ளது. சைவம் 24 ஆயிரம் நுலோகம் 459 அத்யாயங்கொண்டது. வித்யேச்வரருத்ர சதருத்ர உமா கைலாஸ வாயவீய என 7 ஸம்ஹிதைவடிவமாகவும் இரு காண்டங்களாகவும் அமைந்துள்ளது. லிங்கமும் சரீரமும் அமைந்தவர் சிவனே! திருபுரனை ஜயிக்க விஷ்ணு ஜிநநாக வந்தது. விபூதி, உருத்திராட்சம், பஞ்சாட்சரி சிவராத்ரி 5 முகம், சிவனது 1008 நாமா, கணேசன், ஸ்கந்தன் வீரபத்ரன், பரகாய ப்ரவேச மந்த்ரம், சிவனே சிறந்தவர், ப்ரதோஷம், பிரும்மாவிற்கு வேள்வியில்தான் பூசை, நாரத மோட்சம், சிவன், சதிக்கு விஷ்ணு ஸகஸ்ரநாமமும் அதற்கு ப்ரதிநிதியாக ராம மந்த்ரமும் கூறல் தாக்ஷாயணி ராமனைப் பரீக்ஷித்துத் தன் உடலைவிட்டுப் பார்வதியானது, சரப அவதாரம், உபமன்யு, கிருஷ்ணன் சிவபஞ்சாட்சரியால் சாம்பனைப் பெற்றது. பன்னிரண்டு ஜோதிர்லிங்கம் முதலியவைகள் இதில் கூறப்படுகின்றன. குமாரஸம்பவம் என்ற காளிதாஸனது நூலில் இதிலுள்ள வர்ணனைகளும் பதங்களும் பாதங்களும் காணப்படுகின்றன

**5. பாகவதம் :**

விஷ்ணுபுராணமிது. 12 ஸ்கந்தம் 335 அத்யாயம் 18 ஆயிரம் சுலோகமுள்ளது. பகவானது விராட்ரூப உபாஸனை 23 அவதாரங்கள், த்ருவ ப்ரஹ்லாத ஜடபரத அஜாமிள கஜேந்த்ர, விரிவான க்ருஷ்ணலீலை. உத்தவர் அக்ரூரர் மைத்ரேயர் மூலமாக வேதாந்தம் கோபிகாகீதம் ப்ரமர கீதம் கிருஷ்ணன் பாகவதத்தில் புகுந்து

பூத உடலை விடுதல் முதலியன பாகவத விசேடங்கள். இதன் சுலோகங்கள் கடினமாயி ருப்பதால் இது வியாஸர் எழுதிய மஹா புராணமில்லையென வாதமிடுவர் சிலர். வேதம் வகுத்து வேதாந்த சூத்திரம் இயற்றியவுடன் கூறியதால் வேதம்போல் கடினமானது இது என்று பதில் கூறுவர். இந்தியர் இருவர் இதை ஆங்கிலப் படுத்தினர்.

தேவீ பாகவதம் – விஷ்ணு பாகவதம்போல் 12 ஸ்காந்தமும் 318 அத்யாயங்களும் 18 ஆயிரம் சுலோகங்களும் உள்ளன. முற்றிலும் தேவியின் பெருமையையே வர்ணிக்கிறது. கதைகளும் மந்திரங்களும் தேவியின் அவதாரங்களும் பற்பல அசுரவதங்களும் 1008 காயத்ரி நாமாக்களும் தேவி வசிக்கும்படியான மணித்வீபமும் இதில் வருணிக்கப்படுகின்றன. சாக்த மதத்திற்கு உயிர்நாடி போன்றது. இதைப் பலர் தமிழ்ப் படுத்தி இருக்கின்றனர். விக்ஞான ஆனந்தர் இதை ஆங்கிலப்படுத்தி இருக்கிறார்.

**6. பவிஷ்யம் அல்லது பவிஷ்யோத்தரம் :**

எதிர்காலத்தில் வரும் விஷயங்களைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. 585 அத்யாயங் களும் 14500 சுலோகமும், பிராம்ம மத்யம பிரதிசர்க்க உத்தர என்ற 4 பர்வாக்களும் உள்ளன. இந்தப் புராணம் இரண்டு இடங்களில் அச்சிடப்பட்டது. நமது காலத்தில் நாம் கேட்டதை முன்கூட்டியே கூறி இருக்கிறது. ஜைன, முகம்மதிய, சிறிஸ்துவ மதங்களைப் பற்றியும், ஆங்கிலேயர் நம் நாட்டை ஆள்வது, நாமதேவர், கபீர், சங்கரர், மத்வர், இராமானுஜர் வராஹமிகிதர், உதயசிம்ஹ ஜயச்சந்த்ரன் முதலியவர்களைப்பற்றி இது கூறுகின்றது. மதாபிமானமும் நம்பிக்கையுமுள்ளோர் வயா சரது வரும் பொருள் உரைக்கும் திறமையை போற்றுவர். இதில் விரதங்கள் மொழிகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஹிந்தி, ஆங்கிலச் சொற்கள் உதாரணமாகக் கூறப்பட்டுள்ளது. (பாநீயம்) – (வடமொழி) – பாணி (ஹிந்தி) ஷஷ்டி – வடமொழி – ஸிக்ஸ் ஆங்கிலம் போன்ற பல உதாரணங்களை இதில் காணலாம்.

**7. நாரதீயம் :**

நாரதர் சனகாதியர்களுக்கு உரைத்தார். 207 அத்யாயங்களும், 25 ஆயிரம் சுலோகமும் உள்ளன. 2 அர்த்தங்களாக அமைந்தது. விக்ஞா நாநந்தர் என்பவர் இதை ஆங்கிலப்படுத்தி யுள்ளார். க்ஷேத்திரம், விருதம், தேவதைகளின் மந்திரம், 18 புராண சுருக்கம், குருமகிமை ருச்மாங்கதன் சரிதம் நாரதர் கோட்டானிடம் சங்கீதம் பயின்றது. வேத பாதஸ்தவம் பல நீதிகள் கரும அனுட்டானத்திற்கும் சிரார்த்தத்திற்கு முரிய பல துதிகளும் இதிலுள. ப்ருஹந்நாரதீயம் என்ற ஒரு உபபுராணமும் உண்டு.

**8. ஆக்னேயம் :**

அக்னி வசிட்டருக்குக் கூறினார். 383 அத்தியாயங்களும், பதினைந்தாயிரம் சுலோகங் களும் உள்ளன. இராமனைப்பற்றிய சில விசேடமான தத்துவங்கள், ஆலயம் அமைத்தல் தேவதா விக்ரஹ ப்ரதிஷ்டை மந்த்ரம், மருந்து, தனுர் வேதம், ரத்ன பரீக்ஷை, மோஹன மந்த்ரம், மோஹன ஔஷதி, எல்லா நோய்களையும் அகற்றவல்ல அபாமார்ஜன ஸ்துதி, இறந்தவரை எழுப்பும் மந்த்ரம், தனுர்வேதம், தேகப் பயிற்சி நாடகம், நடனம், கானம், யமகிதா தீக்ஷை, ஓமகுண்ட வீதி, இரண வைத்தியம், சில்பம், ஸ்த பதிகளுக்கு வேண்டிய ப்ரமாணம், பாலாரிஷ்ட சாந்தி, நாடீதத்வம் முதலிய அருமையான விஷயங்கள் இதில் காணலாம்.

**10. ப்ரும்ம வைவர்த்தம் :**

இது சூரிய புராணம். ப்ரும்ம, ப்ரகிருதி, கிருஷ்ண் ஜன்ம, கணேச என்ற 4 காண்டங் களும் 275 அத்யாயங்களும், 18 ஆயிரம் சுல லோகங்களும் கொண்டது, சாவர்ணி மநு நாரதருக்குரைத்தார். பிரும்மம் உலகாக மாறிய தால் பிரும்ம வைவர்த்தம் எனக் காரணப் பெயர் பெற்றது. கிருஷ்ணன் கணேசனானது, ஏகா நம்சா என்ற கிருஷ்ணன் சோதரியை துர்வாசர் மணந்தது, லக்ஷ்மி விரும்பாத இடம், க்ஷேத்திர மாகாத்மியம், துஸ்வப்னம் அதன் பரிகாரமிவை களுடன் ராதையின் சரிதம் விஸ்தாரமாகக் கூறப்படுகிறது. ஜயதேவர் எழுதிய அஷ்டபதி அல்லது கீத கோவிந்தத்திற்கு இதுவே மூல நூல். 'ஸேன்' இதை ஆங்கிலப்படுத்தியுள்ளார்.

**11. லிங்கம் :**

இதன் பெயரே விஷயத்தை விளக்குகிறது. கணேசர் என்றவரால் சிவதோஷிணி என்ற விரிவுரை இதற்கு இயற்றப்பட்டுள்ளது. இரண்டு பாகங்களிலும் 163 அத்யாயங்களும், 11 ஆயிரம்

சுலோகங்களும் உள்ளன. சிவயோகம் சிவதீக்ஷை சிவவிருதம் பஞ்சாக்ஷரி, சுவேதா், ததீசீ நந்தி, உபமன்யு முதலிய சிவபக்தர்கள் சரிதங்கள், விஷ்ணு கூறிய சிவ சகஸ்ரநாமம், விரிவான திரிபுரவத கதை, பசுபதி பாசம், ருத்ராக்ஷவகை லக்ஷணம், குரு சிஷ்யலக்ஷணம், 18 புராண விளக்கம், பவர் முதலிய 8 சிவ மூர்த்திகள் அவர்களது பத்தினி, சிவ பூஜை முறை, நந்தி மணம் முதலிய அரிய விஷயங்கள் இதன்பாலுள.

**12. வராஹம் :**

வராஹமூர்த்தி பூதேவிக்கு உரைத்தது. 218 அத்தியாயமும் 24 ஆயிரம் சுலோகமும் உள்ளது. தசாவதாரம் அகஸ்த்ய கீதை, பித்ரு கீதை ருத்ர கீதை நந்தி சரிதம். தீர்த்த மஹிமை 32 தேவ அபசாரங்கள் ஹரிஹர அபேதம் மாயா, மரம் வைக்க வேண்டியதின் அவசியம், சிரார்த்தம் கீதா மஹாத்மியம், திருபுரனை வஞ்சிக்க நாஸ்திக மதம் கூறியது முதலிய விஷயங்களை விரிவாக விளக்குகிறது இது.

**13. ஸ்காந்தம் :**

ஸநத்குமார, சூத சாங்கரி, வைஷ்ணவி, ப்ராஹ்மி ஸௌரி என 6 ஸம்ஹிதா 50 காண்டம் 81 ஆயிரம் சுலோகங் கொண்டது. சூதஸம்ஹிதையும் சாங்கரி ஸம்ஹிதையும் தவிர 4 அச்சாகவில்லை. ஓலைச்சுவடியும் பூரணமாகக் கிடைக்கவில்லை. சூத ஸம்ஹிதை, சிவசக்தி பூஜை, முக்தி பஞ்சாக்ஷரி, பிரம்மகீதை சூத கீதை முதலியவைகளை விளக்குகிறது. இதை 18 முறை படித்து ஸ்ரீ சங்கரர் வேதாந்த பாஷ்யம் இயற்றினார். சங்கர ஸம்ஹிதையில் தக்ஷயக் ஞமு அசுரயுத்தம், ஸ்கந்த அவதாரம் லீலை முதலியன காணப்படுகின்றன. கச்சியப்ப சிவாசாரியார் இதை மாத்திரம் செய்யுளாக இயற்றினார். திருப்பனந்தாள் மடம் அதை அச்சிட்டதைக் காணலாம்.

**அ. ஸ்காந்தம் :**

மாஹேஸ்வர, வைஷ்ணவ, ப்ராம்ம, காசி நாகர, ப்ரபாஸ என்ற ஏழு காண்டங்களும் 1694 அத்தியாயங்களும் 11 லக்ஷம் சுலோகமுமுள்ளது, மஹா ஸ்காந்தம் எனப்படுகிறது. 18 புராணங்களில் இதே மிகமிகப் பெரிது. அதுதான் மஹாபுராணத்தைச் சார்ந்ததென்று இதன் முகவுரையில் பிரசுரதாரர் வாதாடுவார்கள். இதில் எண்ணிறந்த அபூர்வ கதைகளும், தர்மங்களும் உள்ளன. இதிலுள்ள 100 அத்தியாயங்களைக் கொண்ட காசிக்காண்டம் தமிழில் செய்யுள் வடிவமாக உள்ளது. பிரம்ம காண்டத்திலுள்ள பிரமோத்தர காண்டத்தையும் தமிழில் காணலாம். இராமாயண பாரதங்களில் காணப்படாத கதைகள் எல்லாம் படித்தது போலாகும். கடோத்கசனுக்கு கிருஷ்ணன் காமகடங்கடையை மணம் செய்விப்பதும், அவர்கள் புத்ரனான இராவணன் பீமனைக் கொல்வதும் மிக ரசமான கதை.

**14. வாமனம் :-**

95 அத்யாயங்களும் 2400 சுலோகங்களுமே இதில் இருக்கின்றன. புலஸ்த்யர் நாரதருக்கு வாமநாவதாரத்துடன் கூறுகிறார். உருவில் சிறியதாயினும் விஷயம் நிறைந்தது. தீட்டில் ரதி காமனுடன் சேர்ந்ததால் பதியை இழந்தாள். பகவான் எந்தெந்த பெயருடன் இருக்கிறார். முராளீர், துந்து முதலிய அஸுரவதம், ராஸி சக்ரம், ஆருத்ரா நக்ஷத்திரத்திற்கும் சிவனுக்குமுள்ள சம்பந்தம் முதலியன வருணிக்கப்படுகின்றன. வாமநனாக இருந்து மூன்றடி மண் கேட்டு த்ரிவிக்ரமனாகத் தோன்றி அளந்ததால் கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பாதே என்ற பழமொழி தோன்றிற்று.

**15. கூர்மபுராணம் :**

கூர்மரூபியான பகவான் இந்த்ரத்யும்னன் முதலியவர்க்குக் கூறியதால் இப்பெயர் பெற்றது. இது பூர்ணமாக இல்லை. 99 அத்தியாயங்களும் 5246 சுலோகங்களுமே உள்ளன. ஸதி, பார்வதி, சிவனே ஆராதிக்கத் தக்கவன். 28 வ்யாஸர், ஈஸ்வர கீதை, வ்யாஸ கீதை, லிங்க உற்பத்தி, மாயா சீதையை இராவணன் கொண்டு போனது. அந்தகாசுர வதம், வேதப்பிரிவு, எந்த எந்த தேவதை எந்த எந்த பலனைத் தருவார். 18 புராண வரலாறு, விதவையாகாமல் இருக்கும் வழி முதலிய விஷயங்களை இங்குக் காணலாம்.

**16. மாத்ஸ்யம் :**

மாத்ஸ்யமூர்த்தி மனுவிற்குக் கூறினார். 292 அத்தியாயங்களும் 1400 சுலோகங்களும் உள்ளன. கௌரியின் 108 நாமங்கள் கோத்திரம் பிரவரம் பித்ருக்களின் பிரிவு, ராஜநீதி, தானம்

சிரார்த்தம் அதற்குரிய மந்திரங்கள். ப்ருஹஸ்பதி அரக்கரை ஏமாற்ற நாஸ்திகம் கூறல். சிரார்த் தத்தில் இருப்பவன் உண்டால் இறந்தவனிடம் அவன் உணவு சேர்வதெப்படி? தர்மம் என்ற கிள்வியின் பொருள் என்ன? அமாவாஸ்யை ஏன் பித்ருக்களுக்கு ஏற்ற நாள்? என்ற கேள்விகளுக்கு விடைகளும், தாரகன் குழந்தை தோன்றிய ஏழாவது நாள் தன்னைக் கொல்ல லாம் என வரம் கேட்டது. தானம் வாங்குபவர் எப்படி அந்தப் பாபத்தை அகற்றுவது. துலா புருஷதானம் முதலியவை வர்ணிக்கப் படுகின் றன. இதிலுள்ள சுலோகங்களே சிரார்த்தத்தில் கூறப்படுகின்றன. இப்புராணங்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் உள்ளன.

**17. காருடம் :**

பகவான் கருடனுக்குக் கூறினார். ஆசார, பிரேத, பிர்ம்ம என்று மூன்று காண்டம். 318 அத்தியாயங்களும் 19,000 சுலோகங்களும் உள்ளன. இடையில் உள்ள பிரேத காண்டத்தை இறந்த வீட்டில் படிப்பார்கள். அதில் ஜீவன் பூதஉடலை விட்டு 800 யோஜனை தூரத்திலுள்ள ஸம்யமிநீ என்ற யமலோகம் செல்வது, இடையே 16 இடங்களில் தங்குவது. அங்கு நடக்கும் விசாரணை சிக்ஷை பலவகை நரகங்கள், புத்ரர், கர்மம் ஆகியவைபற்றி கூறுகிறது. மற்ற காண்டங்களில் விஷத்தின் தன்மை, அதை அகற்ற மந்திரம், மருந்து, 1008 விஷ்ணுவின் நாமங்கள், சுதர்சன மந்திரம் கூறப்படுகின்றன. 8 அத்தியாயங்களில் நீதி சாஸ்திரங்கள், 58 அத்தியாயங்களில் வைத்தியம், நாடி பற்றிய சோதனை, வழுக்கைத்தலையில் 7 நாட்களில் உரோமம் உண்டாகும் வகை, ப்ராம்மீதைலம் 9 ரத்னம் கீதாசாரம் முதலியவைகள் இதில் காணலாம். படிக்கப் படிக்கத் தெவிட்டாத புராணமிது. இதற்கும் ஆங்கில மொழி பெயர்ப்பு உண்டு.

**18. பிரும்மாண்டம் :**

ப்ரக்ரியா, அனுஷங்க, உபோத்காத உபசம்ஹார என்ற 4 பாகங்களும் 146 அத்தியாயங்களும் 12 ஆயிரம் சுலோகங்களும் உள்ளன. பிரும்மா பிரும்மாண்டத்தைப் பற்றிக் கூறினார். சிவனார். வேட உரவத்துடன் இராமனோடு போர் செய்து சந்தோஷமடைந்து ராவண ஜயவரம் தந்தது கூறப்படுகிறது. 40 அத்தியாயங்களில் பரசுராமன் சரிதம், 34 அத்தியாயங்களில் யாக்ஞ வல்க்ய சரிதம், கிருஷ்ணரது 108 நாமாக்கள், 88 ஆயிரம் முனிவர் தென் மார்க்கத்திலும் 80 ஆயிரம் ஞானிகள் வட மார்க்கத்திலும் இருந்து புவியைக் காத்தல், க்ஷேத்திரங்களின் மஹிமை கூறப்படுகின்றன. 32 அத்தியாயங்களில் ஸ்ரீ லலிதா தேவி பண்டாசுரனை வதைத்து உலகைக் காக்கும் செய்தி கூறப்படுகின்றது. இதன் 4 பாதங்களும் 4 வேதங்களுக்குச் சமம் என்பர்.


ஜெர்மனி அமெரிக்கா போன்ற நாடுகள் இப்புராணங்களை விலைக்கு வாங்கி பற்பல இயந்திரங்களையும் மருந்துகளையும் செய்த னர். அறம் வாழி! புராணம் வாழி!! அறம் வளர்ப் போர் வாழி!!





அண்மையில் கொட்டாஞ்சேனையில் ஐங்கரன் மண்டபத்தில் நடைபெற்ற அச்சுவேலி, சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் அவர்கள் எழுதிய "சிவலிங்கப் பிரதிஷ்டா விதி" என்னும் நூலின் வெளியீட்டு விழாவின் போது பிரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மாவிடம் இருந்து முதற்பிரதியை பட்டர் ஐயா பெற்றுக் கொண்டார்.

திருவாசகக மடத்தில் நடைபெற்ற சிவ பூசை மகா நாட்டிற்கு குருமார் அழைத்துச் செல்லப்படும் காட்சி





வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் கும்பாபிஷேகம்

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் கும்பாபிஷேகம்

# உபநிடதங்கள் கூறும் கடவுள் கோட்பாடு

குமாரசாமி சோமசுந்தரம்.

இந்த உலகத்திற்குக் கருத்தா யார்? அண்டங்கள் சராசரங்கள் ஆகியவற்றைப் படைத்தவர் யார்? இவ்வாறான வினாக்கள் மிகப் பழைய காலத்திலிருந்து மனிதர்களால் கேட்கப்பட்டு வருகின்றன. இத்தகைய வினாக்கள் முதன் முதலில் எழுப்பப்பட்ட காலம் தான் அறிவின் வேட்கை, ஆய்வுத்தாகம் என்பன மனிதரிடம் குடிபுகுந்த காலம் எனலாம்.

காரியங்களுக்குக் காரணங்கள் உண்டு என்று தெளிந்ததும் அந்தக் காரணங்களுக்கும் காரியங்களுக்கும் எல்லாம் காரணமாக உள்ள முதல் காரணம் மூலகாரணம் ஒன்று இருக்கத் தானே வேண்டும் என்ற எண்ணம் மக்களிடம் தோன்றியது. யாவற்றிற்கும் முதலும் மூலமுமாக விளங்குகின்ற அந்தப் பொருளைப் பரம்பொருள் என்றனர். இந்த முழுமுதல் பொருள் பற்றிய ஆய்வும் தொடங்கியது. மனிதருக்கு இயல்பாக உள்ளது. ஆராய்வூக்கம். ஆராய்ச்சி என்பது தணியாத வேட்கை. அதனால் உந்தப்பட்ட மனிதர்கள் சிலர் தத்துவ ஆராய்ச்சி செய்தனர்.

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொருள் மிகப் பெரிய பொருள். அது பரம் பொருள். ஆய்வாளரோ ஆய்வுப் பொருளோடு ஒப்பிடும் போது அணுவிலும் சிறியவர். அவர்கள் சிற்றறிவுடைய மனிதர்கள். மனிதரின் மட்டுப் படுத்தப்பட்ட புத்திக்கும் விவேகத்திற்கும்; வரம்பும் எல்லையும் அற்ற பரம் பொருளை முற்றிலாக ஆராய்ச்சிக்குள் அடக்குவது, அறிவது என்பவை இயலாத காரியம்.

எத்துணை பலமும், பராக்கிரமமும் படைக்கப்பெற்றவன் ஆகிலும் தான் அமர்ந்திருக்கின்ற ஆசனத்தை அவ்வாறு அமர்ந்து கொண்டே தூக்கிவிட முடியாது. இதிலிருந்து ஓர் உண்மை புலப்படும். எது தன்னை ஆதாரமாகத் தாங்குகின்றதோ அதனை அவனால் பெயர்த்து எடுக்க முடியாது. ஆசனத்தை விட்டு இறங்கிய பின்னரே ஆசனத்தைத் தூக்கமுடியும்.

மனிதனுடைய அறிவோ, ஆற்றலோ, புத்தியோ, விவேகமோ; ஊக்கமோ, வேட்கையோ பரம் பொருளை விட்டு விலகித் தனியாக இயங்கும் தன்மையை அடைந்துவிடவில்லை. இயலாமையும் ஆற்றாமையும் மனிதலட்சணங்கள். மனிதன் இயங்குவதற்குத் துணை தேவை. அந்தத் தேவை பரம் பொருளினாலேயே நிறைவு செய்யப்படுகிறது. அந்த நிலையில் பரம் பொருளை ஆராய்வதற்கும் அறிந்து கொள்வதற்கும் அதன் துணை தேவை. அப்படியானால் அப் பரம் பொருளை தனது குறுகிய அறிவு எல்லைக்குள் மனிதரால் கொண்டுவர முடியாது. மனிதன் நினைக்கின்றான் எதனையும் தன் அறிவுத்திறத்தால், ஆராய்ச்சி முயற்சியால் கண்டறிந்து அதன் உண்மை, பொய்யை அறிந்து கொள்ள முடியும் என்று, சடப் பொருள் சம்பந்தமான ஆராய்ச்சியில் மனிதன் சில வெற்றிகளை அடைந்துள்ளான். ஆனால் பரம் பொருள் அத்தகைய சடப்பொருள் அல்லவே. அவையாவற்றையும் கடந்து நிற்கின்ற முழுமுதற் பொருள் அப் பரம் பொருள்.

மனிதனுடைய மூளை, மிக அற்புதமான அமைப்பாக விளங்குகின்ற போதிலும் நூதனமான பொறியாக உள்ள நிலையிலும் அந்தப் "பென்னம் பெரிய" பரம் பொருளை இந்தச் "சின்னஞ்சிறிய" மனித மூளை எனும் அமைப்பினுள் அடக்க முடியாது என்பது வெள்ளிடைமாலை. அத்துடன் மனிதனின் மூளையோ புத்தியோ அந்தப் பரம் பொருளின் ஒரு சிறிய பாகமே என்பதை உணர்ந்தால் அந்தச் சிறிய பாகத்தினுள் பரம் பொருளை எவ்வாறு அடக்க முடியும் என்பதையும் தெளிந்து கொள்ளலாம்.

பரம் பொருளை விஞ்ஞானரீதியில் விளங்கிக்கொள்ள முயல்பவர்களின் ஆராய்ச்சி வீண் ஆனது. எதை விஞ்ஞானப் பரிசோதனை மூலம் அறிந்து நிறுவ முடியாமல் உள்ளதோ அந்தப் பொருள் இல்லவேயில்லை என்று கூறிவிடு

கிறார்கள். விஞ்ஞான அறிவுக்கு எட்டாத வற்றைப்பொய் என்று கூறி வைப்பதில் எத்துனை பெருமை கொள்கின்றனர். மனித அறிவு, புத்தி, விவேகம் என்பவற்றிற்கு அப்பாற்பட்டதும் விஞ்ஞான ஆய்வு பரிசோதனைகள் ஆகிய வற்றின் எல்லைகளைத் தாண்டியதுமான பரம் பொருள் ஒன்று உண்டு என்பதை அறிந்து கொள்வதற்கு விஞ்ஞான வழி பொருத்தமற்றது. அதற்கு மெய்ஞ்ஞான வழியையே நாட வேண்டும்.

நமது முன்னோர்கள் பரம் பொருளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு மெய்ஞ்ஞான வழியையே நாடினார்கள். பரம் பொருளின் திருவருட் சக்தியின் துணையுடன் உள்ளுணர்வின்மூலம் முனிவர்கள் ரிஷிகள் அருளாளர்கள் பரம் பொருளைப்பற்றி சிறிதளவிலாவது அறிந்து வெளிப்படுத்தியுள்ளனர்.மகா வாக்கியங்களாக அவை நமக்குக் கிடைத்துள்ளன. மிக ஆழமான நுண்ணிய பொருள் கொண்டுள்ள மகா வாக்கியங்கள் உணர்த்துவனவற்றை உள்ளபடி அறிந்து கொள்வதே பெருஞ்சிரமம். பலர் பலவாறு பொருள் கொண்டும் உள்ளனர்.

கற்றது கைம் மண்ணளவு : கல்லாதது காணமுடியாதது; பரமரகசியமாக உள்ளது: உலகளவு எனலாம். இவ்விதம் கற்றலுக்கும்; ஆராய்ச்சிக்கும் அகப்படாத பரமரகசியத்தைப் பற்றியே வேதம்; உபநிஷதம்; பகவத்கீதை, திருமுறைகள், சமய சாத்திரங்கள், முனிவர் களின் மகா வாக்கியங்கள், தருமநூல்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பன விளக்கு கின்றன. இவற்றை எல்லோராலும் புரிந்து கொள்ள முடிவதில்லை.

வெறும் பரிசோதனைகள், வெளிப்படை யான பிரமாணங்கள், விதிகள், யுக்தி, புத்தி என் பவற்றின் துணையுடன் அறிய முடியாத இந்த விடயத்தை அல்லது பொருளை, அப்பரம் பொருளின் அருளைத் துணையாகக் கொண்டு, பக்தி, தியானம், நியமம், தூய்மை, சாந்தி, தவம் முதலிய ஒழுக்கங்களில் நின்றுதான் இதனை ஆராய்ச்சி செய்து அறிந்து கொள்ள முடியும், என்று வேதமும் மற்றும் சமய நூல்களும் கூறுகின்றன. நமது புலன்கள் மனம் ஆகியவற் றிற்கு அடங்காததும் அவற்றின் அனுபவங் களுக்கு அப்பாற்பட்டதுமான பாரமார்த்திக விடயங்களை ஆராய்ச்சி செய்வதற்கும் அறிந்து கொள்வதற்கும் நமது புறக்கரணங்களையும் அகக்கரணங்களையும் அடக்கி, மனதை ஒருவழிப்படுத்தி நிறுத்துவது முன்நிபந்த னையாகும். இதனையே தவம் என்பர். தவம் செய்வார் தங்கருமம் செய்வார். இங்கு தன் கருமம் என்பது பரம் பொருளை அறிதல், தன்னையறிதல், தன்னையுணர்தல், தன்னி றைவு பெறல் என்பவற்றின் மூலமே இது கைகூடும். இவ்வாறு இருந்துமே பரம்பொருள், உயிர்கள், உலகம் என்பனபற்றி பல்வேறு கருத்துக்கள், கொள்கைகள், கோட்பாடுகள் என்பன முன்வைக்கப்பட்டுருந்ததை நாம் அறிவோம்.

மனித மனத்திற்கும் அறிவுக்கும் எட்டாத பரம் பொருளை ஒவ்வொருவரும் அல்லது குழுவினரும் தத்தம் வழியில் வருணிக்கவும் விளக்கவும் முயன்றனர்.

அதன் பயனே வேறுபட்ட கருத்துக்களின் பிறப்பு எனலாம். இவற்றால் பல கொள்கைகள் ஒன்றிற்கொன்று முரணாக தோன்றினவே தவிர எதுவும் முழுமையான வருணனை யையோ, விளக்கத்தையோ, பரம்பொருள் பற்றியோ, உயிர்கள் பற்றியோ, அவற்றிற்கிடை யிலான உறவுகள் தொடர்புகள் பற்றியோ தரவில்லை என்றே கூறவேண்டும்.

பரம் பொருள் பற்றிய ஒவ்வொரு வர்ண னையும் வர்ணிக்கப்பட்ட அளவிற்கு உண்மை யெனலாமே தவிர பரம் பொருள்பற்றிய முழுமை யான வர்ணனையல்ல. ஏழு குருடர்கள் யானை ஒன்றின் வெவ்வேறு அங்கங்களைத் தடவிப் பார்த்து விட்டு அதன்படி யானையை விபரித்து அதுவே யானையின் முழுமையான வடிவம் எனக் கொண்டு, மற்றவர்களின் விவரணங்கள் எல்லாம் பிழை என விதண்டாவாதம் புரிந்த செயலுக்கு ஒப்பாக இதனைக்கூறலாம். இன் னும் சிலர் பரம் பொருளை வரையறுக்க வேண்டி ஆராய்தல், பரம் பொருளை மறுத்தலுக்குச் சமம் ஆகும் என்றும் கூறுவர்.

வேதங்கள் பரம் பொருளை எதிர் மறை வழியில்– நேதி, இதல்ல என்றவாறு வருணிக் கவும், விளக்கவும் முற்பட்டன. இருக்கு வேதத் தில், "இறைவனே"! நீயே எங்கள் தந்தை, எங்கள்

சகோதரன், எங்கள் நண்பன்" என்று கூறப்படும் பகுதி வருகின்றது. இதே கருத்து "இறைவன் எங்கள் தந்தையாக எம்மைப் படைத்தவனாக எமது நண்பனாக உள்ளான்" என அதர்வ வேதத்தில் இடம் பெற்றுருக்கின்றது.

யசுர் வேதத்தில், "இறைவன் எங்கள் நண்பன், எங்கள் தந்தை, எம்மைப் படைத்தவன், அவன் எல்லா நிலைகளையும் அறிந்தவன் அனைத்துப் படைப்புகளையும் அறிந்தவன்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேதங்கள், இறைவன் பற்றிய தெளிவான கருத்தைக் கொண்டுள்ளன. இறைவனாலேயே இப் பிரபஞ்சம் படைக்கப்பட்டுள்ளது என்பதையும் படைப்புகள் அனைத்தும் இறைவனுடன் தந்தை – மகவு உறவு கொண்டிருப்பதையும், அந்த உறவு நட்பின்பால்பட்டது என்பதையும் இக்கூற்றுக்கள் தெளிவுபடுத்துகின்றன. பரம்பொருளையே பதியென்றும், உயிர்களைப் பசு என்றும் அழைப்பர். உயிர்களுக்குத் தந்தையாகவும், தலைவனாகவும் உறவு கொண்டு விளங்குவது பரம்பொருள். அதேவேளை உயிர்களுக்கிடையே உள்ள உறவு சகோதர உறவாக இருப்பதையும் நாம் சிந்தித்து உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

வேத இலக்கியங்கள் இறைபற்றிய சிந்தனையை முன்வைத்துள்ளன. வேதகாலத்து முற்பகுதியில் இது தெய்வம் என எண்ணப்பட்டது, பின்னர் உபநிடத காலத்தில் "பிரம்மம்" எனக் கொள்ளப்பட்டது. இருக்கு வேதத்திலே இந்திரன், அக்கினி, வருணன், வாயு, உருத்திரன், விஷ்ணு எனப் பல தெய்வங்கள் குறிப்பிப்பிடப்பட்டுள்ளன. இயற்கையின் பல்வேறு கூறுகள் இவ்வாறு தெய்வங்களாக உருவகிக்கப்பட்டிருந்தன. உலகின் ஒழுங்கிற்கும் செயற்பாட்டிற்கும் இத் தெய்வங்கள் பொறுப்பாக இருந்தன என்று நம்பப்பட்டது.

பல தெய்வங்கள் வணங்கப்பட்ட போதிலும் வேத காலத்தில் நிலவியது பல தெய்வக் கோட்பாடு அன்று; ஒரு தெய்வ கோட்பாடேயாகும் என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். இதற்குச் சான்று உண்டு. "இந்திரன், மித்திரன், வருணன் முதலிய பல பெயர்களை இட்டு அழைத்தாலும் அழைக்கப்படுபவன் ஒருவனேதான்" இக் கருத்தை புலப்படுத்தும் வேதப்பாடல் ஒன்று சான்றாகக் காட்டப்படுகிறது.

எல்லாத் தெய்வங்களுள்ளும் மேலான தெய்வம் பிரஜாபதி என அழைக்கப்பட்டது. பிரஜாபதி எனும் எண்ணக்கருவே பின்னர் உபநிடத காலத்தில் "பிரம்மம்" என்று கொள்ளப்பட்ட ஒப்பற்ற ஒரே உயிர் பொருள் என்ற சிந்தனை தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்தது என்று அறிஞர் கூறுவர்.

உபநிடதங்கள், பிரம்மம் பற்றிய கருத்தைக் கூறும் போது, "இதுவே உலகம், உயிர் யாவற்றிற்கும் முழுமுதற் காரணமாக நின்று – அவற்றைத் தன்னிலிருந்து தோற்றுவித்து – இயக்கி நிற்பது" என்கின்றன.

"பிரம்மம் பிராணன்களின் பிராணன். அங்கு கண் செல்லாது, வாக்கும் செல்லாது மனமும் செல்லாது. அதை நாம் உள்ளபடி அறிய மாட்டோம்."

பிரம்மம் என்னும் மேலான, நிகரற்ற பரம் பொருளை இவ்வாறு உபநிடதங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. பிரம்மத்தினின்றே சகலமும் தோன்றின என்பதை ஆலம் விதையிலிருந்து ஆலமரம் தோன்றியமையை எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்டுள்ளது. பிரம்மம் ஆனது சகலவற்றிலும் கலந்தும், கட்புலனாகாது மறைந்தும் நிற்கும் நிலையினை, நீரில் கலந்துள்ள உப்புக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

உபநிடதங்களில் பிரம்மத்தையும், ஆன்மாவையும் பற்றிய விபரங்கள் விரிவாகத் தரப்பட்டுள்ளன. பிரம்மம் பற்றிய அறிவினைப் பரஞானம் என்பர். உலகம் சம்பந்தப்பட்ட அறிவை அபர ஞானம் என்கின்றனர். ஆன்மா, தன்னையும், பிரமத்தையும் உள்ளவாறு அறிதல் அவசியம். அதற்கு ஆன்மா பரஞானம் எய்தப் பெற்றிருத்தல் வேண்டும். இதையே உபநிடதங்கள் வற்புறுத்துகின்றன. பரஞானம் பெற்று ஆன்மா விடுதலையானதும் அது பிரம்மமாகவே ஆகி விடுகின்றது.புலன்களை அடக்கி மனதை ஒரு வழிப்படுத்தி, குருவின் துணையுடன் மேற கொள்ளும் தொடர்முயற்சிகளின் மூலமே ஆன்மா விடுதலை சாத்தியமாகும்.

ஆருணி ஒரு ரிஷி. சுவேதகேது என்பவன் ரிஷியின் மகன். ஆச்சிரம கல்வியை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய மகனை நோக்கி "பிள்ளாய் நீ கற்று முடித்து விட்டேன் என்று கூறுகிறாய். ஆனால் எதைக்கற்பதனால் எல் லாம் தெரிய வந்து விடுமோ, அந்த வித்தையைக் கற்று விட்டாயா? சொல்" என்று கேட்டார் ஆருணி ரிஷி. அதற்குச் சுவேதகேது "அப்பா, அந்த வித்தையை நான் கற்றுக்கொள்ளவில்லை. நீங்களே அதைச் சொல்லித்தரவோண்டும்" என்று விநயத்துடன் கேட்டான்.

ஆருணி பின்வருமாறு விளக்குகின்றார். "மண்ணைப் பிசைந்து அதிலிருந்துதான் வெவ் வேறு வகைப்பாத்திரங்களும், பொம்மைகளும், உருவங்களும் சொய்யப்படுகின்றன. செய்த பொருட்கள் ஒவ்வொன்றையும் பானை, சட்டி, ராஜா, ராணிப்பொம்மைகள், நாய், பூனை, என்றெல்லாம் உருவங்களுக்கேற்ற பெயர்க ளால் அழைக்கின்றோம். ஒன்று மாதிரி மற்றது இல்லை. பெயரும் வேறு. ஆனால் அவையாவுமே மண்தான். அதுவே உண்மை. இவையனைத் திலும் ஒரே மண் என்ற உண்மைதான் இருக் கின்றது. இந்த மாதிரி இந்த சம்சாரம் முழுவதும் ஒரே உண்மையினால், ஒரே சத்தினால் உருவா கியிருக்கின்றது.

எல்லாப் பொருள்களும், மரம் செடி கொடிக ளும், மிருகங்கள், பறவைகள், எல்லா மனிதர்க ளும், எல்லா உயிர்களும், அந்த ஒரே தத்துவத்தி னால், ஒரே உண்மையினால் ஒரே சக்தியினால் ஆனவையே. அந்த உண்மையான தத்துவமே ஆன்மா. அதுவே நீ, தத்துவமஸி– என்று விளக்கினார். ஆனால், சுவேதகேதுவிற்குத் தத்துவமஸி பற்றி எதுவும் விளங்கவில்லை.

தத்துவமஸி என்ற சொற்றொடரின் கருத்து அதுவே நீ என்பதாகும். அது என்பது பிரம்மம் எனவே, அந்தப் பிரம்மம் நீயே என்று பொருள் கொள்ளவேண்டும்.

சுவேதகேதுவிற்குத் தத்துவ மஸிபற்றி மேலும் வியக்கம் தந்தார் ஆருணி ரிஷி. ஒரு மரத்தின் எப்பாகத்தை வெட்டினாலும் ஒரே மாதிரியான ரசம் தான் வெளிவரும். அதுவே மரம் முழுவதும் செறிந்துள்ள ஆன்மா. ஆன்மா வெளியேறியதும் ரசம் வற்றிவிட மரம் பட்டுப் போகும். அவ்வாறே ஆன்மா வெளியேறியதும் உடல் இறந்துபோகும். இந்த ஆன்மாவே சத்து. அந்த ஆன்மாவே நீ– அதுவே நீ– தத்துவமஸி.

"சிறிய ஆலம் விதையைப் பிளந்து பார்த்தால் அதனுள் எதையும் காணமுடிவதில்லை. எதை யும் காணமுடியாத படியால் அங்கு ஒன்றுமில்லை என்று கூறமுடியாது. அதில் உள்ள நுண்ணிய ஏதோ ஒன்றிலிருந்துதான் இவ்வளவு பெரிய ஆலமரம் தோன்றி வளர்ந்துள்ளது. அந்த அணிமாவிலிருந்து பிறந்ததுதான் பரந்த இந்த ஆலமரம். அதுவே ஆன்மா. அதுவே நீ – தத்துவமஸி.

"உப்புக் கட்டி கரைந்ததும் நீர் முழுவதும் பரந்து செறிந்து விடுகிறது. கண்ணுக்குப் புலப் படாவிட்டாலும் நீர் முழவதும் உப்புக்கட்டி பரவ யிருப்பதைப் போல சத்தும் உன்கண்ணுக்குப் புலனாகாவிடினுல் எங்கும் எதிலும் வியாபித் திருக்கிறது. அதுவே சத்து, அதுவே பரம் பொருள், அதுவே ஆன்மா அதுவே பிரம்மம். அதுவே நீ – தத்துவமஸி.

பரமாத்மா ஆகாசம் போன்று எங்கும் வியாபித்துள்ளது. அது தூயது; உடல் அற்றது; அழிவற்றது; மாசற்றது எல்லோரையும் பார்க்கக் கூடியது; எல்லாம் அறிந்தது; அனைவற்றிலும் சிறந்தது; தானே தோன்றியது; உயிருக்கு உயிராய் உள்ளது.

ஆனந்த மயமானது பிரம்மம். ஆனந்தத்தில் இருந்துதான் உயிர்கள் அனைத்தும் பிறக் கின்றன. ஆனந்தத்தினாலேயே உயிர் வாழ்கின் றன. மீண்டும் ஆனந்தத்துடன் ஐக்கியமாகி விடுகின்றன. அகில உலகையும் பிரம்மம் போர்த்திக்கொண்டுடிருக்கிறது. ஒரே பரமாத் மாதான் எல்லாப் பிராணிகளிலும் நீக்கமற நிறைந்துள்ளது. (அந்தந்தப்) பிராணிகளுக்கு ஏற்ப வெவ்வேறு உருவங்களைத் தாங்குகின் றது. அது அவற்றின் அகத்திலும் புறத்திலும் உள்ளது.

ஆன்மாவுக்குப் பிறப்பும் இல்லை அழிவும் இல்லை. அது என்றும் இருந்து வருவது. உடல் அழிந்து போன பிறகும் ஆன்மா அழிவதில்லை.

அந்த ஒரே பரமாத்மாதான் அநேக வடிவங்களைத் தாங்குகின்றது. தன் ஆன்மாவிலுள்ளே அதை காண்பவன்தான் ஞானி. அவனுக்குத் தான் நிலைத்த இன்பம் கிட்டுகிறது. ஞானிகள் என்போர் எல்லா பிராணிகளிலும் தம் ஆன்மாவையும் தம் ஆன்மாவை எல்லா பிராணிகளிலும் காணும் பெற்றியர். எல்லாவற்றிலும் ஒரே பிரம்மத்தை ஞானிகள் காண்கின்றனர்.

"எள்ளில் எண்ணெய் போலவும்; தயிரில் நெய்போலவும்; ஊற்றுக்களில் நீர் போலவும்; விறகில் தீ போலவும்; இந்தப் பரமாத்மா ஜீவாத்மாவிடம் உள்ளது" என்று உபநிடதம் கூறுகிறது.

பின்வரும் உபநிடத மகாவாக்கியங்கள் பிரம்மம் தொடர்பான கருத்துக்களை உணர்த்துகின்றன.

"சோ அஹமஸ்மி" – அந்தப் பிரம்மம் நானே.

"தத்துவமஸி" – அது, அப்பிரம்மம் நீயே.

"அஹம் பிரமாஸ்மி" – நானே பிரம்மம்.

இவற்றை உணர்ந்து கொள்பவர், உடலுடன் கூடி வாழும் போதே விடுதலையை அடையப் பெற்றுவிடுவர். இதனை "ஜீவன் முத்தி" என்பர். இவ்வாறு உபநிடதங்கள் பிரம்மம், ஆத்மா பற்றிய சிந்தனைகளைப் புலப்படுத்தியுள்ளன. உபநிடத சிந்தனைகள், வேத சிந்தனைகளின் தெளிவான பகுதி எனக் கொண்டு வேதாந்தம் என்னும் பெயரையும் பெறுகிறது. வேதாந்தம் வாழ்வில் செயற்பாடு ஆகும்போது, மனித வாழ்வு அமைதியும் இன்பமும் பெற்றிலங்கும் என்பது உறுதி.

❖ ❖ ❖

*பொங்கு தனக்கரத்தாள் பொற்புடைய சக்கரத்தாள்*
*எங்கு நலம் தருகின்ற எழிற்கரத்துத் தாமரையாள்*
*தங்கு கின்ற கமலத்தில் தளிரடிகள் தாம் வைத்தாள்*
*தங்கரத்தால் தணமைதரு தனமகளே போற்றியம்மா*

– இலக்குமி ஸ்தோத்திரம்

# ஸ்ரீ நடராஜர் தத்துவம்

சிரோமணி, ஜீ. நடராஜ சுந்தர தீக்ஷிதர்

எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பரம்பொ ருள் நம்மீது கருணை கொண்டு சோதிப்பிழம் பாக வருகிறது. சோதி என்றால் நம் ஊனக்கண் ணால் காண முடியாத அளவுக்கு ஒளி வீசி வருகிறது. அப்படியும் நாம் அனைவரும் அதைக் கண்டு பயனடையமுடிவதில்லை. ஆகவே அது இன்னும் கீழே இறங்கி வருகிறது. நிலவையும் கங்கையையும் தலைமேல் சுமந்து கொண்டு அழகான உருவத்தோடு தோன்றுகிறது. அதனாலும் பயன்பெற முடியாதவர்களுக்காக இரக்கங் கொண்டு, அவர்களை ஈர்க்கும் பொருட்டு ஆட ஆரம்பிக்கிறது. எங்கே அந்த ஆட்டம் என்று கேட்போமானால் தில்லைப்பெ ருமன்றத்தில் பொன்னம் பலத்தில் நடைபெறு கின்றது. அருளே மலர்ந்து அவருடைய திரு வடியாகி இருக்கிறது. ஆண்டவனைக் காட்டி லும் அவருடைய திருவடிகள் சிறந்தது எனக் கூறுகிறார்கள் முன்னோர்கள்:-

*"நின்னிற் சிறந்த நின் தாளிணையவை"*

என்பது பரிபாடல்; மேலும்

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தாரிறை வனடி சேராதார்" குறள்: என்றும் கூறப்பட்டிருக் கிறது. இத்தனைக் கருத்துக்களையும் உள்ள டக்கிச் சேக்கிழார் பெருமான் "உலகெலாமு ணர்ந்து ஓதற்கரியவன்" என்று பாடுகிறார்.

இறைவன் ஐந்தொழில்களைச் செய்கிறார். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதனம் அனுக்ரஹம் என்பவை. துடி ஏந்திய கை ஆக்கல் செயலையும், அபயம் காட்டும் கை பாதுகாத்த லையும், அக்னி ஏந்திய கை அழித்தலையும், ஊன்றிய திருவடி - குஞ்சிதபாதம் அருளையும் குறிக்கிறது.

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப் பதத்தில்உற்ற திரோதம் - முத்தி
நூன்ற மலர்ப்பதத்தே நாடு"

- என்ற உண்மை விளக்கப்பாட்டு இதனை உணர்த்துகிறது.

*"அஜடா பால சந்த்ரேண,*
*அபலாந்தர சக்ஷுஷா,*
*அவாமா, வாமபாகனே*
*வபுஷா மம மூர்த்தய:"*

இதன் கருத்து என்னவெனில்:-

விரிசடையின் கண்ணதாகிய பிறைச் சந்திரனை உடைய வாகாதனவும், உமை யொடு கூடிய இடபக்கத்தை இல்லாததாகவும் இருக்கின்ற எனது சொரூபமுள்ள தம்மினின்றும் வேறுபட்டவர்கள் என்று ஈஸ்வரனால் புகழப்பட்டவர்கள் தில்லைவாழ்தணர்கள் ஆவர். மேலும் ஞானசம்பந்தரும்

*"நீலத்தார் கரிய மிடற்றார் நல்ல நெற்றி மேலுற்ற கண்ணினார் பற்று*
*சூலத்தார் சுடலைப் பொடி நீறணிவார் சடையார்*
*சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம் சேர்தலாற் கழற்சேவடி கைதொழக்*
*கோலத்தா யருளாயுன காரணங் கூறுதுமே"*

*(ஞா. திரு. 3.1.3)*

என்று இவ்வந்தணர்களை நடராஜர் ஸ்வரூப மாகவே கூறுகிறார்.

ஸ்ரீ நடராஜப் பெருமானை வணங்குதலே நாம் பெற்ற மானிடப்பிறவியின் பயன்களாகும்.

# விழா நாயகன் சிவஸ்ரீ. சதா. சுப்ரமண்ய பட்டர் அவர்கள் வழங்கும் பதில் அருளுரை

சிரேஷ்ட சிவாச்சாரியர்களே! வணக்கம். அந்தணப் பெருமக்களே! எமது சிஷ்யர்களே! எனது அன்பிற்குரிய அபிமானிகளே! உங்களுக்கு எனது ஆசிகள்.

நான் இந்தியாவிலே தமிழ்நாட்டிலே பிறந்து, அங்கேயே வித்யார்ச்சனம் பண்ணி விவாகம் செய்தபோதும் இலங்கையிலேயே எனது வாழ்க்கையையும் சமயப்பணியையும் ஆற்றும்படி ஆண்டவன் என் தலையில் எழுதி வைத்தான். இது இறைவன் கட்டளை. எனவேதான் நான் எனது மனைவி மக்களுடன் உங்கள் சமூகத்தில் ஒரு அங்கத்தவனாக வாழ்ந்து வருகின்றேன். நீங்களும் மனமுவந்து என்னையும் எனது குடும்பத்தையும் உங்களுள் ஒருவராக ஏற்று ஆதரித்து வந்துள்ளீர்கள். இருக்கின்ற இடத்தில் செம்மையாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும். இதை மனதில் ஏற்றுக்கொண்டு இந்நாட்டிலே பல இடங்களில் வசிப்பிடங்களை அமைத்து சுகமாக வாழ்கின்றேன். எனக்கு இங்கு அதிக சிரமம் இருக்கவில்லை. பிராம்மண நண்பர்கள் பலர் காலப்போக்கில் சம்பந்தவகையால் உறவினர் ஆனார்கள். அன்பர்கள் நண்பர்கள் ஆனார்கள். எமது சுகங்களுக்கு துணையானார்கள். எனவே நமது குடும்ப வாழக்கை இன்பமானது.

எமது உறவினர், பிள்ளைகள், சிஷ்யர்கள், நண்பர்கள் எனக்கு சதாபிஷேகம் செய்ய முற்பட்டிருப்பது அவர்கள் என் மீது கொண்ட விசுவாசத்தையும் அபிமானத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் நான் மக்களுக்கு ஏதாவது சொல்லியாக வேண்டும். சுருதி யுக்தி அனுபவம் என்பவற்றுள் சுருதியையும் யுக்தியையும் உங்களிடமே விட்டு விடுகிறேன். எனது அனுபவத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு சில வார்த்தைகளை சொல்லுகின்றேன்.

*பத்ரம் கர்ணேபி : ஸ்ருணுயாம தேவா :*
*பத்ரம் பஸ்யேம அக்ஷபிர் யஜத்ரா :*
*ஸ்திரைரங் கைர் துஷ்டுவாம்*
*ஸஸ் தநூபி : வ்யஸேம தேவ*
*ஹிதம் யதாயு :*

இது தத்துவார்த்தமான வேதவாக்கு. இதைக்கடைபிடித்து ஒழுகினால் நன்மைகள் கிட்டும். உலகில் எத்தனையோ நன்மைகள் தீமைகள் உண்டு. நாம் தீமையை விலக்க வேண்டும். நன்மைகளைப் பெற முயற்சிக்க வேண்டும். அப்போது இன்பம் பெருகும். வேத சகாயம் கிட்டும். இதற்காக கடவுள் எமக்கு பகுத்தறிவை தந்துள்ளார். பகுத்தறிவை உபயோகித்தால் நாம் மனிதராக வாழலாம். அதன் பயனாக தெய்வீக நிலைக்கு உயரலாம். அதைப் புறந்தள்ளினால் துன்பப்படநேரிடும்.

*மனஸயேகம், வசஸ்யேகம், கர்மண்யேகம் மஹாத்மனாம்*
*லோகா சமஸ்தா சுகினோ பவந்து*

பெரியோர்கள் மனத்தால், வாக்கால், செயலால் ஒரே நோக்குடையவர். அதுவும் நல்ல நோக்குடையவர். அவ்வாறே நாம் அனைவரும் பெரியோர் வழியைப் பின்பற்றி உயர்வோமாக. சைவாலயங்களில் கிரியைகள் லோபமின்றி அர்த்த புஷ்டியுள்ளனவாக செய்யப்படட்டும் அதற்கான முயற்சிகளை ஆலய தர்மகர்த்தாகள் முன்னெடுத்துச் செல்லட்டும். சைவ குருமார்கள் மக்களால் நன்கு பேணப்பட்டு வாழ வேண்டும். சைவ மக்கள் நமது பாரம்பரிய சைவ கலாச்சாரத்தைப் பேணி பின்பற்றி வாழவேண்டும். குருலிங்க சங்கம வழிபாடு ஓங்கட்டும். நாட்டில் அமைதியும் சாந்தமும் ஒற்றுமையும் நிலவட்டும்.

# நன்றியுரை

எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தந்தையாருடையதும் தாயாருடையதும் சதாபிஷேகத்திற்கான எமது அழைப்பை ஏற்று சமூகம் தந்து இவ்விழாவை சிறப்பித்தமைக்காக எமது மனப்பூர்வமான நன்றி அறிதலை தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

முதற்கண் தாம்பரம் கற்பக விநாயகர் கோவில் சிவாச்சாரியார் சர்வசாதக பூஷணம் சிவஸ்ரீ தே. சு. முத்துக்குமாரு சுவாமிக் குருக்கள் அவர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இலங்கை வந்து சதாபிஷேகக் கிரியைகளையும் அது சம்பந்தப்பட்ட சிறப்பு மலர் வெளியீட்டையும் தலைமை தாங்கி நிறைவேற்றியமைக்காக எமது தந்தையார் சார்பிலும், எமது குடும்பத்தவர் சார்பிலும் எமது மனமார்ந்த நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சதாபிஷேக வைபவத்தை சிறப்பாக நடத்துவதற்கு ஆலோசனை வழங்கியும் முன்னின்று உழைத்தும், உபகரித்தும், எமது பந்துக்கள், சிவாச்சாரியார்கள் அந்தணப் பெருமக்கள், நலன் விரும்பிகள், அன்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்,

மேலும் " சதாயுஷ்யம்" என்கிற மலரை நறுமணமும் நற்கருத்தும் கொண்டு சிறப்புற விளங்குவதற்கு விஷயதானம் செய்து உபகரித்த பெரியோர்கள், அன்பர்கள், அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியை தெரிவித்துத்கொள்ளுகின்றேம். அடுத்து இவ்விழா இனிதே நடைபெற ஏற்றவகையில் " கமலா மோடிஹோல்" மண்டபத்தை ஒழுங்கு பண்ணித்தந்த நிருவாகத்தருக்கும், மண்டப முகாமையாளர் ஸ்ரீ சாம்பசிவ சர்மா ( கண்ணன் ) அவர்களுக்கும் எமது பாராட்டோடு கூடிய நன்றிகள் உரித்தாகுக.

இறுதியாக உங்கள் கையில் தவழும் இந்த அழகிய மலரை குறுகிய காலத்தில் சிறப்பாக வடிவமைத்து அச்சிட்ட " லக்சு கிராபிக்ஸ்" ஸ்தாபனத்தாருக்கும் அதன் ஊழியருக்கும் மிக்க நன்றிகள் உரித்தாகுக.

**மலர் வெளியீட்டுக் குழு.**

*With Best Compliments From :*

☆ ☆ ☆

அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்கல்லால்
பிற ஆழி நீத்தல் அரிது

அந்தணச் செம்மல் பட்டரையாவின் சதாபிஷேகம்
சிறக்க வாழ்த்துகிறோம்

# CINE VIDEO

**For Old & Latest English, Tamil, Sinhala, Hindi
Movies & Audio, Video Recordings,
Electronic Repairs & Filmings.**

**310, Galle Road, Wellawatte, Colombo - 6.**
**Cable : 'CINEVIDEO'**
**✆ 588771, 500630**

*With Best Compliments From:*

❖ ❖ ❖

ஆயிரம் பிறை கண்ட பட்டரையா அவர்கள்,
இன்னும் பல்லாண்டு வாழ்ந்து
நமக்கு நல்வழி காட்ட வேண்டுமென்று
இறைவனிடம் வேண்டுகின்றோம்

❖ ❖ ❖

# World Link Communications

Fax, Telex, I.D.D / Local Calls, Photo Copying,
Copy Typing

**Open 24 Hours**

298, Galle Road, Wellawatte, COLOMBO - 6.
Tel : 503576, 584939
Fax : 94-1-503575
Telex : 23456 GAYA CE

*With Best Compliments From :*

சாந்த சொரூபமும், அமைதியான வாழ்க்கையும்
உடைய பட்டரையா அவர்கள் ஆற்றும்
பூஜை எம் அனைவரையும் காக்கட்டும்

# Vasantha Jewellery (Pvt) Ltd.

**MANUFACTURERS AND EXPORTERS OF GENUINE GOLD JEWELLERY**
**AUTHORIZED MONEY CHANGERS**

11/20, GOLD PLAZA,
SEA STREET,
COLOMBO 11.

TELE : 342266
430624
FAX : 449319

*With Best Compliments From :*

# SUWARNAA
## GOLD HOUSE

**144, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO - 6.**
**✆ 501789**

*With Best Compliments From :*

மந்திரமும் தந்திரமும் மானானை மந்திரத்தால்
அர்ச்சிக்கும் அந்தணன் பட்டரையாவே!
அடிபணிந்தோம்.
தங்கள் சதாபிஷேகம் நமக்கெல்லாம்
வரப் பிரசாதமாக அமையட்டும்

# Sri Murugan Traders

IMPORTERS & EXPORTERS

25, ST. JOHN'S ROAD, COLOMBO 11
TEL : 431503, 330914
FAX : 94-1-338561

*With Best Compliments From :*

"அந்தணர் என்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்"

செந்தண்மை யுடைய சுப்ரமண்யப்பட்டர் அவர்களின்
சதாபிஷேகம் காண வாரீர்

✤ ✤ ✤

# KANDY BATICK CENTRE

**109, 3rd CROSS STREET, COLOMBO 11.**

**☎ 329661**

*With Best Compliments From :*

பரமன் புகழ்பாடி புண்ணியம் சேர் பூசனை செய்
அந்தணன் தாள் பணிந்தேத்தும் ஐயாவை
கந்த மலர் தூவி காணிக்கை செலுத்தியாம்
கரங் கூப்பி வணங்கி கருத்தில் வைத்தோம்

☆ ☆ ☆ ☆ ☆

**East West Marketing (Pvt) Ltd.**

200, Second Floor, George R. De Silva Mawatha, Colombo 13.
Phone : 433263, 431134, 336767
Direct No. : 345074
Telex No. : 23269 EWIMS CE Fax : 331435
Cell Phone : 078-60570 Res : 577800

*With Best Compliments From :*

தேடிச் சென்று ஈசனடி யேத்த
ஓடிப் போகட்டு மவர்வினை யென்று
ஆடிப் பாடியுள்ள முருகி அர்ச்சிக்கும்
கூடிச் சென்று குருபதம் இறைஞ்சுமின்

# Jaya Lalithanghi

## JEWELLERS

**225, GALLE ROAD, BAMBALAPITIYA, COLOMBO 4.**
**TELEPHONE : 595144**

With best compliments to :

Sivasri Subramauya guru
on his Sathabhisheka ceremony
May god bless us to have
Pattar Iyah in our mist for
years to come

WEAUN TRAVELS & TOURS
(PVT) LTD.

No. 111 B, Chatham Street, Colombo 1, Sri Lanka.
Phone : 344275, 072-41895
Res : 27, Hamers Avenue, Colombo 6.
Phone : 588511

*With best compliments from :*

வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ பட்டரையா அவர்களின்
சதாபிஷேக வைபவம் இனிது நிறைவேற
எமது காணிக்கையை செலுத்துகின்றோம்.

# Katpagas

A LAND OF QUALITY TEXTILES

**(CITY SUPER MARKET)**

**66/1/22, 3rd CROSS STREET, COLOMBO 11.**

**✆ 336047**

*With best compliments from :*

# MOSCONS LTD

**175, SRI SUMANATISSA MAWATHA,**
**COLOMBO 12.**

ஓம்



ஸர்வே ஜனா : சுகிநோ பவந்து
ஸமஸ்த மங்களானி ஸந்து

Printed by Laxsu Graphic (Pvt) Ltd. Tel: 330812